REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஓகஸ்ட் 30 வெள்ளிக்கிழமை

தினகரன்

THINAKARAN

தினகரன்

வரு. 92 இல. 207 | Friday 30, August, 2024 | 36பக்கங்கள் | 50/-

UNHRC தீர்மானங்களை இலங்கை ஏற்றுக்கொள்ளாது

யுத்தகால மனித உரிமை மீறல்கள்



யுத்தத்தின் போது 2009 இடம்பெற்றதாகக் கூறப் படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரும் எந்தவொரு 08

யார் என்ன சொன்னாலும்
நாடு முழுவதும் குறைந்த விலையில் தருவது
காகில்ஸ் மட்டுமே



நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளால் நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைக்க இடமளிக்காதீர்கள்

அடுத்த 05 வருடங்கள் இலங்கையின் வெற்றிக்கான காலம்



சிரமங்களுக்கு மத்தியில் பெற்றுக்கொண்ட பொருளாதார ஸ்திரத்தன்மையையும் நாட்டையும் பாதுகாப்போம்



கொள்கைப் பிரகடனத்துக்கு 05 பிரதான கோட்பாடுகள் உள்ளன

இளைஞர்களுக்கு ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு

பாடசாலையிலிருந்து இடைவிலகிய 50,000 பேருக்கு தொழில் பயிற்சிக்கான விரைவான ஒதுக்கீடு

ஊழல் எதிர்ப்பு நிகழ்ச்சி நிரலை செயல்படுத்த குழு

ரணிலுடன் இணைந்து நாட்டை வெற்றிபெறச்செய்ய ஐந்து ஆண்டுகள்

'இயலும் ஸ்ரீலங்கா' தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் இவ்வாறு தெரிவித்துள்ளார்

08ஆம் பக்கம் பார்க்க

பிரதமர் தலைமையில் ஜனஜய பெரமுன புதிய கூட்டணி

செப்டெம்பர் 05 இல் உதயம்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து பிரிந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏனைய அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து உருவாக்கியுள்ள புதிய அரசியல் கூட்டமைப்பு, செப்டெம்பர் 05 இல், அறிமுகம் செய்து வைக்கப்படவுள்ளது.

ஜன ஜய பெரமுன என்றபெயரில் பிரதமர் தினேஷ் குணவர்தனவின் தலைமையில் வோட்டர்ஸ் 08

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் குழு நேற்று வருகை



இலங்கை, இந்திய இருதரப்பு நட்புறவை மேலும் வலுப்படுத்தும் வகையில், உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் நேற்று (29) இலங்கை வந்துள்ளார்.

அஜித் தோவலுடன் நான்கு பேர் இணைந்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான 08

நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவுகளில் இந்திய நிதி உதவியில் Hybrid மின் திட்டம்

முதல் கொடுப்பனவை இலங்கையிடம் இந்தியா கையளிப்பு



நெடுந்தீவு, நயினாதீவு மற்றும் அனலைதீவு உள்ளிட்ட தீவகங்களில் இந்திய அரசு மேற்கொள்ளவுள்ள கலப்பின மின் (Hybrid Power Projects) திட்டங்களுக்கான முதல் கொடுப்பனவை, இந்தியா வழங்கியுள்ளது.

மின்சக்தி, எரிசக்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுலக்ஷன ஜயவர்த்தன மற்றும் இலங்கை நிலையான எரிசக்தி ஆணைக் குழுவின் (SLSEA) தலைவர் ரஞ்சித் சேபால ஆகியோரிடம் இலங்கைக்கான இந்திய 08

ஜனாதிபதி தேர்தல் 1,229 முறைப்பாடுகள்



ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நேற்று முன்தினம் (28) வரை 1,229 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் பிரசார பேரணிகள் நடத்தப்படும் சந்தர்ப்பங்களில், பல்வேறு தாக்குதல் சம்பவங்களும் பதிவாகியுள்ளதாக ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கற்கைகளுக்கான நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனம் யதார்த்தமாக்கப்படும்

மகாநாயக்க தேரர்களிடம் பிரதிகளை கையளித்து உரை



தமது விஞ்ஞாபனத்தை மிகக் குறுகிய காலத்திற்குள் யதார்த்தமாக்கவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை நேற்று வெளியிட்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். இந்த விஞ்ஞாபனத்தின் பிரதிகள் அஸ்கிரி மற்றும் மல்வத்து பீட மகாநாயக்கர்களிடமும் கையளிக்கப்பட்டன. 08

அரசியல் பழிவாங்கல்களுக்கு எமது ஆட்சியில் இடமில்லை

ஊழல்வாதிகளை இணைக்கப்போவதுமில்லை



தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் அரசியல் பழிவாங்கல்கள் இடம்பெறாதென்றும், மக்களின் பணத்தை கொள்ளையிட்டவர்கள் நிச்சயமாக சட்டத்தின் முன்னிறுத்தப்படுவரென வும் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டை வீழ்ச்சியிலிருந்து கட்டியெழுப்பும் வேலைத் 08

கெஹலிய உட்பட நால்வரின் விளக்கமறியல் செப்.12 வரை நீடிப்பு



முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல உட்பட நால்வரை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 12 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை (29) உத்தரவிட்டது.

சந்தேக நபர்கள் நால் வரும் நேற்று (29) 08

தபால் மூல வாக்குச்சீட்டுகள் அடங்கிய பொதிகள் அனுப்பி வைப்பு

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால்மூல வாக்குச்சீட்டுகள் அடங்கிய பொதிகள், உரிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தபால்மூல வாக்குச்சீட்டுக்கள் அடங்கிய பொதிகள் எதிர்வரும் (30) முன்னதாக வாக்களிப்பு மத்திய நிலையங்களுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென பிரதித் தபால் மாஅதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கைகளுக்காக ஆயிரத்துக்கும் மேற்பட்ட தபால் ஊழியர்கள் கடமையில் 08

தமிழர் தரப்பு பொது வேட்பாளர் கருத்தியல் ஒற்றுமையின் ஆரம்பம்

அருண் தம்பிமுத்து நேற்று விளக்கம்



தமிழர் தரப்பு பொது வேட்பாளரை களமிறக்கியுள்ள இந்த நேரத்தில் பேரம் பேசி, ஒப்பந்தங்களை மேற்கொண்டு அதன் மூலமாக தமிழர்களுக்கு ஒரு தீர்வை நோக்கி செல்ல முடியாதெனவும், அதேபோன்று ஒரு சிங்கள தலைவருடன் பேசுவது உகந்த தல்லவெனவும் தமிழர் விடு தலைக் கூட்டணி அருண் 08

நகர்வலம்



மக்கள் பிழையான தீர்மானம் எடுத்தால் பங்களாதேஷுக்கு ஏற்பட்ட நிலை ஏற்படும்

ஐ.தே.க உப தலைவர் அகிலவிராஜ் காரியவசம்

மக்கள் பிழையான தீர்மானத்தை எடுத்தால், பங்களாதேஷுக்கு ஏற் பட்டுள்ள நிலையே எமது நாட்டுக் கும் ஏற்படுமென ஐக்கிய தேசிய கட்சியின் உப தலைவர் அகிலவி ராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமை யகம் சிறிகொத்தவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே, அவர் இதனைக் தெரிவித் துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக் களித்து வெற்றி பெறச்செய்தால், நாடு நெருக்கடிகளுக்கு முகங் கொடுக்க நேரிடும் என அன்று மக் களுக்கு தெளிவுபடுத்தினோம். மக்கள் எங்களை நம்பாததால் பாரிய நெருக்கடிக்கு முகம்கொ டுக்க நேரிட்டது.

அதேபோன்று, தற் போதும் ரணில் விக்கிரம சிங்கவைத் தவிர வேறு யாருக்கு வாக்களித்தாலும் மீண்டும் சில மாதங்களில் நாட்டை கட்டியெழுப்ப ரணில் விக்கிரமசிங்கவே முன்வர வேண்டி வரும்.



நாட்டின் பொருளாதா ரத்தை கட்டியெழுப்ப முடியுமான தலைவரை தெரிவு செய்வதா? அல்லது புதிய ஒருவரை தெரிவு செய்து பரீட்சித்துப் பார்ப்பதா? என்பது மக்களின் தீர்மானத்தி லேயே உள்ளதாகவும் அவர் தெரி வித்துள்ளார்.

அதேபோன்றே எதிர்வரும் தேர் தலில் ரணில் விக்கிரமசிங்கவை தவிர, வேறு யாருக்கு வாக்களித் தாலும் நாடு மீண்டும் பொருளாதார நெருக் கடி நிலைக்கு தள்ளப் படுவதில் எந்த சந்தேக மும் இல்லை எனவும் அவர் கூறினார்.

அதனால் மக்கள் இந்த தேர்தலை விளையாட்டாக கரு தாமல் சரியான தீர் மானம் மேற்கொள்ள வேண்டும் என்பது டன், அவ்வாறு இல்லாவிட்டால், பொருளாதாரத்தில் நல்ல நிலையில் இருந்த பங்களாதேஷிற்கு ஏற்பட் டுள்ள நிலையே எமது நாட்டுக்கும் ஏற்படும் எனவும் ஐக்கிய தேசிய கட்சியின் உப தலைவர் அகில விராஜ் காரியவசம் சுட்டிக்காட்டி யுள்ளார்.

சாதனை வீரன் சஹ்மி சஹீத் ஜனாதிபதியுடன் சந்திப்பு

சஹ்மியின் சாதனைக்கு ஜனாதிபதி பாராட்டு



இலங்கையைச் சுற்றி 45 நாட்களில் 1500 கிலோமீற்றர் தூரம் நடந்து சாதனை படைத்த பேருவளையைச் சேர்ந்த சஹ்மி ஷஹீத் கடந்த புதன்கிழமை (28) ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவை, கொழும்பில் உள்ள ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லத்தில் சந்தித்தார்.

இவர் தனது ஊரான பேரு வளையில் இருந்து தனது பயணத்தை ஜூலை 13ஆம் திகதி ஆரம்பித்து, நாட்டைச் சுற்றி 1500 கிலோமீட்டர் தூரம் நடந்து இந்த சாதனை யைப் பதிவு செய்துள்ளார். அதன்போது பேருவளை, அம் பலாங்கொடை, மிரிஸ்ஸ, ஹிரிகெட்டிய, ரன்ன, ஹம் பாந்தோட்டை, வெல்லவாய, மொனராகலை, சியம்பலான் டுவ, பொத்துவில், நிந்தவூர், செங் கலடி, நிலாவெளி, முல்லைத்தீவு, பரந்தன், பருத்தித்துறை, சுன்னாகம், மன்னார், மெதவச்சி, அநுராதபுரம், புத்தளம், கொழும்பு, மாரவில, நீர் கொழும்பு, கொழும்பு ஆகியமுக்கிய நகரங்களைக் கடந்து (26) பேருவ ளைக்கு திரும்பினார்.

அந்த நடை பயணத்தின் மூலம், இலங்கை அமைதியானது என்பதை யும், எந்தவொரு நபரும் சுதந்திரமா கவும் பாதுகாப்பாகவும் நாட்டில் பயணிக்க முடியும் என்பதையும் உலகுக்கு எடுத்துரைப்பதே அவரது நோக்கமாக இருந்தது.

இந்த பயணத்தின் போது, சமூக வ லை த் த ள ங் க ள் மூலம் தான் பயணிக் கும் இடங்களை பார் வையாளர்களுக்கு தெரி விக்கவும் நடவடிக்கை எடுத்தார். இதன் கார ணமாக, இலங்கையில் உள்ள அழகான சுற்று லாத் தலங்கள் குறித்து உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் ஏராளமான மக்களுக்குத் தெரியப்ப டுத்தவும், அதன் மூலம் இலங்கையின் சுற்று லாத் துறைக்கு அதிக விளம்பரத்தை பெற்றுக் கொடுக்கவும் முடிந் தது.

இச்சந்திப்பில், இந்த இளைஞனின் அர்ப்ப ணிப்பு மற்றும் திறமை யைப் பாராட்டிய ஜனாதிபதி, அவ ருக்கு விசேட நினைவுப் பரிசையும் வழங்கினார். இலங்கையின் சுற்று லாத்துறையை மேம்படுத்துவதற்கு எதிர்வரும் காலங்களில் அவரின் செயலூக்கமான பங்களிப்பை பெற் றுக்கொள்ளவுள்ளதாக ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.



இந்தோனேசிய நாட்டின் 79ஆவது சுதந்திர தினம் கொழும்பில் நடைபெற்றது. இலங்கைக்கான இந்தோனேசிய தூதுவர் எச்.ஈ. டிவ் கிரிஸ்டினா டோபிங் தலை மையில் நடைபெற்ற நிகழ்வில் கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஞாபகார்த்த கேக்கை தூதுவர் சகிதம் வெட்டுவதை படத்தில் காணலாம்.

(படம் - ருக்மல் கமகே)

கணவனின் தாக்குதலில் மனைவி உயிரிழப்பு

ஹபரணை பொலிஸ் பகுதிக் குட்பட்ட பழுகஸ்வெவ பிரதே சத்தில் கணவன் மனைவிக்கு இடையே ஏற்பட்ட தகராறு கார ணமாக கணவன் மனைவியை பொல்லால் தாக்கி கொலை செய் துள்ளதாக பொலிஸார் தெரிவித் தனர்.

குறித்த சம்பவம் (26) திங்கட் கிழமை மாலை இடம்பெற்றுள் ளதாக பொலிசார் தெரிவித்தனர். எப்பாவல பழுகஸ்வெவ பகு தியைச் சேர்ந்த 63 வயதுடைய பெண்ணொருவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

குடும்ப தகராறு காரணமாக குறித்த கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இந்நிலையில் 66 வயதுடைய சந்தேக நபரான கணவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் சம் பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பஹரபரணை பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர்.

ஜனாதிபதி தேர்தலில்

மாத்தறை மாவட்டத்தில் 526 வாக்களிப்பு நிலையங்கள்

(வெலிகம தினகரன் நிருபர்)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு மாத்தறை மாவட்டத் தில் 526 வாக்களிப்பு மத்திய நிலை யங்கள் அமைக்கப்படவுள்ளதாக மாத்தறை மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி கனேஷ அமரசிங்க தெரி வித்தார்.

இதன் பிரகாரம் தெனியாய தேர்தல் தொகுதிக்கு 83 வாக்களிப்பு நிலையங்களும், ஹக்மன தேர்தல் தொகுதிக்கு 79 வாக்களிப்பு நிலை யங்களும் அமைக்கப்படவுள்ளன.

மேலும் அகுரஸ்ஸ தேர்தல் தொகு திக்கு 75, கம்புறுப்பிட்டிய 66, தெவிநுவர 68, மாத்தறை 77 மற்றும் வெலிகம தேர்தல் தொகுதிக்கு 78 வாக்களிப்பு மத்திய நிலையங்கள் அடங்களாக 526 நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இம்முறை மாத்தறை மாவட் டத்தில் 6 இலட்சத்து 86 ஆயிரத்து 175 பேர் (686,175) வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். இவர்களுள் இம்முறை தபால் மூலம் வாக்களிக்க மாத்தறை மாவட்டத்தில் 30,882 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

மாத்தறை தேர்தல் அலுவலகத் துக்கு 32,553 தபால் மூலம் வாக் களிக்க விண்ணப்பித்திருந்தனர். இவற்றுள் 1671 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதாக மாத்தறை மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி கனேஷ அமரசிங்க மேலும் தெரி வித்தார்.

சஜித் பிரேமதாசவை ஆதரித்து இன்று பொதுக்கூட்டம்

திறப்பனை தினகரன் நிருபர்

அநுராதபுரம் நாச்சியாதீவில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச கலந்து கொள்ளும் தேர்தல் பிரசாரக் கூட்டம் இன்று (30) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு திறப்பனை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.எச்.எம். நாசிம் தலைமையில் நாச்சியாதீவு குசவையில் அமைந் துள்ள அவரது இல்லத்தில் இடம் பெறவுள்ளன.

இந் நிகழ்வின் போது முன்னாள் அமைச்சர்களான ரிஷாட் பதி யுதீன், ரவுப் ஹக்கீம் மற்றும் சந்திராணி பண்டார உட்பட மாவட்டத்தின் முக்கிய அரசியல் வாதிகள் பலர் கலந்து சிறப்பிக்க வுள்ளனர்.

கம்பஹா மாவட்டத்தில்

'ஒன்றிணைந்து வெற்றி கொள்வோம்' நிகழ்வு

பாணந்துறை மத்திய விசேட நிருபர்

கம்பஹா மாவட்ட முஸ்லிம் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள "ஒன் றிணைந்து வெற்றி கொள்வோம்" வேலைத்திட்டத்தின் விசேட கூட்டம் இன்று (30) வெள்ளிக் கிழமை மினுவாங்கொடை, காஞ்சனா வரவேற்பு மண்டபத்தில் இரவு 8.00 மணிக்கு நகர அபிவி ருத்தி வீடமைப்பு அமைச்சரும் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பிரசன்ன ரண துங்க மற்றும் ஐக்கிய தேசிய கட் சியின் பிரதித் தலைவரும் ஜனாதி பதியின் ஆலோசகருமான ருவன் விஜேவர்தன தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்த கருத்தரங்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமை யிலான அரசாங்கத்தின் வேலைத் திட்டங்கள் மற்றும் முன்னோக் கிய பயணம் தொடர்பில் விளக் கமளிக்கப்படவுள்ளதாக இந்த நிகழ்வின் ஏற்பாட்டுக் கமிட்டி தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் வெற்றிக் கான செயலணியின் கம்பஹா மாவட்ட முஸ்லிம் பிரிவின் பிரதம அமைப்பாளர் வத்தளை மாபோல நகர சபையின் முன்னாள் தலைவர் ஏ.எச்.எம். நவ்ஷாத் உள்ளிட்ட கம்பஹா மாவட்ட முஸ்லிம் பிரதிநிதிக ளும் பிரமுகர்களும் இதில் கலந் துகொள்ளவுள்ளனர்.

தேக்கு மரக் கடத்தலில் ஈடுபட்ட இரு சந்தேக நபர்கள் கைது

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அநுராதபுரம் பகுதியில் சட்டவி ரோத தேக்கு மரக்கடத்தலில் ஈடு பட்டு வந்த இரு சந்தேக நபர்களை 6 இலட்சம் ரூபாய் பெறுமதிமிக்க தேக்கு மரக்குற்றிகளுடன் அநுராத புரம் பொலிஸார் (26) கைது செய் துள்ளனர். அநுராதபுரம் வட்டார வனவள அதிகாரிகளுக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் பேரில் பொலிசா ரும் வனவள அதிகாரிகளும் மேற் கொண்ட சுற்றிவளைப்பின் போது சந்தேக நபர்களை கைது செய்துள்ள னர்.

ஹிதோகம பகுதியைச் சேர்ந்த இருவரே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளனர்.

சில நாட்களாகத் தேக்கு மரக்கடத் தல் இடம்பெற்று வருவதாக கிடைக் கப்பெற்று வரும் தகவல்களின் அடிப்படையில் அது தொடர்பில் விசாரணைகள் நடைபெற்று வருவ தாகவும் வனவள அலுவலகம் தெரி வித்தது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் களுக்கு எதிராக சட்டரீதியான நடவ டிக்கை எடுக்கப்படும் என அநுராத புரம் வட்டார வனவள அலுவலகம் தெரிவித்தது.

புத்தளத்தில் இலவச மருத்துவ முகாம்

புத்தளம் தினகரன் நிருபர்

அகில இலங்கை ஜம்இய்யத் துல் உலமா புத்தளம் நகரக் கிளை யுடன் புத்தளம் நகர சபை மற்றும் புத்தளம் ஹோமியோபதி வைத் தியசாலை இணைந்து நடாத்தும் இலவச மருத்துவ முகாம் நாளை 31ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் ஜம்இய்யத் துல் உலமா புத்தளம் நகரக் கிளை காரியாலயத்தில் (தக்கியா பள்ளி) இடம்பெறவுள்ளது.

நீரிழிவு நோய், அதிக இரத்த அழுத்தம், பெண்கள் தொடர் பான நோய்கள், அன்றாடம் ஏற் படும் காய்ச்சல், வயிற்று வலி, உடல் பருமன், முடி உதிர்தல், பாடசாலை மாணவர்களின் கிர கிக்கும் ஆற்றல், பித்தப்பை, சிறு நீர்க் கல் அகற்றல், வயிறு சம்பந் தமான நோய்கள், ஆண், பெண் மலட்டுத்தன்மை போன்ற நோய் களுக்கு நிவாரணம் வழங்கப்ப டும்.

இம்முகாமில் பரிந்துரைக்கப்ப டும் மருந்துகள் அனைத்தும் இல வசமாக வழங்கப்படும். வைத் தியர் ஏ.எச்.எம்.இஸ்ரத் பர்வின் இதில் சிகிச்சைகளை வழங்க வுள்ளார். இலவசமாக மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்ப டும்.

ஆண்கள் பெண்கள் இருபாலா ருக்கும் இதில் கலந்துகொள்ள முடியும்.

முஸ்லிம் சமய கலாசார புதிய பணிப்பாளருக்கு குருநாகலில் கௌரவிப்பு



முஸ்லிம் சமய பண்பாட் டலுவல்கள் திணைக்களத் தின் புதிய பணிப்பாளராக அண்மையில் நியமிக்கப்பட் டுள்ள எம்.எஸ்.எம். நவாஸ் அவர்களை பாராட்டி கௌர விக்கும் நிகழ்வு இன்று (30) குருநாகல், பறகஹதெனிய ஜாமிஉல் அன்வர் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் இடம் பெறவுள்ளது.

பள்ளிவாசலின் தலைவர் எஸ்.எம். இபாம் தலைமை யில் ஜும்ஆத் தொழுகையின் பின் நடைபெறவுள்ள இவ் கௌரவிப்பு விழாவில் பிரதே சத்தைச் சேர்ந்த முக்கிய பிரமு கர்கள், கல்விமான்கள், பள் ளிச்சங்க நிர்வாகிகள் உட்பட புத்திஜீவிகள், ஊர் பிரமுகர் கள் என பெருந்திரளானோர் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு 'bag' உற்பத்தி பயிற்சித் திட்டம்

திறப்பனை தினகரன் நிருபர்

மிஹிந்தலையில் இளம் தொழில் முயற்சியாளர் களுக்கான பை 'bag' உற்பத்தி பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் அண்மையில் மிஹிந்தலையில் இடம் பெற்றது. மிஹிந்தலை பிரதேச செயலாளர் அனு ருத்த நாயக்க பண்டாரவின் வழிகாட்டலில், உதவி பிரதேச செயலாளர் குமார சந்திரகுப்த தலைமை யில், மிஹிந்தலை பிரதேச செயலகத்தில் இப்பேக் 'bag' உற்பத்தி பயிற்சி நிகழ்ச்சி நடைபெற்றது.

இளம் தொழில் முனைவோரை ஊக்குவிக் கும் நோக்கில் கடந்த 20 அன்று இடம் பெற்ற bag தைக்கும் குறித்த நடைமுறைப் பயிற்சி நிகழ்ச்சியில் சுமார் 50 க்கும் மேற்பட்ட தொழில் முனைவோர் கலந்து கொண்டிருந்தனர்.

ஒரு நாள் கொண்ட bag உற்பத்திப் பயிற்சித் திட் டத்தை நிபுணத்துவம் வாய்ந்த தையல் பயிற்று விப்பாளர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்பட் டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

கல் எளிய அலிகார் மாணவர்கள் லேக்ஹவுஸ் வருகை



மினுவாங்கொடை கல்வி வலயம், கல் எளிய அலிகார் மகா வித்தியாலயத்தின் உயர்தரம் கற்கும் மாணவர்கள் கல்விச்சுற்றுலா மேற்கொண்டு நேற்று கொழும்பிலுள்ள லேக்ஹவுஸ் நிறுவனத்தை பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம். சஸ்ரின் தலைமையில் பார்வையிட வருகை தந்தபோது எடுத்த படம்.

(படம் - நிசங்க விஜேரட்ன)

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

தினகரன்
THINAKARAN
தினகரன்

2024 ஓகஸ்ட் 30 வெள்ளிக்கிழமை

தொழுகை நேரம்

சுபஹ் - 04.47
லுஹர் - 12.13
அஸர் - 03.22
மஃரிப் - 06.21
இஷா - 07.32

இன்றைய சுபதினம்

குரோதி வருடம் ஆவணி 14

ராகுகாலம் : காலை : 10.30 - 12.00வரை
சுபநேரம் : காலை : 12.15 - 1.15வரை

யோகம்: சித்தயோகம்

திதி: துவாதசி

அஜித் தோவல் பிரதமருடன் சந்திப்பு இருதரப்பு உறவை வலுப்படுத்த உறுதி

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான பொருளாதார ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கு அதிக வாய்ப்புகள் இருப்பதால், பரஸ்பர நன்மைக்காக இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த வேண்டுமென, இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல்,நேற்று (29) கொழும்பில் பிரதமர் அலுவலகத்தில் பிரதமர் தினேஷ் குணவர்தனவை சந்தித்த போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையுடனான ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்த இந்தியா விரும்புவதாகவும், முன்னுரிமை நலன்கள் குறித்து பிரதமரின் கருத்துக்களைக் கேட்டறிந்ததாகவும் அஜித் தோவல் தெரிவித்தார்.

பாரிய அளவிலான மற்றும் சிறிய அளவிலான மாற்று எரிசக்தி திட்டங்களுக்கு இந்தியா ஆதரவு அளித்ததற்கு பிரதமர் நன்றியும் தெரிவித்தார்.



ISIS அமைப்பை ஊக்குவித்த நபரை தடுத்து வைத்து விசாரிக்க உத்தரவு

ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பை ஊக்குவிக்கும் வகையில், சமூக வலைத்தளங்களில் அறிக்கைகளை வெளியிட்டதுடன் அந்த அமைப்பின் சின்னங்கள் அடங்கிய மோதிரங்களை வைத்திருந்ததாக கூறப்படும் நபர் ஒருவரை, தடுத்து வைத்து விசாரிக்க கொழும்பு மேலதிக நீதவான் பசான் அமரசேன உத்தரவிட்டுள்ளார். சந்தேக நபரை கைது செய்து நீதிமன்றத்தில்

08

தன்னைப் பற்றி வெளியான செய்தியை மறுத்தார் ரங்கே

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் ரங்கே பண்டார தனது பதவியை இராஜினாமா செய்துள்ளதாகவும், கட்சியை விட்டு விலகப்போவதாகவும் வெளியான செய்தியை அவர் மறுத்துள்ளார். "இந்த வதந்தி பற்றி எனக்குத் தெரியாது. இந்த செய்தியை ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ளது. அப்படியொரு செய்தி எனக்கு தெரியாது," என மறுத்துள்ளார்.



விசேட திட்ட அபிவிருத்தி அமைச்சராக நியமிக்கப்பட்ட அலி சாஹிர் மௌலானா, நேற்று (29) கொள்ளுப்பிட்டி ஆர்.டி.மெல் மாவத்தையிலுள்ள விசேட திட்ட அபிவிருத்தி அமைச்சில் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார். நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஸ், திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எம். முஷாரப் மற்றும் அமைச்சின் செயலாளர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.
(படம் தெஹிவளை,கல்கிஸ்ச விசேட நிருபர்)

தீர்க்கமான முடிவு எடுக்காவிட்டால் மீண்டும் வரிசை யுகம் ஏற்படுவது உறுதி

முன்னாள் அமைச்சர் பைசர் முஸ்தபா

ஹம்பாந்தோட்டையிலிருந்து லோரன்ஸ் செல்வநாயகம்

எதிர்வரும் தேர்தலில் நாட்டு மக்கள் தீர்க்கமான முடிவை எடுக்காவிட்டால்,மீண்டும் வரிசை யுகம் உருவாவதை எவராலும் தடுக்க முடியாதென முன்னாள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

நாடு சஜித் பிரேமதாச அல்லது அனுர குமார திசாநாயக்கவின் கைகளுக்கு செல்லுமானால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கட்டியெழுப்பப்பட்டுள்ள நாட்டின் பொருளாதாரம் மீண்டும் அதல பாதாளத்திற்கு செல்லும் என்றும் அவர் தெரிவித்தார். இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முடிவெடுத்தபோது நாட்டை முன்னேற்றுவதற்கு மிகவும் பொருத்தமானவர் அவரே என்றும் அனைத்து இன,மத மக்களையும் சமமாக மதித்து பாதுகாக்க கூடியவர் ரணில் விக்ரமசிங்க மட்டுமே என்பதை உறுதிசெய்தே அவருக்கு ஆதரவளிக்க கட்சி தீர்மானித்தது. இது மிகவும் சரியான தீர்மானம் என்பதை நான் குறிப்பிட விரும்புகின்றேன். அதேபோன்று நாட்டின் எதிர்காலம் தொடர்பில் சிந்திக்கும் அனைத்து மக்களும் இன, மத, கட்சி பேதமின்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே ஆதரவளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

08

பகல், இரவு கிரிக்கெட் போட்டி நாளை

மெதமுலன டி. ராஜபக்ச தேசிய பாடசாலையின் பகல் இரவு, மாபெரும் கிரிக்கட் போட்டி இரண்டாவது தடவையாக நாளை (31) சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. கித்சிறி கங்கநாத்தின் ஆதரவுடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த கிரிக்கெட் போட்டியில், பாடசாலையின் முன்னாள் மாணவர்களும் கலந்து கொள்ளுமாறு பாடசாலை பழைய மாணவர் சங்கம் கேட்டுக்கொள்கிறது.

இலவசமாக கிடைத்ததை ஏற்காது வீண் செலவில் பதவிக்கு வருவோரை நம்பக்கூடாது

லோரன்ஸ் செல்வநாயகம் , ஹம்பாந்தோட்டை குறூப் நிருபரும்

தேர்தலில் போட்டியிடும் 39 வேட்பாளர்களில் நாட்டின் மீதும் நாட்டு மக்கள் மீதும் அக்கறையுடன் செயற்படுபவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டுமே என, முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இலவசமாக கிடைத்த பதவியை ஏற்காதவர்கள், தற்போது கோடிக் கணக்கில் செலவழித்து நாடு முழுவதும் அலைந்து அந்தப் பதவியைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சிக்கின்றனர். மக்கள் இவர்களை நம்பக் கூடாது என்றும் அவர் தெரிவித்தார். நாட்டு மக்கள் இம்முறை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதன் மூலமே, தமக்கான சிறந்த எதிர்காலத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என தெரிவித்த அவர், நாட்டு மக்களுக்கு கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை இழந்து விடக் கூடாது அவ்வாறு இழந்தால் மீண்டும் அந்த சந்தர்ப்பம் கிடைக்காது என்றும் தெரிவித்தார்.

'இயலும் ஸ்ரீலங்கா' ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் மாபெரும் மக்கள் பேரணிக் கூட்டம் நேற்று ஹம்பாந்தோட்டை நகரில் இடம் பெற்றது. அந்த கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் உரையாற்றும்போதே முன்னாள்அமைச்சர் ராஜித சேனாரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

கூட்டத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

இம்முறை தேர்தலில் 39 பேர் போட்டியிடுகின்றனர். அவர்கள் அனைவரும் எந்தளவு நிதியை அதற்காக செலவிடுகின்றார்கள். குறிப்பாக அனுர திசாநாயக்க போன்றோர் தினமும் கோடிக்கணக்கான ரூபாய்களை செலவிடுகின்றார்கள். அவர்களுக்கு அந்தளவு நிதி எங்கிருந்து வந்தது?

2022 ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷ

08

நோயாளர்களை பராமரிப்போருக்கு யாழில் இலவச தங்குமிடம்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உள்ளக நோயாளர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கென, தங்குமிட வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

வெளி மாவட்டங்களிலிருந்தும் யாழ். மாவட்டத்தின் தீவுப் பகுதியிலிருந்தும் வருவோர். இந்த விடுதியில் இலவசமாகத் தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளர்களை பராமரிக்க வருவோருக்கே இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த தங்குமிட வசதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலிருந்து 600 மீற்றர் தூரத்தில் இல. 76, வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ளது.

இந்த வசதியை பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உள்ள நோயாளர் பராமரிப்பு சேவை நிலையத்துடன அல்லது 076 1000046 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும்.

இந்த சேவையை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நலன்புரிச் சங்கமும், சைவத் தமிழ் நிறுவகமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

மனக்கணித போட்டியில் பங்கேற்று சாதனை

தேசிய மனக்கணித போட்டியில் UCMAS அக்கரைப் பற்று சார்பாக,எய்ம்ஸ் சர்வதேச பாடசாலையில் கல்வி பயிலும் செல்வி, றிஷாட் பைஸ் அலிஷா மர்யம், செல்வி. றிஷாட் பைஸ் ஆயிஷா மர்யம் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி வாகை சூடிக் கொண்டனர்.

கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் அண்மையில், இடம்பெற்ற இப்போட்டியில், நாடு பூராகவுமிருந்து சுமார் 3000 பேர் பங்குபற்றினர். இப்போட்டியில் வெற்றியீட்டிய சகலரும், இந்தியாவில் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள சர்வதேச போட்டியில் பங்குபற்றுவதற்கான தகுதியையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



மனுவின் மீதான விளம்பர அறிவித்தல்

கொழும்பில் அமைந்துள்ள மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில் (அதன் குடியியல் நியாயாதிக்கத்தில்)

எச்.சி. (சிவில்) இல. 47/2024/CO

2007 ம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பாகத்தின் கீழ் கொழும்பு 05, நாரஹேன்பிட்ட, நாவல வீதி, இல. 151 ஐச் சேர்ந்த PV899 எனும் கம்பனி பதிவிலக்கத்தைக் கொண்ட **எல். எச். பியசேன அன்ட் கம்பனி (தனியார்) லிமிடெட்** என்னும் பெயரால் அறியப்பட்ட கம்பனியை நீதிமன்றத்தினால் ஒடுக்குவதற்கான விண்ணப்பம்

கொழும்பு 03, காலி வீதி, 2வது மாடி, இல. 267ஐச் சேர்ந்த **செங்கடகல.'. பைனான்ஸ் பி எல் ஸி**

மனுதாரர்

மேற்கூறப்பட்ட கம்பனியை ஒடுக்குவதற்கான விண்ணப்பத்தை 2024 ஆண்டு ஜூன் மாதம் 28 ஆம் திகதி கொழும்பு 03, காலி வீதி, 2வது மாடி, இல. 267 ஐச் சேர்ந்த செங்கடகல .'.பைனான்ஸ் பி எல் ஸி கொழும்பில் அமைந்துள்ள மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில் (அதன் குடியியல் நியாயாதிக்கத்தில்) சமர்ப்பித்துள்ளதெனவும், மேற்படி மனுவானது 2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதி நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு வருவதாக உத்தரவிடப்பட்டுள்ளதாகவும், மேற்குறித்த மனு தொடர்பாக மேற்கூறப்பட்ட கம்பனியின் கடன் தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் எவராவது ஆதரவு வழங்கவோ அல்லது எதிர்ப்புக் கட்டளை பிறப்பிக்கவோ விரும்பின் அந் நோக்கத்திற்காக அவர் மேற்குறித்த மனுவின் விசாரணையின் போது நேரடியாகவோ அல்லது அவரது சட்டத்தரணி மூலமாகவோ அல்லது அவரது பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி மூலமாகவோ தோன்றலாம் எனவும், மேற்படி மனுவின் ஒரு பிரதி மேற்கூறப்பட்ட கம்பனியின் எந்தவொரு கடன் தருநருக்கும் அல்லது உதவுதொகை செலுத்துநருக்கும் பரிந்துரைக்கப்பட்ட கட்டணத்தை செலுத்துவதன் மூலம் கீழே குறிப்பிடப்பட்டவரினால் வழங்கப்படுமெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சரவணன் நீலகண்டன் லோ அசோசியேட்ஸ்
மனுதாரரின் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணிகள்
எச் கியூ கொழும்பு (மாடி 4) இல.
464A டி.பி. ஜாயா மாவத்தை
கொழும்பு 10

குறிப்பு :
மேற்குறித்த மனுவின் விசாரணையின் போது சமுகமளிக்க எவராவது நோக்கம் கொண்டிருப்பின் மேலே குறிப்பிடப்பட்ட மனுதாரரின் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணிகள் சரவணன் நீலகண்டன் லோ அசோசியேட்ஸ்க்கு, அவரின் நோக்க அறிவித்தலை எழுத்தில் தெரிவித்து நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ சமர்ப்பிக்க வேண்டும். இந் நோக்க அறிவித்தலில் குறித்த நபரின் பெயர் மற்றும் விலாசத்தைக் குறிப்பிடவேண்டும் அல்லது ஒரு கம்பனியாயின், கம்பனியின் பெயர் மற்றும் விலாசத்துடன் குறிப்பிட்ட நபரினால் அல்லது கம்பனியினால் அல்லது அவரது பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணியினால் (அவ்வாறு எவரேனுமிருப்பின்) கையொப்பமிடப்பட்டு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பலாம். தபால் மூலம் அனுப்பப்படுவதாயின் மேற்குறிப்பிடப்பட்ட மனுதாரரின் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணிகளிற்கு போதிய கால அவகாசத்துடன் 2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதி பிற்பகல் 1 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

சரவணன் நீலகண்டன் லோ அசோசியேட்ஸ்
மனுதாரரின் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணிகள்

பெறுகை அறிவித்தல்

கொள்ளளவு 40 கி. வோட் கொண்ட தேறிய கணக்கிடல் சூரிய சக்தி அமைப்பை வழங்குதல்

மாலிம்பட பிரதேச சபை, மாலிம்பட, பாலடுவ, மாத்தளை
பெறுகை இலக்கம் - MPS/02/02/solar

1. மாலிம்பட பிரதேச சபையின் பெறுகைக் குழுவினால் வலையமைப்பிற்கு உட்படுத்தப்பட்ட தேறிய கணக்கிடல் சூரிய சக்தி அமைப்பை திட்டமிட்டு போக்குவரத்துச் செய்து வழங்கி நிறுவி செயற்படுத்தி பராமரிப்பதுடன் நடத்திச்செல்வதற்கு பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
2. இக்கேள்விகோரல் தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமையின் கீழ் நடத்தப்படும்.
3. 2024 ஓகஸ்ட் 30 முதல் 2024 செப்டெம்பர் 18 வரையான காலத்திற்குள் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுவதுடன் இதற்காக ஆர்வம் காட்டுகின்ற தகைமை கொண்ட கேள்விதாரர்களுக்கு கேள்விப் பத்திரங்களை சமர்ப்பிக்க முடியும்.
4. மேலதிக தகவல்களுக்கு கீழ்க்காணும் அலுவலக இணையதளத்தை பாவியுங்கள்

முகவரி: செயலாளர், மாலிம்பட பிரதேச சபை, மாலிம்பட பாலடுவ, மாத்தறை
இணையதள முகரி - www.malimbadaps.lk
தொ.பே. இலக்கம் அலுவலகம் 041-2240208 (செயலாளர்/வழங்கல் அதிகாரி)

தலைவர்,
மாலிம்பட பிரதேச சபை பெறுகைக் குழு,
மாலிம்பட பிரதேச சபை. மாலிம்பட,
பாலடுவ, மாத்தறை.

2011ஆம் ஆண்டு 40ஆம் இலக்கச் சட்டத்தின் திருத்தப்பட்ட 2006ஆம் ஆண்டு 5ஆம் இலக்கம் எனும், நிதி மோசடியை தடுக்கும் சட்டத்தின் 8(3) பிரிவின் பிரகாரம் விடுக்கப்படும் அறிவித்தல்

இல. 260/02, பதல வத்த, உலஹிட்டியாவ, மித்தெனிய எனும் முகவரியில் வசிக்கும் 742641880V எனும் இலக்க தேசிய அடையாள அட்டை உரிமையாளரான ஷாந்த ஜயவர்தன மற்றும் 787891500V எனும் இலக்க தேசிய அடையாள அட்டை என்பவரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள பின்வரும் சகல ஆதனங்களையும் வெளியேற்றுவதை அல்லது கைமாற்றுவதைத் தடுக்கும் பொருட்டு 2024-02-15ஆம் திகதி குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணை பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரினால் 2011ஆம் ஆண்டின் 40ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்கம் எனும் நிதி மோசடியைத் தடுக்கும் சட்டத்தின் 7(1) அத்தியாயத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் வழங்கப்பட்ட வலுவிழக்கச் செய்யும் கட்டளை அந்தச் சட்டத்தின் 8(2) அத்தியாயத்தின் பிரகாரம் தங்காலை மேல் நீதிமன்றத்தில் ML/01/2024 இலக்க வழக்கின் கீழ் 2024-02-19ஆம் திகதி உறுதி செய்யப்பட்டதன் பின் 2024-08-09ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டு மீண்டும் 2024-09-06ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

காணி மற்றும் கட்டிடம்

01. சட்டத்தரணி மற்றும் பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ.எல். ஹேரசிங்க அவர்களால் எழுதி சான்றுபடுத்தப்பட்ட 2016-02-18ஆம் திகதிய, 271ஆம் இலக்க விற்பனை பத்திரத்தினால் கொள்வனவு செய்யப்பட்டுள்ள மீகஸ்ஆர, ஜலம்பிட்டிய முகவரியில் அமைந்துள்ள 17.75 பேர்ச் காணி மற்றும் இரண்டு மாடி வீடு உட்பட்ட ஆதனம். (வலஸ்முல்ல காணிப் பதிவகத்தில் L 29/83ஆம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது)

02. சட்டத்தரணி மற்றும் பிரசித்த நொத்தாரிசு யசலால் கொடிதுவக்கு அவர்களால் எழுதி சான்றுபடுத்தப்பட்ட 2009-04-01ஆம் திகதிய, 2460ஆம் இலக்க விற்பனை பத்திரத்தினால் கொள்வனவு செய்யப்பட்டுள்ள வீரகுட்டிய வீதி, மித்தெனிய முகவரியில் அமைந்துள்ள இரண்டு மாடிக் கட்டிடம். (வலஸ்முல்ல காணிப் பதிவகத்தில் E 205/295ஆம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது)

வாகனம்

வாகன இலக்கம்	வகை	செஸி இலக்கம்	என்ஜின் இலக்கம்
SP CBL - 9157	TOYOTA	NZT260-3217209	INZ-8860517
SP KM - 8704	TOYOTA	NZT2603092927	INZ-D830394

மேற்கூறிய ஆதனங்களின் தமது உரிமத்துவத்தை நீதிமன்றத்தில் உறுதி செய்வதற்காக உண்மையான மூன்றாம் தரப்பினருக்கு வசதிகள் வழங்கும் பொருட்டு அறிந்துகொள்வதற்காக பிரசுரிக்கப்படுகின்றது.

நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம்,

பதிவாளர்,
தங்காலை மேல் நீதிமன்றம்.

தினகரன்
THINAKARAN கிகைரன்

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆவணி மாதம் 13ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ஸபர் பிறை 24

குறள் தரும் சிந்தனை



நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பின்
பிறர்க்குரியாள் தோள்தோயா தார்

பிறன் மனைவியின் தோளைத் தீண்டாதவரே கடல் சூழ் இவ்வுலகின் பெருமைகளை அடைவதற்குத் தகுதியுடையவர்.

பொருளாதார அபிவிருத்தியை நோக்கிய தேர்தல் விஞ்ஞாபனம்

ஜனாதிபதித் தேர்தலுக்கான தேர்தல் விஞ்ஞாபனத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று கொழும்பில் வெளியிட்டுள்ளார். எதிர்வரும் செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்லின் பொருட்டு இவ்விஞ்ஞாபனம் ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்டிருக்கிறது.

நாட்டின் 09 ஆவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான இத்தேர்தலில் 39 பேர் அபேட்சகர்களாகப் போட்டியிடுகின்றனர். அவர்கள் தேர்தல் பிரசார மேடைகளில் முன்வைக்கும் திட்டங்களை விடவும் ஜனாதிபதியின் விஞ்ஞாபனம் உள்ளடக்கியுள்ள திட்டங்கள் நடைமுறைச் சாத்தியமானவையாக விளங்குகின்றன என்று பொருளாதார வல்லுநர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இத்தேர்தலில் போட்டியிடும் 39 அபேட்சகர்களில் ஜனாதிபதி முன்வைத்துள்ள திட்டங்கள் அர்த்தபூர்வமானவையாகவே இருக்கும் என்பதுதான் சமூக ஆர்வலர்களின் கருத்தாக உள்ளது.

ஏனெனில் இத்தேர்தலில் போட்டியிடும் ஏனைய அபேட்சகர்களை விடவும் பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகி வங்குரோத்து அடைந்திருந்த நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கான சவாலை ஜனாதிபதி தான் துணிந்து ஏற்றார். நாட்டை மீண்டும் ஒருபோதும் அமைதியானதும், துன்பமின்றி வாழக்கூடியதுமான தேசமாகக் கட்டியெழுப்ப முடியுமென எவரும் எண்ணிப் பாராத காலமாக இருந்தது.

நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதி முன்னெடுத்த பொருளாதார வேலைத்திட்டங்கள் குறுகிய காலப்பகுதி முதல் பயனளிக்கத் தொடங்கின. அதன் பிரதிபலன்கள் மக்களைச் சென்றடைவதற்கான வேலைத்திட்டங்களையும் அவர் முன்னெடுத்தார். அதன் பயனாக எரிபொருள் வரிசைகளில் சிக்குண்டு கஷ்டப்பட்ட மக்களை மிகவும் குறுகிய காலத்திற்குள் தானம் வழங்கும் தன்சல் வரிசைகளில் புன்னகையுடன் இருக்கும் நிலைமைக்கு மாற்ற முடிந்தது.

பொருளாதார வீழ்ச்சிக் காலத்தில் நாடும் மக்களும் முகம்கொடுத்த நெருக்கடிகளும் அசௌகரியங்களும் கட்டம் கட்டமாக நீங்கலாயின. பொருளாதாரம் மீட்சி பெற்று மறுமலர்ச்சி பாதையில் பிரவேசித்திருக்கிறது.

இந்தச் சூழலில்தான் இந்நாடு ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொண்டிருக்கிறது. அதனால் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி சுயேச்சை அபேட்சகராக இத்தேர்தலில் களமிறங்கியுள்ள ஜனாதிபதி வரலாற்று முக்கியத்துவம் மிக்க தேர்தல் விஞ்ஞாபனத்தை முன்வைத்திருக்கிறார்.

இவ்விஞ்ஞாபனத்தை வெளியிட்டு வைத்து உரையாற்றிய ஜனாதிபதி, 'இன்று இந்நாட்டில் மக்கள் புன்னகைப்பதைக் காணும் போதும், கஷ்டத்துடனேனும் மூவேளையும் சாப்பிடுவதைக் காணும் போதும், முச்சக்கர வண்டி – வாகனங்கள் பாதையில் செல்வதைக் காணும் போதும், நீண்ட நாட்களுக்குப் பின்னர் புத்தாண்டு, தைப்பொங்கல், ரமழான் கொண்டாட்டங்களை மகிழ்ச்சியுடன் கொண்டாடப்படுவதைக் காணும் போதும், வெசாக் தோரணங்கள், நத்தார் அலங்கரிப்புக்கள் பாதைகளின் இரு புறங்களிலும் நிர்மாணிக்கப்படும் போதும், ஆயிரக்கணக்கில் அன்னதானம் வழங்குதல்கள் நாடு முழுவதும் ஏற்பாடு செய்யப்படுவதைக் காணும் போதும், நான் எல்லையற்ற மகிழச்சியடைகின்றேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார வீழ்ச்சிக் காலத்தில் நாடும் மக்களுக்கும் அந்தளவுக்கு கடுமையான நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்திருந்தார்கள். அவ்வாறான மிக மோசமான நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுத்த ஜனாதிபதி அடுத்த ஐந்தாண்டுகளை இலக்காகக் கொண்டு இவ்விஞ்ஞாபனத்தை தயாரித்து இருக்கிறார்.

வீழ்ச்சியடைந்திருந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கும், ஒரு நாட்டை மாற்றமடையச் செய்வதற்கும் வாய்ப்பேச்சால் முடியாது. செயற்பாட்டால்தான் அவற்றை செய்ய முடியும். அதனை கடந்த இரு ஆண்டுகளில் ஜனாதிபதி செய்து காட்டியுள்ளார். இதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலையையும் இன்றுள்ள நிலையையும் ஒப்பிட்டுப் பார்க்க முடியும்.

நாடு மீண்டும் அவ்வாறான பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாவதைத் தவிர்ப்பதற்கு நாட்டை சரியான பாதையில் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அதற்காக கடந்த இரு வருட காலப்பகுதிக்குள் பாராளுமன்றத்தில் பல்வேறு சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அவற்றில் ஊழலுக்கு எதிரான சட்டம், மத்திய வங்கிச் சட்டம், தேர்தல்கள் செலவு ஒழுங்குவிதிகள், மறுசீரமைப்பு பணியகம், அரச கடன் முகாமைத்துவச் சட்டம், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க சட்டம், நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம், அரச கடன்கள் சட்டம், மின்சக்தி சட்டம், பெண்களை வலுவூட்டும் சட்டம், அரச நிதி முகாமைத்துவச் சட்டம், பொருளாதார பரிமாற்றச் சட்டம் போன்றன குறிப்பிடத்தக்கவை. மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்து பயணித்துக் கொண்டிருக்கும் பொருளாதாரத்தை உறுதியுடன் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு தேவையான சட்ட ஏற்பாடுகளை இந்த சட்டங்கள் உள்ளடக்கியுள்ளன.

இவ்வாறு நாட்டின் நிலைபேறான பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான களத்தை சீரமைத்திருக்கும் சூழலில் ஜனாதிபதி முன்வைத்திருக்கும் இவ்விஞ்ஞாபனம் பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்டுள்ளது. அதற்குத் தேவையான திட்டங்களையும் அது உள்ளடக்கியுள்ளது. குறிப்பாக நாட்டில் மீண்டும் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட ஒருபோதும் இடமளிக்காத திட்டங்களாக அவை விளங்குகின்றன. அதாவது நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு தேவையான அனைத்துத் திட்டங்களையும் உள்ளடக்கியதாக அமைந்திருக்கிறது இந்த விஞ்ஞாபனம்.

ஆகவே நாட்டுக்கு மறுமலர்ச்சியும் மக்களுக்கு சுபிட்சமான வாழ்வும் கிடைக்கப்பெற இந்த விஞ்ஞாபனம் வித்திடும் என உறுதிபடக் கூறலாம்.

editor.tkn@lakehouse.lk

மலையக மக்களுக்கு அஹிம்சை வழியில் அடையாளம் பெற்றுக் கொடுத்த தலைவர்

அமரர் எஸ்.தொண்டமானின் 111 ஆவது பிறந்ததினம் இன்று

இலங்கையின் அரசியல் தலைவர்களில் மக்கள் உள்ளத்தில் நீங்காத இடத்தைப் பெற்றுள்ள ஒருவராக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் திகழ்கின்றார்.

கொள்கையில் தெளிவு, நெஞ்சிலே துணிவு, செயலிலே வேகம், ஓயாத உழைப்பு, தளராத நம்பிக்கை ஆகிய ஐந்து அம்சங்களைக் கொண்டவராக அமரர் தொண்டமான் விளங்கினார். தொழிலாளர்களின் உரிமைகளுக்காகப் போராடப் புறப்பட்டவர் அவர். அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் 111ஆவது (30.08.2024) பிறந்ததினம் இன்றாகும்.

மலையக பெருந்தோட்டத்துறை மக்கள் அன்றைய அரசாங்கங்களாலும் தோட்ட நிர்வாகங்கள் மற்றும் கம்பனிகளாலும் மனிதாபிமான மற்ற முறையில் நடத்தப்பட்டனர். பாகுபாடுகள், பாரபட்சங்கள், ஒடுக்குமுறைகள், பழிவாங்கல் ஆகியவை இந்த இரு தரப்புகளால் கடைப்பிடிக்கப்பட்டன.

இதேவேளை பெருந்தோட்டங்களில் தொழிலாளர்கள் திடீர் திடீரென வேலையில் இருந்து நீக்கப்பட்டனர். தோட்டங்களில் இருந்து விரட்டப்பட்டனர். அவர்களது அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டன. இந்நிலையில் தொழிலாளர் சமூகம் நசுக்கப்படுவதற்கு கடும் ஆட்சேபனை தெரிவித்து அக்காலத்தில் வேலைநிறுத்தப் போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

1946 ஆம் ஆண்டு நடைபெற்ற உருளவள்ளி தோட்டத்தில் இடம்பெற்ற போராட்டத்துடன் தான் தொண்டமான் அவர்களின் போராட்ட வரலாறு ஆரம்பமானது. மடக்கும்புர, மடுல்கலை, கலா பொக்க போராட்டங்களும் முக்கியத்துவம் பெறுகின்றன.

அவரது போராட்டங்களின் பயனாக வரட்சிக் காலத்திலும், மழைக் காலத்திலும் சம்பளத்தில் எந்தவித மாற்றமும் ஏற்படுத்தப்படவில்லை. அதேவேளை ஒரு நாள் பேருக்கு எடுக்கப்பட வேண்டிய கொழுந்தின் எடையிலும் கட்டுப்பாடு விதிக்கப்படவில்லை. ஒரு நாள் பேருக்கு 25 தொடக்கம் 30 இறாத்தல் கொழுந்து பறிக்கப்பட வேண்டும் என விதிமுறை கொண்டு வந்தார்கள். இதே போன்று பல தோட்டங்களிலும் ஒரு நாள் பேருக்கு எடுக்கப்பட வேண்டிய எடையை ஒரே விதமாக கொண்டிருக்கப்படவில்லை. அவற்றில் சில தோட்டங்களில் ஒரு நாள் பேருக்கு கூடுதலான கொழுந்தை பறிக்க வேண்டுமென தோட்ட நிர்வாகம் நிர்ப்பந்தித்தது. குறைவாக பறிக்கப்பட்ட கொழுந்திற்கு அரை பேர் போடப்பட்டது. தோட்ட நிர்வாகங்கள் ஒரு நாள் பேருக்கு கொழுந்தின் எடையை தங்களின் இஷ்டப்படி நிர்ணயித்ததின் விளைவாக பலர் கஷ்டப்பட்டும் முழுப்பயனை அடையவில்லை. கடைசி காலத்தில் தேயிலைகள் கருகி கொழுந்துகள் குறைந்து விடுகின்றன. இந்த சமயத்தில் அதே நிர்ணயிக்கப்பட்ட எடையை எதிர்பார்க்க முடியாது. அதற்காக தோட்ட நிர்வாகங்கள் கொழுந்தின் எடையில் கடும் வரட்சிக்காலத்தில் ஒரு மாற்றத்தை புகுத்தவில்லை.











இந்த விதமான தோட்ட நிர்வாகங்களின் கெடுபிடிகளின் மத்தியில் அவர்களின் விமோசனம் அளிக்கும் திட்டமாகவும், தொழிலாளர்களுக்கு நியாயபூர்வமான ஒரு சம்பளத்தினை கூட்டு ஒப்பந்தத்தின் ஊடாக பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் தலைமையில் சம்பள கூட்டு உடன்படிக்கை முதலாவது கூட்டு ஒப்பந்தம் 1967 ஆம் ஆண்டும், இரண்டாவது தடவையாக 1992 ஆம் ஆண்டும் ஏற்படுத்தப்பட்டது. இந்த கூட்டு உடன்படிக்கையானது தோட்டத் தொழிலாளர்களின் மத்தியில் ஒரு சக்தி வாய்ந்த ஆயுதம்.

இன்று மலையகத் தமிழ் அரசியல்வாதிகள் அமைச்சர்களாகவும், பிரதி அமைச்சர்களாகவும், உள்ளனர். இவற்றுக்கெல்லாம் முன்னுதாரணமாக மலையகத்தில் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானே இலங்கையில் முதலாவது அமைச்சராக விளங்கினார். அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் இ.தொ.கா தலைவராக இருந்த போது உலகத் தலைவர்கள் சர்வதேச தொழிற்சங்க பிரமுகர்கள் ஆகியோரை சந்தித்து பெருந்தோட்டத்துறை மக்களின் கஷ்டங்களையும், அவலங்களையும் வெளிப்படுத்தி இவர்களது மேம்பாட்டிற்காக சர்வதேச மட்டத்தில் குரல் எழுப்பி வந்தார்.

எட்டு தசாப்தங்களாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இலங்கையில் மட்டுமல்ல, தெற்காசியாவிலேயே மிகப் பெரிய தொழிற்சங்கமாக விளங்கி வருகின்றது. அதன் உறுப்பினர்களாக ஆயிரக்கணக்கான சிங்களத் தொழிலாளர்களும் உள்ளனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் உறுப்பினர்கள் தோட்டத்துறையின் எல்லாப் பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாக இருக்கின்றனர். அத்துடன் வாலிபர், மாதர் பிரிவுகள் பலம் வாய்ந்தவையாக இருக்கின்றன. கல்வி, தொழிற்பயிற்சி கலை, கலாசாரம், இலக்கியம், விளையாட்டுத்துறை, சமூக சீர்திருத்தம் போன்றவற்றை தொழிலாளரின் வாழ்க்கையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மேற்கொண்டு வருகின்றது.

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் கட்டமைப்பு மிகவும் இறுக்கமானது. தோட்ட மாவட்ட, மாநில, தேசிய மட்டங்களாகப் வகுக்கப்பட்டு இறுக்கமாக நிர்வாக, நிதி விடயங்களில் பிணைக்கப்பட்டுள்ளன. மலையக அரசியலின் இன்றைய மலர்வு இ.தொ.கா பாசறை தந்ததாகும்.

அமரர் தொண்டமான் 1977 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தில் அமைச்சரவை அமைச்சராக விளங்கினார். ஆட்சியாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியும், அஹிம்சை வழியிலும் பல்வேறு போராட்டங்கள் ஊடாகவும் பிரார்த்தனை இயக்கத்தினூடாகவும் 1985 ஆம் ஆண்டு பிரஜாவுரிமைச்சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேறியது. இதைத் தொடர்ந்து வாக்குரிமையும், தேசிய அந்தஸ்தும் கிடைத்தன. இது அமரர் தொண்டமான் ஆற்றிய சேவைகளில் பெரியதாகும்.

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் 111ஆவது பிறந்ததினத்தில் மலையக மக்கள் அன்னாரின் பணிகளை இத்தருணத்தில் நினைத்துப் பார்ப்பது அவசியம்.

தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளுக்காக போராடும் மாபெரும் இயக்கம் இ.தொ.கா

அமரர் தொண்டமானின் ஏற்பாட்டில் இடம்பெற்ற போராட்டங்களின் பயனாக ஆண்கள், பெண்கள் இருபாலாருக்கும் 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் தொடக்கம் சமசம்பளம் வழங்கப்பட்டது

1985 ஆம் ஆண்டு மாபெரும் பிரார்த்தனை இயக்கத்தினையும், மௌனப் போராட்டத்தையும் ஆரம்பித்து நாடற்றவர்கள் என்று கருதப்பட்ட இலங்கைவாழ் இந்திய வம்சாவளியினர் அனைவருக்கும் குடியுரிமை பெற்றுக் கொடுத்தவர் இ.தொ.காவின் மறைந்த தலைவர் அமரர் தொண்டமான் ஆவார்.



சின்காலத்தில் ஒரு மாற்றத்தை புகுத்தவில்லை.

இந்த விதமான தோட்ட நிர்வாகங்களின் கெடுபிடிகளின் மத்தியில் அவர்களின் விமோசனம் அளிக்கும் திட்டமாகவும், தொழிலாளர்களுக்கு நியாயபூர்வமான ஒரு சம்பளத்தினை கூட்டு ஒப்பந்தத்தின் ஊடாக பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் தலைமையில் சம்பள கூட்டு உடன்படிக்கை முதலாவது கூட்டு ஒப்பந்தம் 1967 ஆம் ஆண்டும், இரண்டாவது தடவையாக 1992 ஆம் ஆண்டும் ஏற்படுத்தப்பட்டது. இந்த கூட்டு உடன்படிக்கையானது தோட்டத் தொழிலாளர்களின் மத்தியில் ஒரு சக்தி வாய்ந்த ஆயுதம்.

இன்று மலையகத் தமிழ் அரசியல்வாதிகள் அமைச்சர்களாகவும், பிரதி அமைச்சர்களாகவும், உள்ளனர். இவற்றுக்கெல்லாம் முன்னுதாரணமாக மலையகத்தில் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானே இலங்கையில் முதலாவது அமைச்சராக விளங்கினார். அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் இ.தொ.கா தலைவராக இருந்த போது உலகத் தலைவர்கள் சர்வதேச தொழிற்சங்க பிரமுகர்கள் ஆகியோரை சந்தித்து பெருந்தோட்டத்துறை மக்களின் கஷ்டங்களையும், அவலங்களையும் வெளிப்படுத்தி இவர்களது மேம்பாட்டிற்காக சர்வதேச மட்டத்தில் குரல் எழுப்பி வந்தார்.

எட்டு தசாப்தங்களாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இலங்கையில் மட்டுமல்ல, தெற்காசியாவிலேயே மிகப் பெரிய தொழிற்சங்கமாக விளங்கி வருகின்றது. அதன் உறுப்பினர்களாக ஆயிரக்கணக்கான சிங்களத் தொழிலாளர்களும் உள்ளனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் உறுப்பினர்கள் தோட்டத்துறையின் எல்லாப் பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாக இருக்கின்றனர். அத்துடன் வாலிபர், மாதர் பிரிவுகள் பலம் வாய்ந்தவையாக இருக்கின்றன. கல்வி, தொழிற்பயிற்சி கலை, கலாசாரம், இலக்கியம், விளையாட்டுத்துறை, சமூக சீர்திருத்தம் போன்றவற்றை தொழிலாளரின் வாழ்க்கையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மேற்கொண்டு வருகின்றது.

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் கட்டமைப்பு மிகவும் இறுக்கமானது. தோட்ட மாவட்ட, மாநில, தேசிய மட்டங்களாகப் வகுக்கப்பட்டு இறுக்கமாக நிர்வாக, நிதி விடயங்களில் பிணைக்கப்பட்டுள்ளன. மலையக அரசியலின் இன்றைய மலர்வு இ.தொ.கா பாசறை தந்ததாகும்.

அமரர் தொண்டமான் 1977 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தில் அமைச்சரவை அமைச்சராக விளங்கினார். ஆட்சியாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியும், அஹிம்சை வழியிலும் பல்வேறு போராட்டங்கள் ஊடாகவும் பிரார்த்தனை இயக்கத்தினூடாகவும் 1985 ஆம் ஆண்டு பிரஜாவுரிமைச்சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேறியது. இதைத் தொடர்ந்து வாக்குரிமையும், தேசிய அந்தஸ்தும் கிடைத்தன. இது அமரர் தொண்டமான் ஆற்றிய சேவைகளில் பெரியதாகும்.

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் 111ஆவது பிறந்ததினத்தில் மலையக மக்கள் அன்னாரின் பணிகளை இத்தருணத்தில் நினைத்துப் பார்ப்பது அவசியம்.

சவரிமுத்து தேவதாஸ்
சிரேஷ்ட ஊடக இணைப்பாளர்
இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்

மட்டக்களப்பு நூலகத்துக்கென நூல்களை அன்பளிப்பு செய்த செல்லையா இராசதுரை

மட்டக்களப்பு மாநகர சபையின் முதலாவது முதல்வரும், பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சரும், எழுத்தாளருமான செல்லையா இராசதுரை அவர்களினால் மட்டக்களப்பு பொதுநூலகத்திற்கான பெறுமதி வாய்ந்த ஒரு தொகை புத்தக தொகுதி இராஜாங்க அமைச்சர் எஸ். சந்திரகாந்தனிடம் கிடைக்கப் பெறும் வகையில் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் பிரதிச் செயலாளர் வை. சந்திரகுமார் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

குறித்த புத்த தொகுதியானது இராஜாங்க அமைச்சரினால் மட்டக்களப்பு நூலக புத்தக வள ஒருங்கிணைப்பு குழு செயலாளர் சாம்பசிவம் பரணீதரனிடம் இராஜாங்க அமைச்சரின் பிராந்திய காரியாலயத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

முன்னாள் பிரதேச அபிவிருத்தி, இந்து சமய கலாசார தமிழ்மொழி அமுலாக்கல் அமைச்சரான செல்லையா இராஜதுரை அவர்கள் 1949 ஆம் ஆண்டு தமிழரசு கட்சியின் உருவாக்கத்தில் பங்கெடுத்து, கிழக்கு மாகாணத்தில் தமிழரசு கட்சியினை சிறப்பாக வழிநடத்தி அதை வளர்த்தெடுத்த பெருமைக்குரியவர். 1956 ஆம் ஆண்டிலிருந்து தமிழரசு கட்சியின் வேட்பாளராக களம் இறங்கி மட்டக்களப்பு தொகுதியில் தொடர்ச்சியாக ஐந்து தேர்தல்களில் வெற்றியீட்டினார்.



ஜே.ஆர் ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தில் இணைந்து பிரதேச அபிவிருத்தி, இந்துசமய கலாசார தமிழ்மொழி அமுலாக்கல் அமைச்சராக பதவி வகித்த அவர், 1982 ஆம் ஆண்டு மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த இசை நடன கல்லூரியை (விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவனம்) நிறுவியிருந்ததுடன் மட்டு மண்ணில் நிலைபேறான பல்வேறு அபிவிருத்திகளையும் மேற்கொண்டிருந்தார்.

மேலும் அமைச்சராக இருந்த காலத்தில் இலங்கையில் தமிழ் மொழியினை அரச கரும மொழியாக ஏற்றுக் கொள்ளும் பொருட்டு, 1956 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அரச கரும மொழி சட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி 12 ஆவது சட்ட திருத்தத்தை உருவாக்கினார்.

1990 ஆம் ஆண்டு அரசியலில் இருந்து ஓய்வு பெற விரும்பிய அவருக்கு மலேசிய நாட்டின் தூதுவர் பணியை வழங்கியது இலங்கையரசு. 1994 ஆம் ஆண்டு வரை அப்பணியை திறம்பட செயல்படுத்தி பின்னர் அரசியலில் இருந்தும் பொதுவாழ்விலிருந்தும் தனது 67 ஆவது வயதில் ஓய்வு பெற்றிருந்தார்.

தற்போது 97 ஆவது வயதை அடைந்துள்ள நிலையில் அவர் இந்தியாவில் வாழ்ந்து வருகிறார். அவர் இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் அவர்களினால் ஸ்தாபிக்கப்பட்டு வரும் மட்டக்களப்பு பொதுநூலகத்திற்கான நூல்களை தனது வாழ்த்துச் செய்தியுடன் அனுப்பி வைத்துள்ளார்.

செல்லையா பேரின்பராசா
துறைநீலாவணை நிருபர்

கச்சத்தீவு அருகே

நடுக்கடலில் படகு மூழ்கி மாயம்; இந்திய மீனவர் சடலமாக மீட்பு

மன்னார் குறூப் நிருபர்

கச்சத்தீவு அருகே ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து விசைப்படகில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போன கடற்தொழிலாளரொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த 26 ஆம் திகதி டெல்வின் ராஜ் என்பவருக்கு சொந்தமான விசைப்படகில் மீன்பிடிக்க சென்ற டெல்வின் ராஜ், வெள்ளைச்சாமி, சுரேஷ், எமரிட் ஆகிய நான்கு மீனவர்களும் மீன் பிடித்து விட்டு திரும்பி வந்து கொண்டிருக்கையில் புயல் காற்று காரணமாக நடுக்கடலில் படகு மூழ்கி விபத்துக்குள்ளானது. அப்போது மூழ்கிய படகிலிருந்த டெல்வின் ராஜ், சுரேஷ் ஆகிய இரண்டு மீனவர்களும் நீந்தி இலங்கை கடற்படையினரின் உதவியுடன் யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணை தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு விமானம் மூலம் தாயகம் திரும்பியுள்ளதாக அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் மாயமான மீனவர்கள் எமரிட் மற்றும் வெள்ளைச்சாமி ஆகிய இருவரையும் ராமேஸ்வரம் மீன்வளத்துறை அதிகாரிகளின் அனுமதியோடு சக மீனவர்கள் இரண்டு நாட்களாக தேடி வந்தனர். இந்நிலையில் நேற்று முன்தினம் நடுக்கடலில் மாயமான கடற்தொழிலாளர் எமரிட் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மற்றும் காணாமல் போன வெள்ளைச்சாமியை தேடும் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்றன.



இதனையடுத்து பிரேத பரிசோதனைக்காக ராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது. விபத்து குறித்து மரைன் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

வடக்கின் உதயம்

சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளின் பவள விழாவும் 'அறம் பாலிக்கும் ஞான மோகனம்' நூல் வெளியீடும்



தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி செ. மோகன தாஸ் சுவாமிகளின் பவள விழாவும் 'அறம் பாலிக்கும் ஞான மோகனம்' என்ற நூல் வெளியீடும் நாளை (31.08.2024) சனிக்கிழமை காலை 8:30 மணிக்கு ஓய்வுபெற்ற அதிபர் ஆ. சிவநாதன் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வரவேற்பு நடனத்தை பண்டாரவளை மகாவித்தியாலய மாணவிகளும் வரவேற்புரையை ஆசிரியர் க. கைலைநாதனும் ஆசியுரைகளை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் பிரம்மஸ்ரீ ப. மனோகர குருக்கள் ஆகியோர் ஆற்றுவர்.

நிகழ்வின் சிறப்புரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திர மௌலீசன் லலீசன் ஆற்றுவார்.

நிகழ்வில் வெளியிடப்படவுள்ள அறம் பாலிக்கும் ஞான மோகனம், என்ற நூலின் வெளியீட்டுரையை கே.எஸ். சிவஞானராசா ஆற்றுவார்.

சந்நிதியான் ஆச்சிரமத்தால் போசிக்கப்படும் நிறுவனங்கள் சார்ந்து மாவட்ட ரீதியான பிரதிநிதிகள் வாழ்த்துரைகள் வழங்குவர். ஆசிரியை சசிரேகா ஜெயராசன் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை சார்பில் வாழ்த்துப்பா வழங்குவார்.

யாழில். விஷ ஜந்து தீண்டியதில் ஒருவர் உயிரிழப்பு

பருத்தித்துறை நிருபர்


யாழ்ப்பாணத்தில் விஷ ஜந்து தீண்டியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கைதடி வடக்கை சேர்ந்த இராசையா தர்மசேனன் (வயது 45) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

காணியொன்றை துப்புரவு செய்துக் கொண்டிருந்த வேளை விஷ ஜந்து இவரை தீண்டியுள்ளது.

அதனையடுத்து அவரை அங்கிருந்து மீட்டு, யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் அறிக்கையிட்டுள்ளனர்.

நல்லூர் கந்தசுவாமி கோயில் கைலாச வாகனத் திருவிழா





யாழ். விசேட நிருபர்

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தின் 20ஆம் திருவிழாவான கைலாச வாகனத் திருவிழா நேற்றுமுன்தினம் மாலை சிறப்பாக நடைபெற்றது. முருகப்பெருமான், வள்ளி, தெய்வானை சமேதரராய் உள்வீதியுலா வந்து, தொடர்ந்து கைலாச வாகனத்தில் எழுந்தருளி அடியார்களுக்கு அருட்காட்சியளித்தார்.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம்

கரவெட்டி தினகரன் நிருபர்



வரலாற்றுச் சிறப்பு மிக்க வடமராட்சி துன்னாலை அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

17 தினங்கள் தொடர்ச்சியாக நடைபெறும் மஹோற்சவத்தின் முதலாம் திருவிழா எதிர்வரும் 7 ஆம் திகதி வரை நடைபெறும்.

நாட்டை முன்னெடுத்துச் செல்லக்கூடிய ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க

தொழில் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் தெரிவிப்பு

பொகவந்தலாவ நிருபர்



நாட்டை முன்னெடுத்துச் செல்லக்கூடிய அனுபவமுடைய ஒரே தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என தொழில் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் (28) கொழுப்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனை தெரிவித்த அவர்,

இந்த நாட்டை வழி நடத்திச் செல்ல அனுபவமுடைய ஒருவருக்கு வழிவகையினை அமைத்துக் கொடுத்தால் மாத்திரமே நாட்டில் தமிழ், சிங்களம், முஸ்லிம் மக்கள் சிறப்பாக வாழ முடியும்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகின்ற 39 பேரில் புதிதாக ஒருவருக்கு இந்த நாட்டை ஒப்படைத்தால் நாட்டை வழிநடத்திச்செல்ல முடியாது. புதிதாக ஒருவர் நாட்டை பொறுப்பேற்றால் பயிற்சியை மேற்கொள்ள மாத்திரமே முடியும். அவர்கள் பயிற்சிப் பெற்று நாட்டை வழமைக்கு கொண்டு வருவதற்குள் நாட்டைவிட்டு எமது உயிர்கள் பிரிந்து விடும். இங்கு பயிற்சி பெறுவதற்கு நேரகாலங்கள் போதாது. எனவே அனுபவம் வாய்ந்தவர்களிடம் நாட்டை கையளித்தால் மாத்திரமே சிறந்த வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல முடியும்.

மலையக பெருந்தோட்ட மக்களின் சம்பள பிரச்சினை கடந்த நான்கு வருடங்களாக காணப்பட்டது. பெருந்தோட்ட மக்களின் காணிப் பிரச்சினையும் உரிமை தொடர்பான பிரச்சினைகளும் 200 வருடங்கலாக காணப்படுகின்றன. தேவையானபோது ஓடி ஒளிந்தவர்கள் இன்று மலையக மக்கள் மீது அன்பு கொண்டு மலையக மக்களை தேடி வாக்கு சேகரிக்க முயற்சி செய்கிறார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

புலமைப் பரிசில் மாணவர்களுக்கு இலவச மாதிரி வினாத்தாள்கள்

2024 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையை எதிர்நோக்கவுள்ள மாணவர்களுக்கு, எதிர்பார்க்கை வினாக்கள் உள்ளடங்கிய மாதிரி பரீட்சை வினாத்தாள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

பெறுபேறுகளை அதிகரிக்க வேண்டும் என்ற எண்ணக்கருவின் கீழ், வேர்ல்ட்ன் ஆக்ஷன் பவுண்டேசன் மற்றும் லங்கா விஷன் ஆக்ஷன் பவுண்டேசன் ஆகியவற்றின் ஸ்தாபகர் சுபாஷ் சுந்தர்ராஜின் நிதிப் பங்களிப்பில் நுவரெலியா கல்வி வலயத்தின் கோட்டம் 3 இல் உள்ள 30க்கும் அதிகமான தமிழ் பாடசாலைகளுக்கு இவ்வாறு வினாத்தாள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

பாடசாலையின் அதிபர் மற்றும் பொறுப்பாசிரியர்களிடம் குறித்த நிகழ்ச்சி திட்டத்தின் முகாமையாளர் ரா.கவிஷான் வினாத்தாள்களை கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




மலைச்சாரலி

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு

50 ரூபாவை கூட பெற்றுக்கொடுக்க முடியாதவர்கள் இன்று 1700 ரூபா சம்பளத்தை விமர்சிக்கின்றார்கள்

மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவிப்பு

பொகவந்தலாவ நிருபர்



நல்லாட்சி அரசாங்கத்தில், பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 50 ரூபாவைக்கூட பெற்றுக் கொடுக்க முடியாதவர்கள் இன்று சம்பளமாக 1700 ரூபாவை பெற்றுக் கொடுத்ததை விமர்சனம் செய்வதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொட்டகலையில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போது இதனை தெரிவித்த அவர்,

நாட்டில் எட்டு ஜனாதிபதிகளோடு இணைந்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

அதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் ஜீவன் தொண்டமானின் திறமைகளை இனங்கண்டு நீர் வளங்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்புக்கான அமைச்சு பதவிகளை வழங்கியுள்ளார். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார பிரச்சினைக்கு மத்தியில் மலையகத்தில் ஒரு வருடத்தில் பாரிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம்.

அமைச்சர் ஜீவன் தொண்டமான் அனைத்து மாவட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீட்டை வழங்கியுள்ளார். இதில் அதிகமாக கல்வித்துறைக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கொடுத்த வாக்குறுதிகளை தற்போது நிறைவேற்றி வருகிறோம். பாடசாலை, ஆலயம், சுயதொழில் போன்றவற்றுக்கான அனைத்து உபகரணங்களையும் வழங்க நாம் தயாராகிவருக்கின்ற நிலையில், தேர்தல் ஆணைக்குழுவில் மாற்று கட்சியினர் சென்று முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், அரசாங்கத்தோடு இருக்கும் போது வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளது.

அன்று நாடு பொருளாதார பிரச்சினையில் இருந்தபோது நாட்டை பொறுப்பேற்க எவரும் முன்வரவில்லை. ஆனால் இன்று மாத்திரம் 39 ஜனாதிபதி வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர் என அவர் தெரிவித்தார்.

மகளின் முகத்தை தீக் குச்சியால் எரித்து காயப்படுத்திய தந்தை

தனது மகளின் முகத்தை தீக் குச்சியால் எரித்து காயப்படுத்திய குற்றச்சாட்டில் தந்தையொருவர் கைது செய்யப்பட்டுள்ள சம்பவம் பண்டாரவளை, லியன் கஹவெல பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

மகளை காயப்படுத்திய குற்றச்சாட்டில் பண்டாரவளை, லியன் கஹவெல பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான சந்தேகநபரை லியன்கஹவெல பொலிஸார் நேற்று (29) கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவத்தில், 12 வயதுடைய தரம் 7 இல் கல்வி கற்கும் சிறுமியே பாதிக்கப்பட்டுள்ளதாகவும், காயமடைந்த சிறுமி தியத்தலாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சிறுமியின் தாய் தேயிலை தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்து வருவதாக தெரிவிக்கும் லியன்கஹவெல பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


ஜனாதிபதி ரணிலின் வெற்றிக்காக உக்குவளையில் தேர்தல் பிரசாரம்



மாத்தளை சுழற்சி நிருபர்

ஜனாதிபதி தேர்தலில், சுயேட்சை வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதி செய்யும் முகமாக, உக்குவளை நகரில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து, பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

விளையாட்டு துறை மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹண திலநாயக்க தலைமையிலான குழுவினர், நகரின் வர்த்தக நிலையம் மற்றும் அரச அலுவலகங்களுக்கு நேரடியாகச் சென்று துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து ஜனாதிபதியின் வெற்றிக்காக ஆதரவு திரட்டி வருகின்றனர். இராஜாங்க அமைச்சருடன் இரத்தோட்டை பிரதேச சபையின் முன்னாள் எதிர்கட்சித் தலைவர் அதுல விக்கிரமநாயக்க மற்றும் உக்குவளை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்கள் மாத்தளை தொகுதி ஐக்கிய தேசிய அமைப்பாளர் உட்பட பலர் தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



புடவைக் கைத்தொழில் திணைக்களம்

கைத்தறி நெசவுக் கைத்தொழில் விற்பனை சந்தை 2024
விற்பனைக் கூடங்களை வழங்குதல்

2024 டிசம்பர் 06, 07 மற்றும் 08
BMICH

புடவைக் கைத்தொழில் திணைக்களத்தினால் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் கைத்தறி நெசவுக் கைத்தொழில் ஆடைகள் விற்பனை சந்தை 2024 டிசம்பர் 06,07,08 ஆகிய மூன்று தினங்களிலும் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப திறந்த வளாகத்தில் (Open Air) நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

40 விற்பனை கூடங்களைக் கொண்ட இந்த விற்பனை சந்தையில் விற்பனை கூடங்களை ஒதுக்குதல்

2024 ஓகஸ்ட் 30ம் திகதி முதல் இடம்பெறவுள்ளது.

இவ் விற்பனை கூடங்கள் கைத்தறி/ மின் நெசவுக் கைத்தொழில் உற்பத்திகளின் விற்பனைக்காக மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளதால் வேறு எந்த உற்பத்தியையும் விற்பனை செய்ய முடியாது எனத் தெரிவிக்கிறேன்.

நீளம் மற்றும் அகலம் முறையே 10x10 அடி அளவான விற்பனைக் கூடத்தின் விலை ரூ.10,000/- ஆவதுடன் காசாக அல்லது செல்லுபடியாகும் காசோலை மூலம் கொள்வனவுகளை மேற்கொண்டு விற்பனை கூடங்களை ஒதுக்கிக் கொள்ளலாம்.

விபரங்களுக்கு தொ.பே.இல. 0112322895ஐ அழையுங்கள்

பணிப்பாளர்,
புடவைக் கைத்தொழில் திணைக்களம்,
செயலகக் கட்டிடம்,
மாளிகாவத்தை,
கொழும்பு - 10



Trust &Value Solution நிறுவனத்தின் யாழ். மாவட்ட விற்பனை பிரதிநிதிகளுக்கான தெளிவூட்டல் நிகழ்ச்சி

(பேருவளை நிருபர்)

Trust &Value Solutions நிறுவனத்தின் யாழ். வட்ட விற்பனை பிரதிநிதிகளுக்கான தெளிவூட்டல் நிகழ்ச்சி கடந்த 24 ஆம் திகதி யாழ்ப்பாணம், திருமறை கலாமன்றம் கலைஞரது கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. யாழ். மாவட்ட விநியோகஸ்தர் ஷிபாவின் பங்கேற்போடு நடைபெற்ற இந்நிகழ்வில், நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர் W.K.D குமார வரவேற்புரை நிகழ்த்தினார்.

நிகழ்வின் தொடர்ச்சியாக உரையாற்றிய, மனிதவளம் மற்றும் நிர்வாகப் பணிப்பாளர் எம்.எச்.எம் இஹ்லான் தமது உரையில்; சுத்தமில்லாத நீரை பருகுவதன் மூலம் வருடந்தோறும் 5 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் இறக்கின்றனர். 5 வயதிற்கும் குறைவான 3 இலட்சத்திற்கும் அதிகமான சிறுவர்கள் இறக்கின்றனர்.

1.8 பில்லியன் மக்கள் சுத்திகரிக்கப்படாத நீரையே பயன்படுத்துகின்றனர்" எனக் கூறினார்.

அத்துடன் தமது நிறுவனத்தின் உற்பத்தியாகிய கன்டிய தண்ணீர் பில்டகளின் தனித்துவம் பற்றியும் வாடிக்கட்டப்படும் படிமுறைகள் பற்றியும் விளக்கமளித்தார்.

மேலும் இந்நிகழ்வில், யாழ். மாவட்டத்தின் பல விற்பனை பிரதிநிதிகள் கலந்து கொண்டதோடு யாழ். மாவட்ட விற்பனை முகாமையாளர் மற்றும் பேருவளை நியூஸ் ஊடக நிர்வாக அங்கத்தவரும், டிரஸ்ட் எண்ட் வெளிய சொழியுவுன் நிறுவன ஊடக பொறுப்பாளருமான இனாமுல் ஹஸன் துல்கிாரும் கலந்து சிறப்பித்தனர்.

மன்னார் நீதவான் நீதிமன்ற சட்டத்தரணிகள் பணிப்பகிஷ்கரிப்பு

(மன்னார் குறூப் நிருபர்)



மன்னார் நீதவான் நீதிமன்ற சட்டத்தரணிகள் நேற்றைய தினம் வியாழக்கிழமை (29) பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர்.

இன்னிகாரணமாக அனைத்து வழக்கு விசாரணைகளும் பிறிதொருநினத்துக்கு தவணையிடப்பட்டுள்ளது. மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதிக்கு எதிராக கொழும்பில் ஒட்டப்பட்ட போலி கவுரொட்டிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் வர்களை கைது செய்ய கோரியும் நேற்றையதினம் மன்னார் நீதவான் நீதிமன்ற சட்டத்தரணிகள் பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர். நீதிமன்றத்தில் எவ்வித வழக்கு விசாரணைகளுக்கும் சமூகமளிக்காது பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர்.

மேலும் மன்னார் சட்டத்தரணிகள் சங்கத்தினால் குறித்த சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று அடையாள பணிப்பகிஷ்கரிப்பும் நடைபெறவுள்ளது.

UNION BANK

2024 ஜூன் 30இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்

நிதி நிலைமைக்கூற்று ரூ.('000)

திகதியில் உள்ளபடி	வங்கி			குழு		
	30.06.2024	31.12.2023 (கணக்காய்வு செய்யப்பட்டது)	மாற்றம் %	30.06.2024	31.12.2023 (கணக்காய்வு செய்யப்பட்டது)	மாற்றம் %
சொத்துக்கள்						
காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்	2,985,510	3,181,546	(6)	3,133,136	3,329,804	(6)
இலங்கை மத்திய வங்கியிலுள்ள மீதிகள்	632,213	484,876	30	632,213	484,876	30
வங்கிகளிலுள்ள வைப்புக்கள்	889,396	3,618,819	(75)	889,572	3,618,819	(75)
நேர்மாற்று மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள்	1,606,156	2,989,653	(46)	1,996,842	2,989,653	(33)
பெறுதி நிதியியல் சாதனங்கள்	59,939	28,856	108	59,939	28,856	108
இலாப அல்லது நட்டம் ஊடான நியாய பெறுமதியில் நிதி சொத்துக்கள்	8,018,634	6,495,860	23	8,071,666	6,606,034	22
மதிப்பு செய்யப்பட்ட நிதியியல் சொத்துக்கள் - வாடிக்கையாளர்களுக்கான உத்தரவாதங்கள் மற்றும் முற்பணங்கள்	73,977,268	62,207,758	19	82,009,805	69,558,902	18
மதிப்பு செய்யப்பட்ட நிதியியல் சொத்துக்கள் - உத்தரவாதங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள்	26,087,930	30,845,784	(15)	27,352,677	33,297,389	(18)
ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம் ஊடாக நியாயபெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட நிதியியல் முதலீடுகள்	19,012,143	20,236,964	(6)	19,043,655	20,258,822	(6)
கானி ஆதனத்தில் முதலீடு	-	-	-	55,056	64,478	(15)
உப நிறுவனங்களிலான முதலீடுகள்	3,026,176	2,814,347	8	-	-	-
நன்மதிப்பு மற்றும் அருவச் சொத்துக்கள்	1,123,763	1,210,845	(7)	1,452,394	1,541,836	(6)
ஆதனம் மற்றும் இயந்திர உபகரணங்கள்	1,565,181	1,584,821	(1)	1,971,565	1,900,736	4
ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள்	908,530	827,216	10	1,009,931	975,965	3
ஏனைய சொத்துக்கள	2,861,678	2,560,374	12	3,090,227	2,675,619	15
மொத்தச் சொத்துக்கள்	**142,754,517**	**139,087,719**	**3**	**150,768,677**	**147,331,789**	**2**
பொறுப்புக்கள்						
வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை	6,131,885	3,375,823	82	6,145,852	3,442,119	79
பெறுதி நிதியியல் பத்திரங்கள்	4,022	56,769	(93)	4,022	56,769	(93)
மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள்	19,498,794	25,431,273	(23)	19,498,794	25,431,273	(23)
வைப்பாளர்களுக்கு செலுத்த வேண்டியவை	95,012,483	87,984,721	8	102,067,914	95,391,334	7
நடப்பு வரிப் பொறுப்புக்கள்	342,101	363,738	(6)	343,178	365,484	(6)
ஏனைய பொறுப்புக்கள	2,393,319	2,611,369	(8)	2,975,856	3,038,367	(2)
மொத்தப் பொறுப்புக்கள்	**123,382,604**	**119,823,693**	**(3)**	**131,035,616**	**127,725,346**	**3**
பங்கு மூலதனம்						
அறிக்கையிடப்பட்ட மூலதனம்	16,334,782	16,334,782	-	16,334,782	16,334,782	-
பங்கு உத்தரவாதங்கள்	65,484	65,484	-	65,484	65,484	-
நியமிச்சட்ட ஒதுக்க நிதியம்	280,760	277,142	1	308,366	304,748	1
FVOCI ஒதுக்கம்	112,375	83,899	34	124,611	96,135	30
ஏனைய ஒதுக்கம்	2,536,535	2,461,628	3	2,228,686	2,203,461	1
ஊழியர் பங்குரிமை ஒதுக்கம்	41,977	41,091	2	41,977	41,091	2
ஒழுங்குவிதிமுறை ஒதுக்கம்	-	-	-	272,172	228,647	19
வங்கியின் பங்குதாரர்களுக்குச் சட்டத்தக்க மொத்தப் பங்குரிமை	**19,371,913**	**19,264,026**	**1**	**19,376,078**	**19,274,348**	**1**
கட்டுப்படுத்தாத உரிமைகள்	-	-	-	356,983	332,095	7
மொத்தப் பங்கு மூலதனம்	**19,371,913**	**19,264,026**	**1**	**19,733,061**	**19,606,443**	**1**
மொத்தப் பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்	**142,754,517**	**139,087,719**	**3**	**150,768,677**	**147,331,789**	**2**
எதிர்பாராத பொறுப்புக்கள் மற்றும் கடன்படுகைகள்	36,470,825	33,658,176	8	36,345,825	33,631,199	8
சாதாரண பங்கொன்றின் நிகர சொத்துப் பெறுமதி (ரூபா)	17.88	17.78		17.88	17.79	
விஞ்ஞாபனத் தகவல்கள்						
ஊழியர்களின் எண்ணிக்கை	1,143	1,221				
கிளைகளின் எண்ணிக்கை	63	63				

தெரிவு செய்யப்பட்ட செயல்திறன் குறிகாட்டிகள் (ஒழுங்கு முறை அறிக்கையின் படி)

	வங்கி		குழு	
	30.06.2024	31.12.2023	30.06.2024	31.12.2023
ஒழுங்குபடுத்தல் மூலதன போதுமை				
பொது பங்கு பிரிவு 1 (பாசெல் III)	14,377,874	14,543,447	16,629,304	16,573,039
அடுக்கு 1 மூலதனம் (பாசெல் III)	14,377,874	14,543,447	16,629,304	16,573,039
மொத்த மூலதனம் (பாசெல் III)	15,258,564	15,374,697	17,571,858	17,462,251
ஒழுங்குபடுத்தல் மூலதன விகிதம் (%)				
பொது பங்கு பிரிவு 1 மூலதன விகிதம் (ஆகக்குறைந்த தேவைப்பாடு - 7%)	15.23%	17.23%	16.48%	18.29%
பிரிவு 1 மூலதன விகிதம் பாசெல் III (ஆகக்குறைந்த தேவைப்பாடு - 8.5%)	15.23%	17.23%	16.48%	18.29%
மொத்த மூலதன விகிதம் பாசெல் III (ஆகக்குறைந்த தேவைப்பாடு - 12.5%)	16.16%	18.22%	17.42%	19.28%
கடன் மூலதன விகிதம் (ஆகக்குறைந்த தேவைப்பாடு - 3%)	8.19%	8.39%	8.96%	9.01%
ஒழுங்குபடுத்தல் திரவத்தன்மை				
பணப்புழக்க பாதுகாப்பு விகிதம், சூபாய்க்கு (%) (ஆகக்குறைந்த தேவைப்பாடு - 100%)	698.16%	795.41%		
பணப்புழக்க பாதுகாப்பு விகிதம், சகல நாணயங்களுக்கு (%) (ஆகக்குறைந்த தேவைப்பாடு - 100%)	588.82%	787.67%		
நிகர நிலையான நிதி விகிதம் (%) (ஆகக்குறைந்த தேவைப்பாடு - 100%)	116.60%	110.66%		
சொத்துக்கள் தரம் (கடன்கள் மற்றும் வருமதிகளின் தரம்)				
குறைபாட்டுக்குட்பட்ட கடன்களின் (நிலை 3) விகிதம் (%)	10.77%	12.51%		
குறைபாட்டுக்கான ஏற்பாட்டின் (நிலை 3) மீதான நிலை 3 கடன்களின் விகிதம் (%)	37.47%	35.26%		
இலாபத்தன்மை				
வட்டி இலாபம் %	3.61%	4.68%		
சொத்துக்கள் மீதான வருமதி (வரிக்கு முன்) %	0.34%	0.58%		
சொத்துக்கள் மீதான வருமதி (வரிக்குப் பின்) %	0.10%	0.28%		
உரிமைப் பங்கிலிருந்து வருமானம் (வரிக்குப் பின்) %	0.75%	1.99%		

உரிமை மாற்றங்களின் கூற்று (ரூ.'000)

வங்கி	அறிக்கையிடப்பட்ட மூலதனம்	பங்கு உத்தரவாதங்கள்	நியமிச்சட்ட ஒதுக்க நிதியம்	பணியாளர் பங்குரிமை திட்ட ஒதுக்கம்	விற்பனைக்குள்ள /FVOCI ஒதுக்கம்	நிறுத்திவைக்கப்பட்ட வருமானங்கள்	மொத்தப் பங்கு மூலதனம்
2023 ஜனவரி 1இல் இருந்த மீதி	**16,334,782**	**65,484**	**258,182**	**14,099**	**2,102,979**	**37,305**	**18,812,831**
மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்							
காலப்பகுதிக்கான நிகர இலாபம்	-	-	-	-	295,183	-	295,183
ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம்	-	-	-	35,571	80	-	35,651
மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்	**-**	**-**	**-**	**35,571**	**295,263**	**-**	**330,834**
பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள், பங்குரிமையில் நேரடியாகக் காட்டப்பட்டது							
பணியாளர் பங்குரிமை திட்டத்தின் நியாய பெறுமதி	-	-	-	-	-	1,893	1,893
காலப்பகுதியிலான பரிமாற்றங்கள்	-	-	14,759	-	(14,759)	-	-
2023 ஜூன் 30இல் இருந்த மீதி	**16,334,782**	**65,484**	**272,941**	**49,670**	**2,383,483**	**39,198**	**19,145,558**
2024 ஜனவரி 1இல் இருந்த மீதி	**16,334,782**	**65,484**	**277,142**	**83,899**	**2,461,628**	**41,091**	**19,264,026**
மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்	-	-	-	-	-	-	-
காலப்பகுதிக்கான நிகர இலாபம்	-	-	-	-	72,361	-	72,361
ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம்	-	-	-	28,476	6,164	-	34,640
மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்	**-**	**-**	**-**	**28,476**	**78,525**	**-**	**107,001**
பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள், பங்குரிமையில் நேரடியாகக் காட்டப்பட்டது							
பணியாளர் பங்குரிமை திட்டத்தின் நியாய பெறுமதி	-	-	-	-	-	886	886
காலப்பகுதியிலான பரிமாற்றங்கள்	-	-	3,618	-	(3,618)	-	-
2024 ஜூன் 30இல் இருந்த மீதி	**16,334,782**	**65,484**	**280,760**	**112,375**	**2,536,535**	**41,977**	**19,371,913**

உரிமை மாற்றங்களின் கூற்று (ரூ.'000)

குழு	அறிக்கையிடப்பட்ட மூலதனம்	பங்கு உத்தரவாதங்கள்	நியமிச்சட்ட ஒதுக்க நிதியம்	FVOCI ஒதுக்கம்	ஏனைய ஒதுக்கம்	நிறுத்திவைக்கப்பட்ட வருமானங்கள்	ஒழுங்குவிதிமுறை ஒதுக்கம்	பங்குதாரர்களின் மொத்தப்பங்கு மூலதனம்	கட்டுப்படுத்தாத உரிமைகள்	மொத்தப் பங்கு மூலதனம்
2023 ஜனவரி 1இல் இருந்த மீதி	**16,334,782**	**65,484**	**282,802**	**26,335**	**1,998,295**	**37,305**	**-**	**18,745,003**	**270,746**	**19,015,749**
மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்										
காலப்பகுதிக்கான நிகர இலாபம்	-	-	-	-	357,701	-	-	357,701	5,943	363,644
ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம்	-	-	-	35,571	80	-	-	35,651	7	35,658
மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்	**-**	**-**	**-**	**35,571**	**357,781**	**-**	**-**	**393,352**	**5,950**	**399,303**
பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள், பங்குரிமையில் நேரடியாகக் காட்டப்பட்டது										
பணியாளர் பங்குரிமை திட்டத்தின் நியாய பெறுமதி	-	-	-	-	-	1,893	-	1,893	-	1,893
காலப்பகுதியிலான பரிமாற்றங்கள்	-	-	14,759	-	(14,759)	-	-	-	-	-
ஒழுங்கு விதிமுறை மாற்றம்	-	-	-	-	(92,549)	-	92,549	-	-	-
2023 ஜூன் 30இல் இருந்த மீதி	**16,334,782**	**65,484**	**297,561**	**61,906**	**2,248,768**	**39,198**	**92,549**	**19,140,248**	**276,696**	**19,416,945**
2024 ஜனவரி 1இல் இருந்த மீதி	**16,334,782**	**65,484**	**304,748**	**96,135**	**2,203,461**	**41,091**	**228,647**	**19,274,348**	**332,095**	**19,606,443**
மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்										
காலப்பகுதிக்கான நிகர இலாபம்	-	-	-	-	66,204	-	-	66,204	(1,378)	64,826
ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம்	-	-	-	28,476	6,164	-	-	34,640	690	35,330
மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்	**-**	**-**	**-**	**28,476**	**72,368**	**-**	**-**	**100,844**	**(688)**	**100,156**
பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள், பங்குரிமையில் நேரடியாகக் காட்டப்பட்டது										
பணியாளர் பங்குரிமை திட்டத்தின் நியாய பெறுமதி	-	-	-	-	-	886	-	886	-	886
வழங்கப்பட்ட புதிய பங்கு உரிமைகள்	-	-	-	-	-	-	-	-	25,576	25,576
வகாலப்பகுதியிலான பரிமாற்றங்கள்	-	-	3,618	-	(3,618)	-	-	-	-	-
குறைக்கப்பட்ட செலவுக்கு மாற்றப்பட்ட முதலீட்டு கருவிகள்	-	-	-	-	(43,525)	-	43,525	-	-	-
2024 ஜூன் 30இல் இருந்த மீதி	**16,334,782**	**65,484**	**308,366**	**124,611**	**2,228,686**	**41,977**	**272,172**	**19,376,078**	**356,983**	**19,733,061**

அனைத்துமுள்ளடங்கிய வருமானத்தின் கூற்று

முடிவடைந்த ஆறு மாத காலப்பகுதிக்கானது	வங்கி			குழு		
	30.06.2024	30.06.2023	மாற்றம் %	30.06.2024	30.06.2023	மாற்றம் %
காலப்பகுதிக்கான இலாபம்	**72,361**	**295,183**	**(75)**	**64,826**	**363,644**	**(82)**
அடுத்தவருஷம் காலப்பகுதிகளில் இலாபம் அல்லது நட்டத்திற்கு மீளவகைப்படுத்த வேண்டிய ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம்:						
ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம் ஊடான நியாயப் பெறுமதியில் கடன் சாதனங்கள்						
காலப்பகுதிக்கான நியாயப் பெறுமதியில் தேறிய மாற்றம்	97,525	93,769	4	97,525	93,769	4
எதிர்பார்த்த கடன் இழப்புக்கான ஏற்பாடுகளில் மாற்றம்	(56,845)	(42,953)	(32)	(56,845)	(42,953)	(32)
கழி: மேற்குறிப்பிடப்பட்டதற்கான வருமான வரி விளைவு	(12,204)	(15,245)	20	(12,204)	(15,245)	(20)
பங்குரிமை முதலீட்டாளர்களின் இலாப் பங்கு, வரி நீங்கலாக	-	-	-	-	-	-
இலாப நட்டக்கணக்கிற்கு மீள் வகைப்படுத்தப்படாத மொத்த உருப்படிகள்	**28,476**	**35,571**	**(20)**	**28,476**	**35,571**	**(20)**
அடுத்தவருஷம் காலப்பகுதிகளில் இலாபம் அல்லது நட்டத்திற்கு மீளவகைப்படுத்த வேண்டிய ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம்:						
வரையறுக்கப்பட்ட பயன் ஒய்வுதிய நிட்டத்தின் உண்மையான இலாப / (நட்டம்)	-	-		96	125	(23)
ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம் ஊடான நியாயப்பெறுமதியில் மூலதன உபகரணங்களிலான மீள் மதிப்பீடு இலாம் / (நட்டம்)	-	-		9,654	-	100
கழி: மேற்குறிப்பிடப்பட்டதற்கான வருமான வரி விளைவு	-	-		(2,896)	(37)	மா.அர
பங்குரிமை முதலீட்டாளர்களின் இலாப் பங்கு, வரி நீங்கலாக	6,164	80	மா.அர	-	-	
இலாப நட்டக்கணக்கிற்கு மீள் வகைப்படுத்தப்படாத மொத்த உருப்படிகள்	**6,164**	**80**	**மா.அர**	**6,854**	**88**	**7,662**
வரிகள் நீங்கலாக காலப்பகுதியின் ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம்	**34,640**	**35,651**	**(3)**	**35,330**	**35,659**	**(1)**
காலப்பகுதிக்கான மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்	**107,001**	**330,834**	**(68)**	**100,156**	**399,303**	**(75)**
பகிரந்தளிக்கத்தக்கது:						
தலைமைக்கம்பனியின் உரிமையாளர்களுக்கு	107,001	330,834	(68)	100,844	393,353	(74)
கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுக்கு	-	-	-	(688)	5,950	(112)
காலப்பகுதிக்கான மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம், வரி நீங்கலாக.	**107,001**	**330,834**	**(68)**	**100,156**	**399,303**	**(75)**

வருமானக்கூற்று ரூ.('000)

முடிவடைந்த ஆறு மாத காலப்பகுதிக்காலது	வங்கி			குழு		
	30.06.2024	30.06.2023	மாற்றம் %	30.06.2024	30.06.2023	மாற்றம் %
மொத்த வருமானம்	**8,458,076**	**11,728,955**	**(28)**	**9,576,664**	**12,990,016**	**(26)**
வட்டி வருமானங்கள்	7,316,840	10,620,865	(31)	8,310,110	11,779,902	(29)
கழி : வட்டிச் செலவினங்கள்	4,773,221	7,503,291	(36)	5,428,902	8,180,558	(34)
தேறிய வட்டி வருமானம்	**2,543,619**	**3,117,574**	**(18)**	**2,881,208**	**3,599,344**	**(20)**
கட்டணம் மற்றும் தரகு வருமானம்	709,725	791,570	(10)	774,263	838,750	(8)
கழி : கட்டணம் மற்றும் தரகுச் செலவினங்கள்	189,691	196,141	(3)	202,823	197,434	3
தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்	**520,034**	**595,429**	**(13)**	**571,440**	**641,316**	**(11)**
இலாபம் அல்லது நட்டம் ஊடான நியாயப் பெறுமதியில் நிதிபத்திரங்களிலிருந்து நிகர ஆதாயம்/இழப்பு	303,262	129,196	135	311,020	136,498	128
நிதியியல் முதலீடுகள் மூலமான இலாபம் / நட்டம்	157,464	194,518	(19)	157,549	194,518	(19)
இலாபம் அல்லது நட்டம் ஊடான நியாயப் பெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட நிதிபத்திரங்களிலிருந்து நிகர ஆதாயம்/இழப்பு	-	-	-	-	-	-
ஏனைய தொழிற்பாட்டு வருமானம் (தேறிய)	(29,214)	(7,195)	(306)	23,722	40,349	**(41)**
மொத்த தொழிற்பாட்டு வருமானம்	**3,495,165**	**4,029,522**	**(13)**	**3,944,939**	**4,612,025**	**(14)**
கழிக்குக: கடன்கள் மற்றும் ஏனைய கடன்படுகைகளுக்கான இழப்பு	362,492	726,241	(50)	357,275	779,864	(54)
தேறிய தொழிற்பாட்டு வருமானம்	**3,132,673**	**3,303,281**	**(5)**	**3,587,664**	**3,832,161**	**(6)**
கழி : ஊழியர்சார் செலவினங்கள்	1,162,153	1,142,818	2	1,335,494	1,311,804	2
தேய்மானம் மற்றும் கடனதிர்ப்பு	386,950	386,692	-	426,336	420,176	1
ஏனைய செலவினங்கள்	1,035,166	966,928	7	1,227,227	1,111,485	10
மொத்த தொழிற்பாட்டு செலவினங்கள்	**2,584,269**	**2,496,438**	**4**	**2,989,057**	**2,843,465**	**5**
தேறிய தொழிற்பாட்டு இலாபம்	**548,404**	**806,843**	**(32)**	**598,607**	**988,696**	**(39)**
பங்குரிமை முதலீட்டாளர்களின் இலாபப் பங்கு, வரி நீங்கலாக	(21,414)	53,845	(140)	-	-	-
நிதியியல் சேவைகள் மீதான பெறுமதி கூட்டு வரிக்கு (வெ கூ வ) முன் இலாபம்	**526,990**	**860,688**	**(39)**	**598,607**	**988,696**	**(39)**
கழி : நிதியியல் சேவைகள் மீதான பெ.கூ.வ	285,363	327,269	(13)	319,991	370,853	(14)
வரிக்கு முன் இலாபம்	**241,627**	**533,419**	**(55)**	**278,616**	**617,843**	**(55)**
கழி : வரிச் செலவினங்கள்	169,266	238,236	(29)	213,790	254,199	(16)
வரிக்கு பின்னரான இலாபம்	**72,361**	**295,183**	**(75)**	**64,826**	**363,644**	**(82)**
பகிரந்தளிக்கத்தக்க இலாபம்:						
தலைமைக்கம்பனியின் உரிமையாளர்களுக்கு	72,361	295,183	(75)	66,204	357,701	(81)
கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுக்கு	-	-	-	(1,378)	5,943	(123)
காலப்பகுதிக்கான இலாபம்	**72,361**	**295,183**	**(75)**	**64,826**	**363,644**	**(82)**
இலாபத்தில் பங்கொன்றின் சம்பாதியம்						
பங்கொன்றின் அடிப்படை சம்பாதியம்	0.07	0.27	(75)	0.06	0.33	(81)
பங்கொன்றின் நிரந்த சம்பாதியம்	0.07	0.27	(75)	0.06	0.33	(81)

காசுப்பாய்ச்சல்கள் கூற்று ரூ. ('000)

	வங்கி		குழு	
	30.06.2024	30.06.2023	30.06.2024	30.06.2023
தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் மூலமான காசுப்பாய்ச்சல்கள்				
வட்டி வருமதிகள்	6,963,231	10,172,702	7,944,281	11,212,714
பெறப்பட்ட கட்டணங்கள் மற்றும் தரகுப்பணம்	520,034	595,429	571,440	641,316
வட்டிக் கொடுப்பனவுகள்	(6,082,683)	(7,394,414)	(7,556,606)	(8,005,292)
ஏனைய தொழிற்பாட்டு நடவடிக்கையிலான பெறுவனவுகள்	455,445	273,498	516,224	328,344
ஏனைய தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்கான கொடுப்பனவுகள்	(2,570,368)	(2,555,465)	(2,883,721)	(2,781,365)
தொழிற்பாட்டுச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கு முன் தொழிற்பாட்டு இலாபம் / (நட்டம்)	**(714,341)**	**1,091,750**	**(1,408,384)**	**1,395,717**
தொழிற்பாட்டுச் சொத்துக்களில் அதிகரிப்பு / (குறைவு)				
இலங்கை மத்திய வங்கியிலுள்ள மீதி	(147,337)	147,881	(147,337)	147,881
கடன்களும், முற்பணங்களும்	(12,162,475)	4,882,390	(12,681,734)	5,437,310
ஏனையவை	(301,302)	(263,863)	(414,600)	(317,617)
	(12,611,114)	**4,766,408**	**(13,243,671)**	**5,267,574**
தொழிற்பாட்டுப் பொறுப்புக்களில் அதிகரிப்பு / (குறைவு)				
வைப்பாளர்களுக்கு செலுத்தவேண்டியவை	8,321,958	(3,719,587)	8,797,715	(2,896,679)
மீளகொள்வனவு ஒப்பந்தங்கள்	(5,864,100)	3,156,763	(5,864,100)	3,256,826
ஏனையவை	(265,503)	244,644	(181,955)	288,931
	2,192,355	**(318,180)**	**2,751,660**	**649,078**
வருமான வரிக்கு முன் தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து /(அவற்றில் பயன்படுத்திய) தேறிய காசு	(11,133,100)	5,539,978	(11,900,395)	7,312,368
செலுத்தப்பட்ட ஒய்வுகால அனுகூலக் கொடுப்பனவுகள்	(31,746)	(24,013)	(31,746)	(25,749)
செலுத்திய வருமான வரி	(268,432)	(281,887)	(268,430)	(288,168)
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து / (அவற்றில் பயன்படுத்திய) தேறிய காசு	**(11,433,278)**	**5,234,078**	**(12,200,569)**	**6,998,452**
முதலீட்டு நடவடிக்கைகளின் மூலமான காசுப்பாய்ச்சல்கள்				
நிதர இலாம் அல்லது நட்டம் ஊடான நியாயப் பெறுமதியில் நிதி சொத்துக்கள்	(1,488,376)	(1,150,953)	(1,431,233)	(634,761)
நிதர மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள்	4,759,574	1,203,031	6,019,175	(671,062)
இலாபம் அல்லது நட்டம் ஊடான நியாயப் பெறுமதியில் தேறிய நிதியிய முதலீடுகள்	1,403,105	(3,814,661)	1,393,450	(3,814,785)
நிதர இலாம் அல்லது நட்டம்	-	-	(9,421)	(3,412)
சொத்துக்கள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவு	(136,931)	(22,567)	(185,346)	(35,706)
அருவச் சொத்து கொள்வனவு	(48,638)	(7,285)	(48,638)	(10,539)
சொத்து மற்றும் உபகரணங்களின் விற்பனை மூலமான தேறிய காசு	-	476	-	476
முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து / (பயன்படுத்தியது) நிதர காசு	**4,488,734**	**(3,791,959)**	**5,737,987**	**(5,169,789)**
நிதியியல் நடவடிக்கைகளின் மூலமான காசுப்பாய்ச்சல்கள்				
கடன்படுகைகளின் அதிகரிப்பு	2,657,638	(675,960)	2,587,511	(1,045,340)
வழங்கப்பட்ட புதிய பங்கு உரிமைகள்	-	-	25,576	-
நிதி நடவடிக்கைகளில் இருந்து / (பயன்படுத்திய) நிதர காசு	**2,657,638**	**(675,960)**	**2,613,087**	**(1,045,340)**
காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு / (வீழ்ச்சி)	(4,286,905)	766,159	(3,849,495)	783,323
காலப்பகுதியின் ஆரம்பத்தில் காச மற்றும் காசுக்குச் சமமானவைகள்	9,766,679	7,807,156	9,849,960	7,992,298
காலப்பகுதியின் முடிவில் காச மற்றும் காசுக்குச் சமமானவைகள்	**5,479,773**	**8,573,316**	**6,000,465**	**8,775,621**
காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் இணக்கம்				
காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்	2,985,510	4,299,932	3,133,136	4,560,773
நேர்மாற்று மீள் கொள்வனவு ஒப்பந்தங்கள்	1,606,156	3,122,645	1,996,842	3,122,645
வங்கிகளிலுள்ள வைப்புக்கள்	888,107	1,154,844	888,282	1,154,922
வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை			(4,105)	(17,795)
காலப்பகுதியின் முடிவில் காச மற்றும் காசுக்குச் சமமானவைகள்	**5

காரைக்கவியின்

'சீத்துவக்கேடு நூல் வெளியீட்டு விழா



காரைக்கவியின் 'சீத்துவக் கேடு, துலைஞ்சு போன எங்கட வாழ்க்கை' எனும் நூல் வெளியீட்டு விழா எதிர் வரும் செப்டெம்பர் 15ஆம் திகதி மாலை 4.31 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பேராசிரியர் அருளானந்தம் சர்வேஸ் வரன் தலைமை தாங்கி வர வேற்புரை நிகழ்த்தவுள்ளார். வாழ்த்துரையை பேராசிரியர் தை.தனராஜும், முகப்பு ரையை பேராசிரியர் வ.ம கேஸ்வரனும், நயவுரையை வைத்தியர் செல்வரஞ்சனி சுப் ரமணியமும், ஆய்வுரையை பேராசிரியர் வ.சிவலோகதாச னும், நோக்குரையை கலாநிதி க.ரகுபரனும், மகிழுரையை சட்டத்தரணி சுகந்தி இராஜகு லேந்திராவும், ஏற்று நன்றியு ரையை நூலாசிரியரும் நிகழ்த் தவுள்ளனர்.

இந்நிகழ்வில் விருந்தி னர்களாக தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பத்தி ரிகையின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், சாகித் தியரத்தினா தி.ஞானசேகரன், தமிழன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் இ.சிவராஜா, புற்று நோயியல் நிபுணர் வைத்தியர் ந.ஜெயகுமாரன், காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி மேனாள் ஆசிரியர் க.குகப்பிரியன் ஆகியோர் கலந்துகொள்ள வுள்ளனர்.

அடுத்த 05 வருடங்கள் இலங்கையின் வெற்றிக்கான காலம்...

நாட்டுக்கும் மக்களுக்கும் தன்னால் வழங்கக்கூடியவற்றுக்கு மாத்திரமே வாக் குறுதியளிப்பதாகவும், தன்னால் வழங்க முடியாததை வாக்குறுதியளித்து நாட்டின் பொருளாதாரத்தை வீழ்ச்சியடைச் செய்ய தான் தயாரில்லையென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

எதிர்வரும் 05 வருடங்களில் நாட்டுக்காக தன்னால் இயன்றதை செய்து இளைஞர் களுக்காக கடன் சுமையற்ற அபிவிருத்தி அடைந்த நாடொன்றை கட்டியெழுப்புவதாக வும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதி யளித்தார்.

வாழ்க்கைச் சுமையைக் குறைத்தல், தொழில் வாய்ப்புகளை வழங்குதல், வரி நிவாரணம் வழங்குதல், பொருளாதார மேம்பாடு, உறுமய மற்றும் அஸ்வெ சும வேலைத் திட்டங்களை செயற்படுத்தி ஒவ்வொரு பிரஜைக்கும் காணி அல்லது வீட்டு உரிமை பெறும் வேலைத்திட்டம் என்பன தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கியுள்ளதாகவும் ஜனாதிபதி தெரி வித்தார்.

'ரணிலுடன் இலங்கைக்கு வெற்றிகர மான ஐந்து வருடங்கள்' என்ற தேர்தல் விஞ்ஞாபனத்தை நேற்று (29) வெளியிட்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித் தார்.

'தேரவாத வர்த்தகப் பொருளாதாரம், 2025க்கும் அப்பால் செல்லும் செயல் முறை, ஒளிமயமான சமுதாயத்தை நோக்கி, வெற்றிபெறும் தாய்நாடு, ஒன்றி ணைந்த இலங்கை' ஆகிய 05 பிரதான பிரிவுகளை உள்ளடக்கிய 'ரணிலுடன் இலங் கைக்கு வெற்றிகரமான ஐந்து வருடங்கள்' என்ற தேர்தல் விஞ்ஞாபனம், மகா சங்கத்தி னர் உட்பட மதத் தலைவர்களுக்கு சமர்ப்பிக் கப்பட்ட பின்னர், இளைஞர்களுக்கும் இது, கையளிக்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் 'ரணி லுடன் இலங்கைக்கு வெற்றிகரமான ஐந்து வருடங்கள்' என்ற தேர்தல் விஞ்ஞாபனம் இன்று கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்ட லில் வெளியிடப்பட்டது.

இந்த தேர்தல் விஞ்ஞாபனம் அடங் கிய www.ranil2024.lk இணையத்தளம் இதன்போது ஜனாதிபதியால் அங்குரார்ப்ப ணம் செய்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சை வேட்பா ளராகப் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவின் 'ரணிலுடன் இலங்கைக்கு வெற்றிகரமான ஐந்து வருடங்கள்' தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று (29) கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் வெளியிடப்பட்டது.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க,

"ஜனாதிபதி தேர்தலுக்கான எனது கொள்கை பிரகடனம் வெறுமனே, கொள்கை பிரகடனமாக மாத்திரமின்றி நாட்டின் மீட்சிக்காக செயற்படுத்த வேண்டிய துரித வேலைத் திட்டங்களை உள்ளடக்கிய தாகவே அமைந்திருக்கிறது.

மற்றைய வேட்பாளர்கள் நீண்ட கால தீர் வுகளை சொல்லியிருக்கிறார்கள். ஆனால் தற்போதைய தருணத்தில் இலங்கைக்கு நீண்ட கால தீர்வு திட்டங்கள் பொருத்தமாக அமையாது. இலங்கை தற்போது நெருக்க டிக்குள் இருக்கிறது. பொருளாதாரமும் அரசி யலும் சரிவடைந்திருக்கிறது.

என்னோடு பணியாற்ற வந்த பிரதமரும் அமைச்சர்களும் என்னுடன் உள்ளனர். எவ் வாறாயினும், 2023 களில் நாம் பொரு ளாரத்தை நிலைத்தன்மைக்கு கொண்டு வந்தோம். பொருளாதார நிலைத்தன் மையை முன்னோக்கி கொண்டுச் சென்றி ருக்கிறோம்.

நிலைத்தன்மையை எதிர்வரும் காலங் களிலும் பாதுகாக்க வேண்டும். அதற்காக இலங்கையை ஏற்றுமதி பொருளாதாரத்தை நோக்கி நகர்த்த வேண்டியுள்ளது.

போலி வாக்குறுதிகளை வழங்கி நாட்டை மீண்டும் சரிவிற்குள் தள்ளிவிட வேண்டிய தேவை எனக்கு இல்லை. பொருளாதாரம், அரசியல் என்பன சரிவடைந்த நாடுகளின் நிலையை இன்று நாம் காண்கிறோம். பங் களாதேஷும், மாலைதீவும் நமக்குத் தெரி கிறது. நாம் கண்ட துர்ப்பாக்கிய நிலையை மீண்டும் உருவாக்கினால் அடுத்த சந்ததி யின் எதிர்காலம் சூனியமாகிப் போகும்.

அதனால் நாட்டில் நிலைத்தன்மையைப் பாதுகாத்து பொருளாதாரத்தை மாற்றிய மைப்பதற்கான நடவடிக்கைகளை முன் னெடுக்க வேண்டும். இளையோரின் எதிர் காலத்தைப் பாதுகாப்பதற்கான சட்டத்தைத் தயாரித்துள்ளோம். அதனை நிறைவேற் றிக்கொள்ள வேண்டியுள்ளது. அதற்காக மாறு பட்ட பொருளாதாரத் திட்டங்களை செயற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

இலங்கை சர்வதேச நிதிய ஒப்பந்தம் மற்றும் இலங்கைக்கு கடன் வழங்கிய நாடு களுடன் செய்து ள்ள ஒப்பந்தத்தின் அடிப்ப டையில் நாம் செயற்பட வேண்டியது அவ சியமாகவுள்ளது. அதேபோல் சீனா, உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கிகளுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில் செயற்பட வேண்டிய அவசிய மும் உள்ளது. முதற் காரணியாக தேரவாத வர்த்தக பொருளாதாரத்தை செயற்படுத்துகி றோம். அநுராதபுர யுகத்தில் நாட்டில் சிறந்த வர்த்தகம் காணப்பட்டுள்ளது. இலங்கை யின் அமைவிடம் அதற்கான சாதகத்தை ஏற்படுத்தி தந்திருந்தது. அநுராதபுரத்தில் அமைக்கப்பட்ட சகல குளங்களும் சொந்த நிதியில் அமைக்கப்படிருப்பதே அப்போ தைய பொருளாதார வலுவுக்கு சான்றாகும்.

ஆனால் மகாவலியைக் கட்டமைக்க வெளிநாட்டு உதவியை நாடினோம். இந்த மாற்றத்தை புரிந்துகொள்ள வேண்டும். இன்று தாய்லாந்தும் வியட்நாமும் தேரவாத வர்த்தக முறைமைகளை முழுமையாக பின் பற்றுகின்றன. அவற்றை நாமும் செயற்ப டுத்துவதாக தேர்தல் பிரகனடத்தில் குறிப்பிட் டிருக்கிறோம்.

அடுத்தாக நாட்டு மக்கள் பெரும் கஷ்டங் களை அனுபவித்தனர். அதனால் பொருளா தார வளர்ச்சியில் மக்களுக்கும் நிவாரணம் கிடைக்க வேண்டும். அதனால் உறுமய திட் டத்தின் கீழ் 20 இலட்சம் பேருக்கு காணி உறுதிகளை வழங்குகிறோம். குறைந்த வருமானம் பெறும் 02 இலட்சம் குடும் பங்களுக்கு வீட்டு உரிமைகளை வழங்கு கிறோம்.தோட்டங்களை கிராமங்களாக்கி மக்களுக்கு காணி உறுதி வழங்கவுள் ளோம். மக்கள் உரிமையைப் பாதுகாக்கும் பணிகளை இத்திட்டங்களின் கீழ் முன்னெ டுக்கிறோம்.

எதிர்காலத்தில் சலுகை அடிப்படையில் குறைந்த வருமானம் பெறுவோருக்கான வீட்டுக் கடன்களையும் வழங்குவோம் மத்திய தரத்தினருக்கும் கடன்களை வழங் குவோம். சிறு மற்றும் மத்திய தர தொழில் துறை பாதுகாப்புக்காக தற்போதும் 50 பில் லியன்களை நாம் வழங்கியிருக்கிறோம்.

மூன்றாவதாக எமது பொருளாதார செயற்பாடுகளை காலநிலை அனர்த்தங்க ளுக்கு வழி செய்யாத வகையில் முன்னெ டுக்க எதிர்பார்க்கிறோம். இவற்றோடு ஐந்து முக்கிய காரணிகள் உள்ளன.

முதலில் வாழ்க்கை சுமையைக் குறைக்க வேண்டும். அதற்காக ரூபாவின் பெறு மதியைப் பலப்படுத்த வேண்டியுள்ளது. அடுத்தாக தொழில்வாய்ப்புக்கள் உருவாக் குவோம். மூன்றாவது வரிச்சலுகைகளை வழங்குவோம். அடுத்தபடியாக பொருளாதா ரத்தை மேம்படுத்துவோம். அதனால் ஏற்று மதி பொருளாதாரத்தை நோக்கி நகர்வதே இலக்காக உள்ளது. பின்னர் 'உறுமய', 'அஸ்வெசும' திட்டங்களை செயற்படுத்து வோம்.

எனவே புதிய கொள்கைகளை கொண்டு வந்து விவாதித்துக் கொண்டிருப்பதை விடவும் மக்கள் கஷ்டத்தைப் போக்குவதற் கான திட்டங்களை செயற்படுத்துவோம். 'இயலும் ஸ்ரீலங்கா' திட்டத்தின் கீழ் துரித மாக முன்னெடுக்க கூடிய செயற்பாடுகளை நாம் நடைமுறைப்படுத்துவோம்.. அதற் காக நிவாரணங்களைப் பெற்றுக்கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

குறிப்பாக விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை துரிதமாக செயற்படுத்தலாம். அதற்காக அடிப்படைச் செயற்பாடுகளை இப்போதும் முன்னெடுத்திருக்கிறோம். சுற்றுலாத் துறையில் 5 மில்லியன் சுற்று லாப் பயணிகளைக் கவரும் பணிகளை ஆரம்பித்துள்ளோம். உள்நாட்டு பால் உற் பத்தியை அதிகரிக்க எதிர்பார்க்கிறோம். தொழிற்சாலை அபிவிருத்தி வர்த்தக வல யங்களை ஸ்தாபிக்கும் பணிகள் உள்ளிட்ட பல பணிகளை பிங்கிரியவில் ஆரம்பித்தி ருக்கிறோம். வடக்கிலும் ஹம்பாந்தோட்டை யிலும் ஆரம்பிக்க தயாராக இருக்கிறோம்.

அதேபோல் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உற்பத்தியை பொருளாதாரத்தின் முக்கிய பங்காக இணைக்கப் போகிறோம். அடுத்த தாக டிஜிட்டல் மயமாக்கலுக்கான பணிகள் முழுமையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதேபோல் ஒரு இலட்சம் வேலைவாய்ப்புக் களை இளையோருக்கு உருவாக்கி கொடுக்க வேண்டியுள்ளது.

அரசியல் பழிவாங்கல்களுக்கு...

திட்டத்தில் ஒரு போதும் ஊழல்வாதிகளை இணைத்துக் கொள்ளப்போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். திருகோணமலை, கந்தளாய், சேருவில பகுதியில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின், பேரணியில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

செப்டெம்பர் 21 தேர்தலன்று யாரை தெரிவு செய்யவேண்டும் என்பதை மக்கள் தீர் மானித்துவிட்டனர். இது, இப்போது தெளிவாக தெரிகிறது.

தேசிய மக்கள் சக்தியின் வேலைத்திட்டங் களில் மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். எனவே செப்டெம்பர் 21இல், நாம், அமோக வெற்றியீட்டி நாட்டின் ஊழல் ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைப்போம். தூய்மையான அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்துவோம். வரலாற்றில் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தேர்த லாகும். அதாவது தேர்தல் நெருங்கி வரும் வரை மக்கள் எதிர்ப்பார்ப்புடன் காத்திருக்கின் றனர். மக்கள் நாட்டுக்காக ஒன்றிணைந்துள் ளனர். நாட்டை வெற்றியடையச் செய்யும் கூட்டணி தேசிய மக்கள் சக்தியுடன் இணைந் துள்ளது. நாட்டில் கட்சி, இன, மத வேறுபா டின்றி மக்களை ஒன்றிணைத்து புதிய ஆட்சி அமைப்போம். இந்த நாட்டுக்கு புதிய அரசியல் கலாசாரம் ஒன்றே தேவைப்படுகிறது.

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் அரசி யல் பழிவாங்கல் நடவடிக்கை மேற்கொள்ளப் படமாட்டாது. ஆனால், ஊழல்வாதிகளை சட்டத் தின் முன்னிறுத்துவோம்.

மக்களின் பணத்தை கொள்ளையடித்தவர் கள் நிச்சயமாக சட்டத்தின் முன்னிறுத்தப்படு வர். நாம் நாட்டை வீழ்ச்சியிலிருந்து கட்டியெ முப்புவோம்.

மக்களுடனேயே ஒன்றிணைந்து செயற்படு வோம். மக்களின் பணத்தை கொள்ளையிட்டு, மக்களை வறுமைப் பிடியில் சிக்க வைத்தவர் களுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்கப்படும்.

நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவுகளில்...

உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, இதை, கையளித்தார். இந்திய உயர்ஸ்தானிகரால யத்தில் இந்நிகழ்வு (28) நடைபெற்றது.

நெடுந்தீவு, நயினாதீவு மற்றும் அன லைதீவு ஆகிய தீவகங்களில் கலப்பின Hybrid Power Projects புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களை நடைமுறைப்படுத் துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், இந்தியாவும் இலங்கையும் கைச்சாத்திட் டன.2022 மார்ச்சில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தானது. இதன் பின்னர் திட் டத்தை செயல்படுத்துவதற்கான ஒப்பந்தம் (Sri Lanka Sustainable Energy Authority) இலங்கை நிலையான எரிசக்தி அதிகார சபையால் M/s. U Solar Clean Energy Solutions Pvt. Ltd நிறுவனத்துடன் 2024 மார்ச் மாதம் 01 கையெழுத்தா னது. தேசிய கட்டமைப்புடன் இணைக் கப்படாத மூன்று தீவகங்களின் மக்க ளின் தேவைகளை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்ட இந்த திட்டம், சூரிய மற்றும் காற்று உட்பட பல்வேறு வகையான ஆற்றலை ஒருங்கிணைத்து, திறன்களை மேம்படுத்தும். மூன்று கட்டங் களாக ஆரம்பிக்கப்படவுள்ளன. இத்திட்டம் 2025 மார்ச்சில் நிறைவுசெய்யப்பட்டு 2025 ஏப்ரல் மாத இறுதியில் ஒப்படைக் கப்படும்.

தமிழர் தரப்பு பொது வேட்பாளர்...

தம்பிமுத்து தெரிவித்துள்ளார். ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் ஆதரவு வழங்குமாறு முன்னிலையில் இருக்கும் நான்கு வேட்பா ளர்கள், தன்னுடன் தொடர்பு கொண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற ஊடக சந்திப் பிலேயே, அவர் இதனை தெரிவித்தார்.இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக் கையில், "அகில இலங்கை தமிழ் காங்கிர ஸின் தன்னாட்சி, ஒரு நாடு இரு தேசம் எனும் விடயங்களில் எனக்கு எந்தவித முரண்பாடும் கிடையாது.

தேர்தல் பகிஷ்கரிப்பு என்ற விடயத்தையும் நான் ஏற்றுக் கொள்ளவில்லை. எமது மக்க ளின் நிலையை உணர்ந்து, பகிஷ்கரிப்பதன் மூலமாக எமது அரசியலை முன்னெடுக்க லாம் என்பது எனக்கு தெரியாது. ஜனநாயக மரபுகளை நாம் உணர வேண்டும்.

ஈழத் தமிழர்கள் எமது நிலைப்பாட்டை தெளிவாக எடுக்க வேண்டிய காலமாக இருக் கிறது. இருந்தாலும் கூட இந்த ஜனாதிபதித் தேர்தலை தமிழர்களின் அரசியல் விடுத லைக்கான கருத்தியல் ஒற்றுமைக்கான ஒரு ஆரம்பப் புள்ளியாகவே, நான் பார்க்கிறேன். தெட்டத் தெளிவாக தமிழர்கள் வட்டுக்கோட்டை தீர்மானத்துக்கு கொடுத்த ஆணையின் அடிப்ப டையில், தமது நிலைப்பாட்டை தெளிவாகக் கூறி விட்டனர். மூன்று சிங்கள தலைவர்கள் தற்போது மிக நெருக்கமான போட்டியில் இருக் கிறார்கள். எவர் வந்தாலும் ஈழத் தமிழர்களுக் கான அரசியலை நோக்கி நாம் பேச்சுவார்த் தைகளை முன்னெடுக்கத்தான் வேண்டும்.

UNHRC தீர்மானங்களை...

தீர்மானத்தையும் இலங்கை ஏற்றுக் கொள்ளாதென வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித் துள்ளார். நேற்று முன்தினம் புதன்கிழமை (28) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் கருத்து தெரிவித்த அவர்,

"மேற்குலக நாடுகள் தமது நாடுகளில் வசிக்கும் புலம்பெயர் இலங்கையர்க ளின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில், இலங்கை மீது குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றன. வெளிநாட்டுக் கொள் கைகள், வாக்கு வங்கி அரசியலை அடிப்ப டையாக கொண்டதாக இருக்கக் கூடாது.

2022ஆம் ஆண்டு ஜ.நா மனித உரிமை கள் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர் மானமொன்று கொண்டுவரப்பட்டது. அந்த தீர்மானத்தின் காலம் முடிவடைவதால் இந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் மீண்டும் ஒரு தீர்மானத்தை கொண்டுவர உள்ளனர். இந்த தீர்மானம் தொடர்பான அறிக்கையை சமர்ப் பித்துள்ளனர்.

தீர்மானத்தை நாங்கள் நிராகரித்துள் ளோம். தற்போதைய தீர்மானத்துக்கான காலம் முடிவடைவதால், அதைத் தொடர புதிய தீர்மானத்தை அவர்கள் அறிமுகப் படுத்த வேண்டும். அதனையே நிராகரித் துள்ளோம். எவ்வாறாயினும், மனித உரி மைகள் பேரவையின் அணுகு முறையை நாங்கள் ஏற்கவில்லை என்பதைக் குறிப்பி டுவது முக்கியம்.

குறிப்பாக, தீர்மானத்தில் குறிப்பிடப் பட்டுள்ளபடி, வெளிநாட்டில் நீதிமன்ற வழக்கை ஆரம்பிப்பதற்கான முன்மொழிவு டன் நாங்கள் முற்றிலும் உடன்படவில்லை. இது நமது இறையாண்மைக்கும் எமது சட்ட கட்டமைப்புக்கும் எதிரானது. இலங்கை யின் நீதித்துறை அத்தகைய தலையீட்டை அனுமதிக்காது. வெளிநாட்டு சக்திகளுக்கு நாம் கூறுவது என்னவென்றால், 15 வருடங்களுக்கு முன்னர் நிறைவடைந்த மோதலுக்கு தீர்வு காண்பதற்கு, உள்ளக நடவடிக்கைகளை இலங்கை நடைமுறைப் படுத்தியுள்ளது. அதுதான் இலங்கையின் செயல்முறை. எமது சமூகங்களுக்குள் பிள வுகளை ஏற்படுத்த வெளிச்சக்திகள் முயற் சிப்பதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம்.

இந்தத் தலையீட்டின் பின்னணியிலுள்ள உந்துதல், இலங்கையிலிருந்து புலம்பெ யர்ந்து மேற்குலக நாடுகளின் வாழும் மக்க ளின் வாக்குகளாகும். இதையே, நாங்கள் வாக்கு வங்கி அரசியல் என்று அழைக்கி றோம். மேலும் இலங்கை தொடர்பான இந்த நாடுகளின் வெளியுறவுக் கொள்கை களை நிராகரிக்கிறோம். மனித உரிமைகள் பேரவை அதன் எல்லைக்குள் இருந்தால், அவர்களுடன் ஒத்துழைப்போம். மனித உரிமைகள் பேர வைக்கு பொருளாதாரம் பற்றி என்ன தெரியும்? பொருளாதார விடயங்களில் நிபு ணர்களான IMF, உலக வங்கி, அமெரிக்க திறைசேரி மற்றும் ஜப்பானிய வெளியுறவு அமைச்சுடன் இணைந்து பணியாற்றுகி றோம்." என்றார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஜனாதிபதி வேட்பாளர்கள் அளித்துவரும் வாக்குறு திகள் குறித்து கருத்து தெரிவித்த அலி சப்ரி, அவ்வாறு செய்வது வரவிருக்கும் மாதங்களில் எதிர்பார்க்கப்படும் சுமார் 1.3 பில்லியன் அமெரிக்க டொலர் அந்நிய செலாவணி உதவியை பாதிக்கலாம் என எச்சரித்தார்.

தபால் மூல வாக்குச்சீட்டுகள்...

ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித் துள்ளார். ஜனாதிபதித் தேர்தலில் 07 லட்சத்து 12 ஆயிரத்து 319 வாக்காளர்கள் தபால் மூலம் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. தபால்மூல வாக்களிப்பு எதிர்வரும் செப்டம்பர் 4,5 மற்றும் 6ஆம் திகதிகளில் நடைபெற வுள்ளமை குறிப்பிடத்தக்கது. மாவட்டச் செய லகங்கள், தேர்தல் அலுவலகங்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் செப்டம் பர் 04 ஆம் திகதி வாக்களிப்பதற்கு சந்தர்ப் பம் வழங்கப்பட்டுள்ளது. எனினும் மேற்படி 03 தினங்களிலும் தபால் மூலம் வாக்க ளிப்பை மேற்கொள்ள முடியாதவர்களுக்காக செப்டம்பர் 11 மற்றும் 12 ஆம் திகதிகள் மேலதிக தினங்களாக ஒதுக்கப்பட்டுள்ளன.

கெஹலிய உட்பட நால்வரின்...

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தரமற்ற தடுப்பூசிகளை இறக்குமதி செய்த குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக் வெல்ல, கடந்த பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல்...

ஐந்து முக்கிய பிரிவுகளில் இவ்விஞ்ஞாப னம் அமைந்துள்ளது. பொதுச் சேவை மறு சீரமைப்பு, ஆட்சேர்ப்பு உள்ளிட்டவை தகுதிக ளின் அடிப்படையில், வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவை ரூபா. 17,800 முதல் ரூ. 25,000 ஆக உயர்த்தல்

என்பவற்றை உள்ளடக்கி இந்த விஞ்ஞாப னம் வெளியிடப்பட்டுள்ளது.

இன்றைய பலன்கள்

(30.08.2024)



கலாநிதி சிவஶ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

மேஷம்:

பின்னர் செய்யலாமென்று தள்ளி வைத்த வேலையை உட னடியாக செய்ய வேண்டியது இருக்கும். காரியங்களில் சிறுசிறு தடைகள் இருந்தாலும் அவற்றை சமாளித்து முன்னேறுவீர்கள்.

ரிஷபம் :

உத்தியோகத்தர்கள் சிலருக்கு முயற்சியின் பெயரில் வெளியூர் மாற்றம் ஏற்படும். நண்பர்களால் பாராட்டு பெறுவீர்கள்.

மிதுனம்:

உங்கள் முயற்சிக்கு வெற்றியும் புகழும் கிடைக்கும். சிலருக்கு வீடு அல்லது மனை வாங்கும் யோகம் உண்டாகலாம். நீண்ட நாள் பார்க்காமல் இருந்த நண்பரை சந்திப்பதால் திடீர் திருப்பம் உண்டாகும்.

கடகம்:

வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கும் தொழில் வளர்ச்சிக்கு மான செயல்களில் ஈடுபடுவீர்கள். நீண்ட எதிர்பார்ப்பிற்கு பின் முக்கியமான காரியம் ஒன்று நடந்தேறும்.

சிம்மம்:

எதிர்பார்க்கும் இடங்களில் இருந்து பணம் வந்து சேரும். சகோதரி வழியில் மன வருத்தம் ஏற்படக்கூடும். எனவே பேச்சில் கடுமையை குறைப்பது நல்லது.

கன்னி:

நீங்கள் எடுக்கும் முயற்சிகளில் சிறிது தடை ஏற்பட்டாலும் தெய்வ பலத்தினால் அந்த தடைகளில் இருந்து விடுபட்டு முன் னேறுவீர்கள்.

துலாம்:

இந்த வாரம் இடையில் ஏற்பட்ட சிறுசிறு தடங்கல்களை இன் முகத்தோடு எதிர்கொண்டு தொடர் முயற்சியால் வெற்றி பெறுவீர் கள். வீடு அல்லது மனை வாங்கும் யோகம் உண்டாகும்.

விருச்சிகம்:

முக்கிய ஆவணங்களில் கையெழுத்து இடுவதை தவிர்க்கவும். உறவினர் இல்லத்து நிகழ்ச்சியில் மனைவி மக்களுடன் கலந்து கொள்வீர்கள்.

தனுசு:

செய்யும் காரியங்கள் நீங்கள் எதிர்பார்த்தபடி நடைபெறாமல் போகலாம். சேமிப்புகளை செலவழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகும். என்றாலும் முக்கியமானவர்களின் துணை கொண்டு வெற்றியை நோக்கி முன்னேறுவீர்கள்.

மகரம்:

கவனத்தோடும் நிதானத்தோடும் பணிகளில் ஈடுபடுவது அவசி யம். நிச்சயமாக நடைபெறும் என்று நம்பிய காரியம் முடிவடை யாமல் இழுத்தடிக்க படலாம்.

கும்பம்:

வாழ்க்கையில் முன்னேறவும் வசதிகளை பெருக்கிக் கொள்ள வும் பாடுபடுவீர்கள். உத்தியோகத்தர்களில் சிலர் சக பணியாளர்க ளின் மூலமாக பிரச்சனையை சந்திக்க நேரிடும்.

மீனம்:

இந்த வாரம் செய்ய வேண்டிய பணிகளை சிறப்பாக செய்து வெற்றி பெறுவீர்கள். நீண்ட காலமாக சந்திக்காத நபர் ஒருவரை சந்தித்து மகிழ்வீர்கள்.

ISIS அமைப்பை... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆஜர்படுத்திய பயங்கரவாத தடுப்பு மற்றும் புலனாய்வு பிரிவினர் விடுத்த கோரிக்கையை பரிசீலித்த நீதவான், இதற் காகன உத்தரவை பிறப்பித்தார்.

பொருபன பகுதியைச்சேர்ந்த சந்தேகந பரிடம் இருந்து பயங்கரவாத அமைப்பின் கொடிகள் மற்றும் சின்னங்கள் கொண்ட பல மோதிரங்கள் கைப்பற்றப்பட்டதாக விசா ரணைப் பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித் தனர் .

தீர்க்கமான முடிவு... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

நெருக்கடிக்குள்ளான கிரீஸ்,வெனிசுலா போன்ற நாடுகள் இன்னும் மீள எழும்ப முடியாத நிலையிலேயே உள்ளன. எமது நாடு இரண்டு வருட காலத்தில் நெருக்கடி யிலிருந்து மீள இயல்பு நிலைக்கு கொண் டுவரப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் ஆளுமை மிக்க தலைவரான ரணில் விக்கி ரமசிங்கவே.

நாட்டைப் பொறுப்பேற்க அழைத்த போது சஜித் பிரேமதாசவோ அல்லது அநுர குமார திசாநாயக்கவோ மறுத்து விட்டனர். அவர்க ளது இயலாமையை அதற்கு காரணம்.

இலவசமாக கிடைத்ததை... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நாட்டை பொறுப்பேற்க கூறிய போது அதை பொறுப்பேற்காதவர்கள், தற்போது இந்தளவு கோடிக் கணக்கில் நிதியை செலவழித்து அதற்காக போட்டியிடு கின்றனர். இலவசமாக அதனை கொடுக்கும் போது, பொறுப்பேற்காதவர்கள் கோடிக்க ணக்கில் செலவழித்து அதனை எடுக்கப் பார்க்கின்றனர்.

நாடு மிகவும் நெருக்கடியான நிலையில் இருந்த போது நாட்டைப் பற்றி அவர்கள் சிந்திக்கவில்லை. எரிபொருள், சமையல் எரிவாயு உட்பட அத்தியாவசியப் பொருட்கள் எதுவுமில்லாமல் மக்கள் தவித்த போதும் துறைமுகத்திற்கு கப்பல் வந்த போது எரி பொருளை இறக்கிக் கொள்ள டொலர் இல்லாத போதும் அவர்கள் நாட்டைப் பற்றி சிந்திக்கவில்லை.இப்போது பதவிக்காக போட்டியிடுகின்றனர். நாட்டில் 22 மில்லி யன் மக்கள் உள்ள நிலையில் அப்போது 20 மில்லியன் டொலரே கையிருப்பாக காணப்பட்டது.

சஜித் பிரேமதாச அனுரகுமார திசாநா யக்க, சரத் பொன்சேக்கா போன்றோரை நாட்டை பொறுப்பேற்றுமாறு அன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அழைத் தார் அவர்கள் அனைவருமே மறுத்து விட்டனர். தனி ஒரு மனிதனாக சவாலை ஏற்பதற்கு ரணில் விக்கிரமசிங்க மட்டுமே முன் வந்தார். நாம் சஜித் பிரேமதாசவிடம் நாட்டை பொறுப்பேற்குமாறு தெரிவித் தோம். அவர் அதனை மறுத்துவிட்டார். சந் தர்ப்பம் வரும்போது அதிகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். மீண்டும் அந்த சந்தர்ப் பம் கிடைக்காது என்பதை அவர் அப்போது உணரவில்லை. எனினும் இப்போது அந்த வாய்ப்புக்காக ஓடித் திரிகின்றார்.

அதேபோன்று நாட்டு மக்கள் சிந்திக்க வேண்டும். இம்முறை சரியான தீர்மா னத்தை எடுக்கத் தவறினால் நாடு மீண்டும் அழிவையே எதிர்நோக்கும். நாட்டைப் பற்றி சிந்தித்து நாட்டின் எதிர்காலத்தை பற்றி சிந் தித்து செயல்படும் ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க மட்டுமே. அந்த சந்தர்ப் பத்தை மக்கள் இழந்து விடக்கூடாது இழந் தால் மீண்டும் பெற்றுக்கொள்ள முடியா மலே போகும்.

பிரதமர் தலைமையில் ஜனஜய...

எட்ஜ் ஹோட்டலில் இப்புதிய கூட்டணி உத யமாகும். இப்புதிய அரசியல் கூட்டமைப்பு இனி

இஸ்லாத்தின் பார்வையில் வாக்குரிமை

இஸ்லாத்தில் வாக்குரிமை பற்றி இஸ்லாமிய சட்ட வல்லுநர்கள் பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். அவற்றின் சுருக்கத்தை "மஆரிபுல் குர்ஆன்" என்ற அல்குர்ஆன் விரிவுரையில் அதன் ஆசிரியர் முப்தி ஷபீ உஸ்மானி மிகத் தெளிவாக முன்வைத்திருக்கிறார். இஸ்லாத்தில் வாக்களித்தல் என்பது 4 தலைப்புக்களின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றன.

01. ஷஹாதத் (சாட்சி சொல்லல்)
02. ஷபாஅத் (பரிந்துரைத்தல்)
03. வகாலத் (பிரதிநிதித்துவப்படுத்தல்)
4. அமானிதத்தைப் பேணல்



சாட்சி சொல்லல்

பொதுவாக தேர்தலில் வாக்களிப்பது என்பதன் பொருள் சாட்சி சொல்வதாகும். நாட்டில் நடைபெறும் அனைத்து வகையான தேர்தல்களிலும் வேட்பாளர்களுக்கு வாக்களிப்பதென்பது குறித்த அபேட்சகரின் தகைமை, நேர்மை, நம்பகத்தன்மையில் அவர் மிகவும் பொருத்தமானவர் என்றும் சமூகத்தின் பிரதிநிதியாக அல்லது நாட்டின் தலைவராக வருவதற்குத் தகுதியானவர் என்றும் வாக்காளர் வழங்கும் சாட்சியாகும்.

இஸ்லாமிய சட்டப்பரப்பில் அதன் அந்தஸ்தை நோக்கும்போது, தேசத்தினதும் பொதுமக்களினதும் நலன்கள் தேர்தல்களில் தங்கியிருப்பதால் வாக்குரிமையுள்ள சகலரும் தகுதியான வேட்பாளருக்கு சாட்சி பகர்வது அல்லாஹ்விற்கு செய்ய வேண்டிய கடமை என்றே இஸ்லாமிய சட்ட வல்லுநர்கள் குறிப்பிடுகின்றனர்.

தேசத்தின் பொது நலனைக் கருத்திற் கொண்டு சிறுபான்மையாக வாழும் முஸ்லிம் குடிமகன் மிகப் பொருத்தமான, தகுதிவாய்ந்த ஒருவருக்கு வாக்களிப்பது அடியார்கள் அல்லாஹ்வுக்கு செய்யும் கடமை என்ற தரத்தில் வைத்தே நோக்கப்படும். காரணம், அல்குர்ஆனிலும் ஸுன்னாவிலும் இடம்பெற்றுள்ள 'சாட்சி பகர்தல்' என்ற வார்த்தையானது வாக்களித்தல் என்பதற்கு சமனானதாகும். அதாவது வாக்குரிமை என்பது சாட்சியமாகும். இந்தப் புரிதலில் இஸ்லாமிய சட்டத்துறை மற்றும் அரசியல்துறை அறிஞர்களிடம் கருத்தொற்றுமை நிலவுகிறது.

மேலும் தேர்தல் காலங்களில் மக்களுக்கு வழங்கப்படும் வாக்காளர் அட்டை என்பது சாட்சி பகர்வதற்கான உத்தியோகபூர்வ அழைப்பாகும். 'சாட்சி சொல்ல வேண்டிய வர்கள் அழைப்பு விடுக்கப்பட்டால் மறுக்கக் கூடாது' (பகரா:282) என அல்குர்ஆன் பணிக்கிறது.

அவ்வாறே வாக்குரிமையை பகிஷ்கரிப்பதும் மறைப்பதும் குற்றமென்ற கருத்தை அல்குர்ஆன் மேலும் வலியுறுத்துகிறது. 'சாட்சியத்தை நீங்கள் மறைக்கவும் வேண்டாம். எவரேனும் அதனை மறைத்தால் நிச்சயமாக அவருடைய உள்ளம் பாவத்திற்குள்ளாகி விடுகின்றது' என அல்லாஹ் கூறுகிறான். (பகரா:283)

எனவே, வாக்குரிமையை பயன்படுத்துவது மிக முக்கியமான விடயம் என்பது புலனாகின்றது.

பரிந்துரைத்தல்

நாட்டில் நீதி, நியாயம் நிலைநாட்டப்படவும் ஐக்கியம், மறுமலர்ச்சி தளைத்தோங்கவும், நாட்டின் தேசிய நிர்மாணத்தைக் கட்டியெழுப்பவும் கூடிய ஒருவரை தெரிவுசெய்ய வாக்களிப்பதை ஷபாஅத் எனும் பரிந்துரைத்தல் என்ற கண்ணோட்டத்திலும் நோக்கலாம். இதனை அல்குர்ஆன் அங்கீகரிப்பதோடு வர வேற்கக்கூடியதாகவும் உள்ளது.

யார் சிறந்த முறையில் பரிந்துரைக்கிறாரோ அவருக்கு அதில் பங்குண்டு (நிஸா: 85) என அல்லாஹ் கூறுகிறான். சிறந்த பரிந்துரைப்பும், அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளின் நன்மைகளும் பரிந்துரைப்பவருக்கும் சேருமென அல்குர்ஆன் சிலாகித்து கூறியுள்ளது.

அதுமட்டுமல்லாமல் சுன்னாவிலும் இதற்கு எடுத்துக்காட்டு உள்ளது. நீங்கள் பரிந்துரையுங்கள் அதற்கு கூலி கொடுக்கப்படுவீர்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: நபிமொழி)

பிரதிநிதித்துவப்படுத்தல்

தேர்தலில் வாக்களித்தல் என்பதற்கு பிரதிநிதியாக நின்று குரல் கொடுப்பவரை நியமித்தல் என்றும் சிலர் அர்த்தம் கொடுத்துள்ளனர். அதாவது வாக்காளர் தன் சார்பாக குரல் கொடுப்பதற்கும், உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் தேச நலன்களையும், மக்கள் நலன்களையும் அவதானிப்பதற்கும் ஒரு முகவரை அல்லது பிரதிநிதியை தெரிவு செய்யப்படுகிறார் என்பதே இதன் பொருளாகும். இதுவும் வாக்குரிமை குறித்த சட்டபூர்வமான ஒரு பார்வையாகும்.

அமானத் – அமானிதம்

நம்பகத்தன்மையுடன் செயற்படல், அமானிதம் பேணலாகும். நாம் அளிக்கின்ற வாக்கு நமக்குக் கிடைத்துள்ள நமது உரிமையாகும். அந்த உரிமையை துஷ்பிரயோகம் செய்வது நாம் மோசடியில் ஈடுபடுகின்றோம் என்று தான் பொருளாகும். யார் எதற்கு பொருத்தமானவர்களோ, தகுதியானவர்களோ அவர்களை இனங்கண்டு அவர்களுக்குப் பொருத்தமான வற்றை ஒப்படைத்தல் அமானத் சார்ந்த அம்சமாகும். தகுதியற்றவர்கள் தாமாக பொறுப்புக்கு வருவதும் தகுதியற்றவர்களுக்கு பதவிகள், பொறுப்புக்கள் வழங்கப்படுவதும் இஸ்லாத்தின் பார்வையில் மிகப்பெரும் குற்றச்செயல்களாகும்.

இறைவன் கூறுகின்றான், 'அமானிதங்களை அதற்குரியோரிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும், மக்கள் மத்தியில் தீர்ப்பளிக்கும் போது நீதியாக நீங்கள் தீர்ப்பளிக்க வேண்டும் எனவும் அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகிறான். அல்லாஹ்வின் இந்த அறிவுரை உங்களுக்கு மிகவும் நல்லது. அல்லாஹ் செவியுறுபவனாகவும், பார்ப்பவனாகவும் இருக்கிறான். (ஸூரா அந்நிஸா – 4:58)

அல்லாஹ் அல்குர்ஆனில், 'இன்னும் அவர்கள் எத்தகையோரென்றால் தங்களின் அமானிதங்களையும், (தாங்கள் செய்த) வாக்குறுதிகளையும் பேணிக்கொள்கின்றனர். அவர்கள் தங்களுடைய சாட்சியங்களை நிறைவேற்றுவதில் உறுதியாக இருக்கின்றவர்கள். இன்னும் அவர்கள், தங்கள் தொழுகையின் மீது பேணுதலுடையவர்கள். மேற்கூறப்பட்ட தகுதியுடைய அவர்கள் சுவனங்களில் மிக கண்ணியப்படுத்தப்படுவார்கள்." (சூரத்துல் மஆரிஜ்: 3235)

மேலுள்ள வசனங்கள் யாவும் முஃமின்களினதும் தூய்மையான வணக்கசாலிகளினதும் பண்பாடுகள், குணநலன்கள் பற்றிப் பேசுகின்றன. வணக்கங்களின் மிக முக்கியமான வெளிப்பாடாகவே நம்பகத்தன்மையுடன் செயற்படல், வாக்குறுதிகளைப் பேணிக் கொள்ளுதல், சாட்சியங்களை நிறைவேற்றுவதில் உறுதியாக இருத்தல் போன்ற அம்சங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

எனவே, எமது பொறுப்பிலுள்ள வாக்குப் பலத்தை பயன்படுத்துவது ஓர் அடிப்படையான விடயமாகும். முதலில் அதை நிறைவேற்றுவோம். தூய எண்ணத்துடன் செயற்படும் போது அதற்கு நிச்சயம் கூலி கிடைக்கப்பெறும்.

அஷ் ஷெய்க் மின்ஹாஜ் முப்தி காஷிபி
நிந்தவூர்



அமைதியை நிலைநாட்டுவோம்!

அமைதியைக் குறித்து வெறுமனே பேசிக்கொண்டிருக்கும் மார்க்கம் அல்ல இஸ்லாம். மாறாக அதனைச் செயலளவில் நடைமுறைப்படுத்துவதற்கான பயிற்சியையும் முஸ்லிம்களுக்கு வழங்குகிறது. ஒரு நாடு நல்ல நாடாக இருக்க வேண்டுமெனில் அங்கு அமைதியான சூழல் நிலவ வேண்டும். அந்த அமைதியான சூழலை நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்துதான் உருவாக்க முடியும். வாழும் நாட்டில் அமைதியை நிலைநாட்டும் பணியில் முஸ்லிம்களுக்கும் பெரும்பங்கு உள்ளது.

இஸ்லாம் என்பதே அமைதி மார்க்கம்தான். 'ஸலாம்' (அமைதி) எனும் வேர்சொல்லில் இருந்துதான் 'இஸ்லாம்' எனும் சொல் உருவாகிறது. அதுமட்டுமல்ல, ஒவ்வோர் இறைநம்பிக்கையாளரையும் ஏக இறைவன் இந்த அமைதியின்பால் இவ்வாறு அழைக்கின்றான்:

"இறைநம்பிக்கை கொண்டோரே, நீங்கள் முழுக்க முழுக்க இஸ்லாத்தில் நுழைந்துவிடுங்கள்" (அல் குர்ஆன் 2:208).

இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் 'இஸ்லாம்' எனும் பதத்தைக் குறிக்க, மூலத்தில் 'ஸில்ம்' என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு இரண்டு பொருள்கள் உள்ளன. அவற்றில் ஒன்று அமைதி. மற்றையது இஸ்லாம் ஆகும்.

இந்த வசனத்தின் பொருளை ஒருவகையில் இப்படியும் கூறலாம். 'இறைநம்பிக்கை கொண்டோரே, நீங்கள் முழுக்க முழுக்க அமைதியில் நுழைந்துவிடுங்கள். போருக்கு எதிரான அமைதியில் நுழைந்துவிடுங்கள்'. இரு முஸ்லிம்கள் சந்தித்துக்கொண்டால் இருவரும் கூறவேண்டிய முகமன் என்ன? 'அஸ்ஸலாமு அலைக்கும்'. (உங்கள் மீது சாந்தியும் அமைதியும் உண்டாவதாக!) அதற்கான பதிலை அடுத்தவர் எவ்வாறு கூற வேண்டும்?

'வ அலைக்குமுஸ்ஸலாம்'. (உங்கள் மீதும் இறைவனின் சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக)

உலகில் முஸ்லிம்கள் ஒவ்வொரு நாளும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது, 'அஸ்ஸலாமு அலைக்கும், வ அலைக்குமுஸ்ஸலாம்' என்று கூறுவதன் மூலம் அவர்கள் வாழும் பகுதியில் எவ்வளவு பெரிய அமைதியை ஏற்படுத்த அவர்கள் முயலுகின்றனர் என்பதை எண்ணிப் பார்க்க ஆகவேதான் 'ஹிஜ்ரத்' எனும் புலம் பெயர்தலின்போது மதீனாவில் முதன் முதலாக இறைத் தூதர் (ஸல்) அவர்கள் நுழைந்த வேளையில் மக்களிடம் கூறினார்கள்: "மக்களே..., ஸலாமை (அமைதியைப்) பரப்புங்கள். அறிந்தவர் அறியாதவர் அனைவர் மீதும் ஸலாமைப் பரப்புங்கள்". (ஆதாரம்: முஸ்லிம்) நபி (ஸல்) அவர்கள், பிற நாட்டு அரசர்களுக்கு கடிதம் எழுதும்போது அந்தக் கடிதத்தை இவ்வாறுதான் தொடங்குவார்கள்: "நேர்வழியைப் பின்பற்றி நடப்போருக்கு சாந்தி உண்டாகட்டும்" (அல் குர்ஆன் 20:47)

வாழும் தேசத்தில் அமைதியை நிலைநாட்டும் முஸ்லிம்களுக்கு மறுமையில் இறைவன் தரும் சுவனத்தின் பெயர் என்ன தெரியுமா? 'தாருஸ் ஸலாம்' (அமைதி இல்லம்) ஆகும். சுவனத்தின் இன்னொரு பெயர்தான் இது. அங்கு வீணான தேவையற்ற பாவமான பேச்சுகள் எதுவும் பேசப்படமாட்டாது. மாறாக, அங்கு என்ன பேசப்படும் என்பது குறித்தும் திருக்குர்ஆன் இவ்வாறு குறிப்பிடுகிறது: "அங்கு அவர்கள் வீண் பேச்சுகளையோ, பாவமான விஷயங்களையோ செவியேற்க மாட்டார்கள், சாந்தி சாந்தி என்ற பேச்சைத் தவிர". (அல் குர்ஆன் 56:25,26)

போர் என்பது இரத்தமும் சதையுமாக பல உயிர்களை காவு கொள்ளும் ஒரு வெறுக்கத்தக்க செயல். இஸ்லாமும் தற்காப்புப் போர்களில் ஈடுபட்டுள்ளது. ஆயினும் போர்களில் கிடைக்கும் வெற்றியை ஒருபோதும் இஸ்லாம் சிலாகித்துக் கூறுவதில்லை.

ஆனால் கத்தியின்றி இரத்தமின்றி கிடைத்த ஹுதைபிய்யா உடன்படிக்கை குறித்து கூறும் போது மட்டும், "(நபியே) நாம் உமக்கு வெளிப்படையான வெற்றியை அளித்துவிட்டிருக்கிறோம்" என்று கூறுகின்றான் இறைவன். (அல் குர்ஆன் 48:1)

ஹுதைபிய்யா உடன்படிக்கை என்பது பத்து வருடங்கள் போர் செய்யக்கூடாது எனும் உடன்படிக்கையாகும். அந்த உடன்படிக்கையைத்தான் இறைவன் 'தெளிவான வெற்றி' என்று அறிவிக்கின்றான். உடன்படிக்கையை தெளிவான வெற்றி என்று அறிவிப்பதில் இருந்தே இஸ்லாம் எந்த அளவுக்கு அமைதியை விரும்புகின்றது என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

ஒருவருடைய பெயரில் கூட வன்முறையைக் குறிக்கும் சொற்கள் இருக்கக் கூடாது என்று இஸ்லாம் விரும்புகின்றது.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள். "போர் (ஹர்ப்), கசப்பு (முர்ரா) என்பவை வெறுக்கத்தக்க பெயர்கள் ஆகும் என்று குறிப்பிட்டார்கள். (ஆதாரம்: அஹ்மத், அபூதாவூத்)

ஒருமுறை ஓர் ஒட்டகத்தில் இருந்து பால் கறக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. அருகில் இருந்த மக்களிடம் நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள்: "இந்த ஒட்டகத்திலிருந்து யார் பால் கறப்பார்கள்?". அப்போது ஒருவர் முன் வந்தார். அவரிடம் நபி (ஸல்) அவர்கள், "உமது பெயர் என்ன?" என்று கேட்டார்கள். அவர், "முர்ரா" (கசப்பு) என்றார். உடனே நபி (ஸல்) அவர்கள், "உட்கார்" (நீர் பால் கறக்க வேண்டாம்) என்றார்கள். மீண்டும் ஒருவர் எழுந்தார். அவரிடமும் நபி (ஸல்) அவர்கள், "உமது பெயர் என்ன?" என்று கேட்டார்கள். அவர், "ஹர்ப்" (போர்) என்றார். உடனே நபி (ஸல்) அவர்கள், "உட்கார்" (பால் கறக்க வேண்டாம்) என்றார்கள். மூன்றாவதாக ஒருவர் எழுந்தார். அவரிடமும் நபி (ஸல்) அவர்கள், "உமது பெயர் என்ன?" என்று கேட்டார்கள். அவர், "யஈஷ்" (உயிருடன் வாழ்பவர்) என்றார். அவரிடம் பால் கறக்குமாறு நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: அஹ்மத், ஹாகிம்)

ஆக, பெயரில்கூட வன்முறையும் அமைதியின்மையும் இருப்பதை நபி (ஸல்) அவர்கள் பொருந்திக்கொள்ளவில்லை என்பது இதிலிருந்து தெரிய வருகின்றது. எனவே பெயரில் கூட அமைதியின்மையை விரும்பாத மார்க்கத்தின் சொந்தக்காரர்கள் நாம்.

அமைதியைக் குறித்து வெறுமனே பேசிக் கொண்டிருக்கும் மார்க்கம் அல்ல இஸ்லாம். மாறாக அதனைச் செயலளவில் நடைமுறைப்படுத்துவதற்கான பயிற்சியையும் முஸ்லிம்களுக்கு வழங்குகிறது. ஹஜ் என்ற பெயரில் உலகளாவிய முஸ்லிம்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் அமைதிப் பயிற்சியை இஸ்லாம் வழங்குகிறது.

ஹஜ்ஜை நிறைவேற்றுபவர் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகள் குறித்து கூறும் போது அல்லாஹ் கூறுகின்றான்: "ஹஜ்ஜின்போது இச்சைகளைத் தூண்டக்கூடிய சொல், செயல் மற்றும் தீவினை, சண்டை சச்சரவு ஆகியவற்றில் ஈடுபடக் கூடாது". (அல் குர்ஆன் 2:197)

நாம் வாழும் தேசத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்கு இயன்றவரை பாடுபட வேண்டும். இல்லையேல் குறைந்தபட்சம் இப்ராஹீம் (அலை) அவர்கள் தாம் வாழ்ந்த நாட்டுக்காகப் பிரார்த்தனை செய்ததைப்போன்றாவது பிரார்த்திக்க வேண்டும். 'என் இறைவனே! (மக்காவாகிய) இந்நகரத்தை அமைதி அளிக்கக்கூடியதாக ஆக்குவாயாக!" (அல் குர்ஆன் 14:41)

மின்ஸார் இப்றாஹிம்

அல்லாஹ் நாடினால்...

திருக்குர்ஆனின் மூன்றாம் அத்தியாயமான, ஆலஇம்ரானில், மர்யம் (அலை) அவர்களின் பிறப்பு வரலாற்றை அல்லாஹ் விரிவாகக் கூறியுள்ளான்.

அதாவது, இம்ரானின் மனைவி ஹன்னா ஆண் குழந்தை பெறும் ஆசையில் அல்லாஹ்விடம் ஒரு நேர்ச்சை செய்தார். 'நான் கர்ப்பமுற்றிருக்கும் இந்த பிள்ளையை அல்லாஹ்விற்காக நான் அர்ப்பணம் செய்து விடுவேன்' என்றாகும். ஆனால் அவள் பெற்றெடுத்ததோ பெண் குழந்தையாக இருந்தது.

'அவர் (தன் விருப்பத்திற்கு மாறாக) ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தபோது 'என் இறைவனே! நான் ஒரு பெண்ணையே பெற்றேன்' என்று கூறினார். ஆயினும் (அவர் விரும்பிய) ஆண், இந்தப் பெண்ணைப் போன்றல்ல என்பதை அல்லாஹ் (தான்) நன்கறிவான். (பிறகு இம்ரானின் மனைவி) நிச்சயமாக நான் அதற்கு "மர்யம்" எனப் பெயரிட்டேன். அதனையும், அதன் சந்ததியையும் விரட்டப்பட்ட ஷைத்தானி (ன் வஞ்சனைகளி)லிருந்து நீ காப்பாற்ற உன்னிடம் பிரார்த்திக்கின்றேன்!' என்றார்" (அல் குர்ஆன் 3:36)

அந்த தாயின் விருப்பம் ஒன்றாக இருந்தாலும் அல்லாஹ்வின் விருப்பம் வேறாக இருந்தது. ஆண் பிள்ளையை விட இப்பெண் குழந்தைக்கு அல்லாஹ் அதிக கண்ணியத்தையும் அந்தஸ்தை கொடுத்திருந்தான்.

எந்தவித ஆணின் தொடர்பும் இன்றி அல்லாஹ்வுடைய ரூகானியத்தை (உயிர் மூச்சை) மர்யமின் கர்ப்பப்பையில் ஊதினான். அதன் மூலம் ஈஸா (அலை) என்ற இறைத்தூதரை பிறப்பிக்கச் செய்தான்.

ஆதம் (அலை) அவர்களைக் களிமண்ணால் படைத்து ரூஹை ஊதியது போல், ஈஸா நபியையும் ரூஹால் ஊதி படைத்தான். அத்தகைய சிறப்பை மர்யம் (அலை) அவர்கள் பெற்றது அவர்களுக்கு கிடைத்த மாபெரும் கண்ணியமாகும். அல்லாஹ் நாடினால் எதையுமே "குன்" என்ற வார்த்தை சொன்னால் போதும் அது உருவாகி விடும். இதுதான், இப்படித்தான் என்ற உலக நியதிகளோ, காரண காரியங்களோ அவனுக்குத் தேவையில்லை.

மர்யமின் தாயாரின் நேர்ச்சையின் பிரகாரம் பலஸ்தீனிலுள்ள பைத்துல் முகத்தஸ் இறை இல்லத்தில் அவர் ஒப்படைக்கப்பட்டார். என்றாலும் அவர் சிறுமியாக இருந்த காரணத்தால் அவரை வளர்க்கின்ற பொறுப்பை யார் ஏற்பது என்ற சர்ச்சை எழுந்தது. அப்போது பனி இஸ்ரவேலர்கள் வாழ்வில் இருந்த பழக்க முறைப்படி எழுதுகோல்களை ஆற்றில் எறிந்து முடிவு செய்ய எண்ணினர்.

அதன் அடிப்படையில் அப்போது பைத்துல் முகத்தஸ் ஆலயத்தின் தலைமை இமாமாக இருந்த நபி ஸக்கரியா (அலை) அவர்கள் அந்த பொறுப்பை ஏற்க முடிவு செய்யப்பட்டது. அவர்களின் அன்பின் அரவணைப்பில் மர்யம் (அலை) அவர்கள் வளர்ந்து வந்தார்கள்.

ஆகவே அவருடைய இறைவன் அதனை அன்பாய் அங்கீகரித்து பரிசுத்தமாகவும் அழகாகவும் அதனை வளரச் செய்து, அதனை வளர்க்க ஸக்கரியா பொறுப்பேற்று கொள்ளுமாறும் செய்தான்.

ஸக்கரியா அந்த பிள்ளை இருந்த மாடத்திற்குள் நுழையும் போதெல்லாம் அவளிடத்தில் ஏதேனும் உணவு பொருள் இருப்பதை கண்டு 'மர்யமே, இது உனக்கு ஏது? எங்கிருந்து வந்தது' என்று கேட்டார். அதற்கு அவர் 'இது அல்லாஹ்விடமிருந்து தான் வருகிறது. ஏனென்றால் நிச்சயமாக அல்லாஹ் தான் விரும்பியவர்களுக்கு அளவின்றியே உணவளிக்கின்றான்' என்று கூறினார்". (அல் குர்ஆன் 3:37)

மர்யமே! நீயோ உன் புனிதத்தன்மையை காப்பதற்காக மறைவான மாடத்தில் வசிக்கிறாய். வெளியே சென்று கனிகளைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பில்லை. ஆனால் நான் உன்னை காண வரும் போதெல்லாம் உன்னிடம் அந்த காலகட்டத்தில் விளைச்சல் இல்லாத, இந்த பாலைவனத்தில் விளையவே முடியாத அபூர்வ கனிவர்க்கங்கள் இருக்கின்றனவே. இதன் உண்மைத் தன்மை என்ன" என்றார்.

"என் இறைவன் எல்லாவற்றுக்கும் ஆற்றலுடையவன். அவன் நாடினால் எதையும் தருவதற்கு எந்த தடையும் அவனுக்கு இல்லை. நம் தேவைக்காக கையேந்தினால் மறுகணம் அது நிகழ்ந்து விடுமே" என்று மர்யம் (அலை) பதிலுரைத்தார்கள்.

இந்த பதில் ஸக்கரியா (அலை) அவர்கள் மனதில் ஓர் மாற்றத்தை ஏற்படுத்தியது. 'இத்தனை ஆண்டு காலம் நபியாய் இருந்து அல்லாஹ்வின் ஏகத்துவத்தை எடுத்தியம்பிக் கொண்டிருக்கிறேன். பனி இஸ்ரவேலர்களில் மிக சொற்பத் தொகையினரே அதனை ஏற்றுக் கொண்டார்கள். எனக்கோ வயது முதிர்ந்து விட்டது. என்னைத் தொடர்ந்து இந்தப் பணியைச் செய்வதற்கு எனக்கென ஒரு சந்ததி இல்லை. நானும் முதியவன். என் மனைவியும் மலடு. எங்களுக்கு இனி எங்கே பிள்ளைப் பிறக்கப் போகிறது என்ற சந்தேகத்தில் வீணே நாட்களைக் கடத்தி விட்டேன். அல்லாஹ்விடம் மன்றாடி கேட்டால் அத்தனையும் கிடைக்கும் என்ற ஞானம் எனக்கு இல்லாமல் போய்விட்டது. மர்யமிற்கு அளித்த இப்பாக்கியத்தை எனக்கும் வழங்க அல்லாஹ்வே எனக்கு போதுமானவன்', என்று எண்ணிவர்களாக இருகரம் ஏந்துகின்றார்கள்.

"என் இறைவனே! உன் புறத்திலிருந்து எனக்கு ஒரு நல்ல சந்ததியை அளிப்பாயாக. நிச்சயமாக நீ பிரார்த்தனைகளை செவியேற்பவனாக இருக்கின்றாய்" என்று கூறினார். (அல் குர்ஆன் 3:38)

அல்லாஹ் அவர்களுடைய துஆவை எந்தவித நிபந்தனையுமின்றி உடனே ஏற்றுக்கொண்டான். 'ஆகவே அவர் மாடத்தில் (மிஹ்ராப்) நின்று தொழுது கொண்டிருந்த சமயத்தில் அவரை நோக்கி மலக்குகள் சப்தமிட்டு கூறினார்கள். ஸக்கரியாவே! நிச்சயமாக அல்லாஹ் யஹ்யா என்ற ஒரு மகவை உங்களுக்கு அளிப்பதாக நற்செய்தி கூறுகின்றான்'. (அல் குர்ஆன் 3:39)

யஹ்யா என்று பெயரிடப்பட்ட ஒருவரையே அல்லாஹ் அவருக்கு வாரிசாகவும், ஒரு நபியாகவும் அளித்து அருட்கிருபை செய்தான். இதன் மூலம் நாம் கற்றுக்கொள்ளும் பாடம், உறுதியான நம்பிக்கையோடு எந்த ஒரு பிரார்த்தனையையும் அல்லாஹ்விடம் சமர்ப்பிக்கும் போது, அது ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு எந்த தடையும் இருக்காது என்பது தான்.

இதே போன்ற நிகழ்வு ஒன்று இப்ராஹீம் (அமனல) அவர்களின் வாழ்விலும் நடந்தேறியது. ஒரு காலகட்டத்தில் லூத் நபியின் கூட்டத்தார் மானக்கேடான செயலில் ஈடுபட்டு வந்தனர். லூத் நபியின் எந்த போதனையையும் அவர்கள் ஏற்றுக்கொள்ள தயாராய் இல்லை. எனவே அந்த கூட்டத்தாரை அழிப்பதற்கான ஆணை அல்லாஹ்விடமிருந்து பிறப்பிக்கப்பட்டது. அதனை நிகழ்த்திக் காட்டும் மலக்குகள் லூத் நபியின் கூட்டத்தார் வசித்து வந்த பகுதிக்கு அருகாமையில் வாழ்ந்து வந்த இப்ராஹீம் (அலை) அவர்களைச் சந்தித்து விவரம் சொல்ல அல்லாஹ் கட்டளையிட்டிருந்தான். அதோடு இப்ராஹீம் (அலை) அவர்களுக்கும் ஒரு நற்செய்தியைச் சொல்லி அனுப்பினான்.

அதே சமயத்தில் அவருக்கு 'இஸ்ஹாக்' என்னும் மகனைப் பற்றியும் இஸ்ஹாக்கிற்கும் பின்னர் 'யாகூப்' என்னும் பேரன் பிறக்கப் போவதைப்பற்றியும் நற்செய்தி கூறச் செய்தோம்." (அல் குர்ஆன் 11:71)

அந்த செய்தி கேட்ட இப்ராஹீம் (அலை) அவர்களின் மனைவி சாரா அதிர்ச்சி அடைந்தார். 'மாதவிடாய் நின்று நான் கிழவியாகவும், என்னுடைய கணவர் ஒரு வயோதிபராகவும் ஆனதன் பின்னர் நான் கர்ப்பமாகி பிள்ளை பெறுவேனா. நிச்சயமாக இது ஆச்சரியமான விஷயம்" என்றாள். (அல் குர்ஆன் 11:72)

பேதைப்பெண்ணே! அல்லாஹ்வின் அருட் கிருபையில் நிராசையாகி விடாதே என்ற மலக்குகள், "அல்லாஹ்வுடைய சக்தியைப் பற்றி நீ ஆச்சரியம் அடைகிறாயா? அல்லாஹ்வுடைய அருளும் அவனுடைய பாக்கியங்களும் இப்ராஹீமுடைய இவ்வீட்டிலுள்ள உங்கள் மீதுள்ளன. நிச்சயமாக அவன் மிக்க புகழுடையவனாகவும், மகிமையுடையவனாகவும் இருக்கின்றான்" என்று கூறினார்கள். (அல் குர்ஆன் 11:73)

எனவே அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கை கொண்டு ஸக்கரியா (அலை) அவர்கள் கேட்ட அந்த துஆவை கேட்டு வந்தால், கர்ப்பம் கொள்ள எந்த ஒரு அனுகூலமும் இல்லாத ஒருவருக்கு கூட அல்லாஹ்வின் கிருபையால் பிள்ளைப் பேறு கிட்ட நிச்சயமாக வழிபிறக்கும். இது பலரின் வாழ்வில் உணர்த்தப்பட்ட உண்மையாகும்.

இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு அன்னை சாரா மூலம் இஸ்ஹாக் (அலை) அவர்களையும் அன்னை ஹாஜரா மூலம் இஸ்மாயில் (அலை) அவர்களையும் அல்லாஹ் அருளினான் என்பது அருள்மறையில் பதிவு செய்யப்பட்ட வசனமாகும். அல்லாஹ் எதையும் தருவதற்கு ஆற்றலுடையவன். நம் நம்பிக்கையும் பிரார்த்தனையுமே அதனை நடத்திக் காட்டக்கூடிய சக்திகளாகும்.



அபூ முஷ்ரா

'ரணிலுடன் இலங்கைக்கு வெற்றிகரமான 05 வருடங்கள்'

தேர்தல் விஞ்ஞாபனம் வெளியீடு

நாட்டின் பொருளாதாரம் வெடித்துச் சிதறிய வேளை எந்தவொரு அரசியல் கட்சியோ, எந்தவொரு தலைவரோ நாட்டை மீளக்கட்டியெழுப்பும் சவாலை பொறுப்பேற்கவில்லை. நான் அதைப் பொறுப்பேற்றேன்.

அந்தக் கதையை நீங்கள் யாவரும் அறிவீர்கள்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் காணப்பட்ட அந்த அராஜக நிலைமை உங்களுக்கு நினைவில் இருக்கிறதா?

சமையல் எரிவாயு சிலிண்டர்களைத் தோள்களில் சுமந்து கொண்டு நாட்க ணக்கில் வரிசைகளில் நின்றோம். தாய் காலையில், மகள் மாலையில், தகப்பன் நடுநிசியில், மகன் அதிகாலையில். முச்சக் கர வண்டிக்கு, வாகனத்துக்கு பெற்றோல் கொஞ்சம் நிரப்புவதற்கு இரவு முழுவதும் வாகனத்துக்குள் நித்திரை விழித்தோம். எரிபொருள் வரிசைகளில் உயிரிழப்புக்கள் கூட நிகழ்ந்தன.

நாட்டை வெற்றியடையச் செய்யும் ஐந்தாண்டுகள்

சொல்வதற்கு யாரும் இருக்கவில்லை. செவிசாய்ப்பதற்கு ஒருவரும் இருக்க வில்லை. நெருக்குதலைத் தாங்க முடியா மல் மக்கள் வீதியில் இறங்கினர். ஆர்ப்பாட் டம் நடத்தினர். வீடுகளுக்கு தீவைத்தார்கள், பாராளுமன்ற உறுப்பினர்களை நடுவீதியில் கொலை செய்தார்கள்.

பிரதமர் இராஜினாமாச் செய்தார். ஜனா திபதி விலகிச் சென்றார். மார் தட்டிக் கொண்டிருந்தசகலஅரசியல்தலைவர்களும் தன்னால் முடியாதெனக் கூறி மூலைமுடுக் குகளில் ஓடிஒளிந்து கொண்டனர்.

நான் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக பாரா ளுமன்றம் சென்ற ஒரு தனி மனிதன். இறு தியாக எனது வீட்டுக்கும் தீவைத்தார்கள். முழுநாடும் தீப்பற்றி எரிந்தது.

மீண்டும் ஒருபோதும் அமைதியான ஒரு நாட்டை, துன்பமின்றி வாழ முடியு மான ஒரு நாட்டை உருவாக்க முடியுமென ஒருவர் கூட நினைக்கவில்லை. அது ஒரு கனவாகத்தான் இருந்தது.

ஆனாலும் எப்பொழுதும் அளவு கடந்து நாட்டை நேசித்த நான், பற்றி எரியும் இந்த நாட்டைக் கண்டு ஓடி ஒளிந்து கொள்ள விரும்பவில்லை. உயிரைப் பணயம் வைத்து எரியும் நெருப்பில் குதித்து நெருப்பை அணைத்தேன்.

இன்று இந்த நாட்டில் மக்கள் புன்ன கைப்பதைக் காணும் போது, கஷ்டத்துட னேனும் மூவேளையும் சாப்பிடுவதைக் காணும் போது, முச்சக்கர வண்டி – வாக னங்கள் பாதையில் செல்வதைக் காணும் போது, நீண்ட நாட்களுக்குப் பின்னர் புத்தாண்டு கொண்டாட்டங்கள், தைப் பொங்கல் கொண்டாட்டங்கள், ராமழான் கொண்டாட்டங்கள் மகிழ்ச்சியுடன் கொண் டாடப்படுவதைக் காணும் போது, வெசாக் தோரணங்கள், நத்தார் அலங்கரிப்புக்கள் பாதைகளின் இரு புறங்களிலும் நிர்மா ணிக்கப்படும் போது, ஆயிரக்கணக்கில் அன்னதானம் வழங்குதல்கள் நாடு முழுவ தும் ஏற்பாடு செய்யப்படுவதைக் காணும் போது, நான் எல்லையற்ற மகிழ்ச்சியடை கின்றேன்.

அன்று ஓடி ஒளித்திருந்த அரசியல்வாதி கள் இன்று வெளியில் வந்து ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான 10 பில்லியனுக்கும் அதிகமான நிதியை தேசிய பொருளாதாரத்துக்கு தேடித் தந்த என்னைத் திட்டித் தீர்ப்பதை நான் பிரமித்துப் போய் பார்த்துக் கொண்டிருக்கின்றேன்.

ஒளிரும் சமூகத்தை நோக்கி தாய்நாட்டை வெற்றிபெறச் செய்வோம்!

ஆம்! நான் வங்குரோத்து நிலையில் இருந்த ஒரு நாட்டையே பொறுப்பேற் றேன். நாம் தற்போது வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டு, கடன் மறுசீர மைப்பு பணிகளை நிறைவுசெய்து முன் னோக்கிச் செல்கிறோம்.

2019 இல் நான் பிரதமர் பதவியிலிருந்து நீங்கிச் சென்ற போது எமது மொத்த தேசிய உற்பத்தி 89 பில்லியன் அமெரிக்க டொலர் களாக இருந்தது. ஆனால் 2022 இல் நான் ஜனாதிபதிப் பதவியை ஏற்ற போது அது 76.9 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது. அதாவது 12.1பில்லியன் அமெ ரிக்க டொலர்களால் சரிவடைந்திருந்தது.

ஆயினும் 2023 இன் இறுதியில் அதனை 84.4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை அதிகரிக்க எம்மால் முடிந்தது.

இவ்வாறு பயணிக்கும் இப்பயணம் தொடருமாயின் 2025 இறுதியில் அது 89 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை அதிகரிக்கும். அதனைத் தொடர்ந்து நாளுக்கு நாள் அது அதிகரிக்கும். மொத்த தேசிய உற்பத்தி அதிகரிக்கும் போது எமது வருமானம் அதிகரிக்கும். கொள்வனவு சக்தி அதிகரிக்கும். வாழ்க்கைத் தரம் உயர் வடையும்.

நான் தற்போது கடினமான தொங்கு பாலப் பயணத்தில் நீண்டதூரம் வந்துள் ளேன். கடந்த காலம் முழுவதும் கடனைத் திருப்பிச் செலுத்தாத காரணத்தால்தான் உங்களுக்கு தற்போது ஓரளவு நிவாரணம் கிடைத்துள்ளதாக சிலர் கூறுகின்றனர். அது உண்மையல்ல.

இக்கஷ்டமான நிலையில் நாங்கள் கடனை மீளச்செலுத்தினோம். 2022 ஆம் ஆண்டு சுமார் 2.5 பில்லியன் டொலர்கள். 2023 ஆம் ஆண்டு சுமார் 2.6 பில்லியன் டொலர்கள்.

இனி எமக்கு தொங்குபாலத்தை கடப்ப தற்கு இன்னும் கொஞ்சம் தூரம்தான் எஞ் சியுள்ளது. அதனையும் கவனமாக மற்றும் கஷ்டத்துடன் சென்று சிறந்ததொரு எதிர்கா லத்தை உருவாக்குவதா?

இன்றேல் பொய் வாக்குறுதிகள் மற்றும் ஒவ்வொரு விதமான பரீட்சித்துப் பார்த்தல் களை நம்பி ஏமாற்றமடைந்து அதல பாதா ளத்தில் வீழ்வதா? சிந்தியுங்கள்.

மற்றுமொரு விடயம்.

நான் இவை எல்லாவற்றையும் பாராளு மன்றத்தில் தனி ஆசனம் ஒன்றின் மூலம் தான் செய்தேன்.

ஆனாலும் இப்பயணத்தை தொடர்வதற் குத் தேவையான சட்டங்கள் போன்றே திட் டங்களைத் தயாரிப்பதற்கு பல கட்சிகளின் ஒத்துழைப்பை என்னால் பெற முடிந்தது.

அதே போல் நாட்டை நேசிக்கும், பல்வேறு அரசியல் கொள்கையுடைய நீங்கள் அனை வரும் எனக்கு ஒத்துழைப்பு வழங்கினீர்கள்.

ஆகவேதான் நான் ஒரு சுயேச்சை வேட் பாளராக தேர்தலில் போட்டியிடுகின்றேன். நான் ஒரு கட்சி சார்பில் அல்லது ஒரு குழு சார்பில் இத்தேர்தலில் போட்டியிட வில்லை. பல்வேறு அரசியல் கொள்கையு டைய உங்களது சார்பில் நான் போட்டியிடு கின்றேன்.

பழைய பரம்பரையினர் தொடக்கம் நவீன பரம்பரை வரை மாத்திரம் அல்ல. பிறக்கவுள்ள எதிர்கால சந்ததியினருக்காக, உங்களுடைய எதிர்காலத்திற்காக, எமது தாய்நாட்டுக்காக.

ஆம், நான் உங்களுக்காக, நாட்டுக்காக எதிர்வரும் 05 ஆண்டுகளுள் எஞ்சியவற் றையும் செய்து காட்டுவேன். நாட்டைக் கட்டியெழுப்புவேன்.

சுதந்திரத்துக்குப் பின்னர் நூறு ஆண்டுகள் பூர்த்தியடையும் 2048 இல் கடன் சுமையிலி ருந்து விடுபட்ட எமது தாய் நாடு உலகில் அபிவிருத்தியடைந்த, வளர்ச்சியடைந்த ஒரு நாடாக மாற்றமடையும். அப்போது நான் உயிருடன் இருக்க மாட்டேன். ஆயினும் 2022 இல் வீழ்ந்த நாட்டை தொடர்ச்சியாக மீட்டெடுத்து, எதிர்காலத் துக்காக பலமான ஒரு அத்திவாரம் அமைப் பதையே நான் இப்போது செய்து வருகி றேன்.

இது
உங்கள் அன்பின்
ரணில்

ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு, ஒரு நாட்டை மாற்றமடையச் செய்வதற்கு வாய்ப்பேச்சால் முடியாது.செயற்பாட்டால் தான் முடியும். கடந்த இரண்டு ஆண்டுக ளில் அவர் அதைச் செய்து காட்டினார்.

எரிபொருள் வரிசைகளில் சிக்குண்டு கஷ்டப்பட்ட மக்களை மிகவும் குறுகிய காலத்திற்குள் தானம் வழங்கும் தன்சால் வரிசைகளில் புன்னகையுடன் இருக்கும் நிலைமைக்கு மாற்றினார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலையையும் இன்றுள்ள நிலையையும் ஒப் பிட்டுப் பாருங்கள்.

கடினமான தொங்கு பாலத்திலிருந்து இலங்கைத் தாயை கரை சேர்க்கும் பாரிய சவாலை அவர் பொறுப்பேற்றார். அப் பொறுப்பை சரிவர அவர் நிறைவேற்றினார். இவை அனைத்தையும் அவர் தொலை நோக்குடன் திட்டமிட்டு நிறைவேற்றினார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் அவர் இதுவரை எந்தவொரு ஜனாதிபதியும் மேற்கொள்ளாதவிதமாக புதிய சட்டங் களைக் கொண்டு வந்தார். புதிய சட்ட விதிகளை அங்கீகரிக்கச் செய்தார்.

நாட்டை சரியான பாதையில் முன்னெ டுத்துச் செல்வதற்காக அவர் இதுவரை பாராளுமன்றத்தில் சுமார் நூற்றுக்கு அண் மித்த சட்டங்களை அங்கீகரிக்கச் செய்தார். ஊழலுக்கு எதிரான சட்டம், மத்திய வங்கிச் சட்டம், தேர்தல்கள் செலவு ஒழுங்குவிதி கள், மறுசீரமைப்பு பணியகம், அரச கடன் முகாமைத்துவச் சட்டம், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க சட்டம், நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம், அரச கடன்கள் சட்டம், மின்சக்தி சட்டம், பெண்களை வலுவூட்டும் சட்டம், அரச நிதி முகாமைத்துவச் சட்டம், பொருளாதார பரிமாற்றச் சட்டம் போன்ற சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் அவற் றுள் பிரதானமானவை ஆகும்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான அபேட்சகர்கள் அனைவரும் ஒவ்வொரு அரசாங்கத்திலும் அமைச்சுப் பதவிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை வகித்த நபர்கள் ஆகும். எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட் சியின் பிரதான அமைப்பாளர் பதவிகளை வகித்தவர்கள் ஆவார்கள்.

அவர்களுள் அமைச்சர் ஒருவர் என்ற ரீதியில் நாட்டுக்கு பயனுள்ள வேலைத் திட்டங்களை அவர் மேற்கொண்டார். அவர் இளைஞர் விவகார அமைச்சராக இருந்தபோது இளைஞர் விவகார அமைச் சின் பொற்காலம் ஆகும். அவர் கல்வி அமைச்சராக இருந்த போதுதான் இந்த நாட்டு கல்வித்துறையில் மறுமலர்ச்சி ஏற் பட்டது. அவர் கைத்தொழில் அமைச்ச ராக இருந்த காலம்தான் இந்த நாடு பூராக புதிய கைத்தொழிற்சாலைகள் உருவாக்கம் பெற்றன. அவர் பிரதமர் மற்றும் பொரு ளாதார கொள்கைகள் அமைச்சராக இருந்த காலத்தில் தான் நாட்டின் பொருளாதாரம் மிகவும் வளர்ச்சியடைந்த காலமாக இருந்த தது. வேறு எந்த ஜனாதிபதி வேட்பாளருக் குத்தான் அது போன்ற ஒரு வெற்றிவாகை சூடிய வரலாறு உள்ளது?

அவர் பல தடவை பிரதமராக பதவி வகித்தார்தான். அத்தகைய ஒவ்வொரு சந் தர்ப்பத்திலும் அவருக்கு மேல் ஜனாதிபதி ஒருவர் இருந்தார். இற்றைக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அவர் முதன் முறையாக நாட்டின் ஜனாதிபதியாக பதவி யேற்றார். சுதந்திரமாக நாட்டுக்காக பணி யாற்றுவதற்கு முதன் முறையாக அவருக்கு சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றது. மிகவும் துன்பம் நிறைந்த நிலைக்கு ஆளாகி இருந்த நாட்டை அவர் இரண்டு ஆண்டுகளுக்குள் ஒருவரும் நினைக்காத விதத்தில் கட்டியெ ழுப்பினார்.

அவர் மாத்திரம்தான்,வெறும் வீண்பேச் சுக்கள் இன்றி வேலை செய்து காட்டியவர்.

அவர் வந்த இப்பயணத்தைப் பற்றி பலர் பகிரங்கமாக அவரைத் திட்டுகிறார்கள். இர கசியமாக அவரது நலன்களைப் போற்றிப் புகழ்கின்றார்கள்.

ஜனாதிபதி ஒருவரைத் தெரிவுசெய்வது பற்றி நீங்கள் இதுவரை ஒரு முடிவினை எடுக்காது இருப்பீர்களாயின் பின்வரும் கருத்துக்களை அறிவு சார்ந்த ரீதியில் வாசித் துப் பார்க்கவும். அதனை வாசித்துப் பார்த்து ஒரு முடிவுக்கு வாருங்கள். ரணிலின் திற மையான செயலாற்றுகை பற்றிய இந்த விடயங்களை நாம் கூறவில்லை, சர்வதேச அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக விடயங்கள் பற்றிய பரந்துபட்ட அனுபவ முள்ள வெளிநாடுகளில் உள்ள மாபெரும் அறிஞர்கள் இவற்றைத் தெரிவிக்கின் றார்கள்.

- சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத் துவப் பணிப்பாளர் திருமதி கிரிஸ்ட லீனா ஜோர்ஜியெவா(2023 செப்டம்பர்) "நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார நிலைமையை மேம்படுத்துவதற்கான இலங்கை அரசின் அர்ப்பணிப்பு பற்றி நாம் திருப்தியடைகின்றோம்"



தேரவாத வர்த்தக பொருளாதாரம்

★தென்கொரியா ஜனாதிபதி யூன் சுக் யோல் (2023 செப்டம்பர் 19) "ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இலங்கை சார்பில் முன்னெடுக்கும் பொருளாதாரத்தை மிளிரச் செய்யும் திட் டத்திற்காக எனது பூரண ஒத்துழைப்பை வழங்குகின்றேன். நாட்டில் நிலவும் பாரிய பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கும் நோக்கம் கொண்ட அவரது இந்த வேலைத்திட்டத்தைப் பாராட்டி அவரது அர்ப்பணிப்பை நான் மெச்சுகின் றேன்"

- அவுஸ்திரேலியாவின் முன்னாள் பிரதமர் திரு ஸ்கொட் மொரிசன் (2024 ஜூலை 18); "இலங்கையின் மிகவும் சவால் மிகுந்த ஒரு காலகட்டத்தில் ஜனாதிபதி அவர்கள் அடைந்து கொண்டுள்ள வெற் றிகளுக்கு எனது பாராட்டுக்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட பொரு ளாதார நெருக்கடியின் பின்னர் நாட்டில் ஸ்திரத்தன்மையினை ஏற்படுத்துவதற்கு அவரால் முடிந்துள்ளது"
- ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் திரு மசட்சுகு அசகாவா (2024 மே 5)–"பொருளாதார மற்றும் செயற்பாட் டுத் திட்டம் தொடர்பில் இலங்கை அடைந்து கொண்டுள்ள நிலையான முன்னேற்றம் தொடர்பில் நான் ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கும் இலங்கை அரசுக்கும் எனது பாராட்டுக்க ளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்"
- ஜப்பான் வெளிநாட்டலுவல்கள் அமைச் சர் திருமதி யோகோ கமிக்கவா (2024 மே 4)–"கடன் நெருக்கடியை தீர்ப்பதற்கும்; பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்குமான மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதற்கான உங்களது தலை மைத்துவத்தை நான் பாராட்டுகின்றேன்"
- தெற்கு மற்றும் மத்திய ஆசிய அலுவல் களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் திரு டொனால்ட் லூ (2024 பெப்ரவரி 19)–"நான் கடமை புரியும் பிராந்தியத்தில் இலங்கையின் கதை போன்று மிகப்பெரிய மீண்டும் மறு மலர்ச்சியடைந்த கதை ஒன்று வேறு இல்லை"

இரண்டு ஆண்டுகளுக்குள் இவ்வாறான மாபெரும் அதிசயத்தை ரணில் செய்து காட் டினார்.

ஜனாதிபதி வேட்பாளர்களுள் அவ்வாறா னவர்கள் இருக்கின்றார்களா? இல்லவே இல்லை. அவ்வாறாயின் உங்களது தெரிவாக இருக்க வேண்டியவர் அவர் தானே? ஆம்! ரணில்!

தேரவாத வர்த்தக பொருளாதாரம்:

தேரவாத வர்த்தக பொருளாதாரம் என்பது உங்களுக்கு பழக்கப்பட்ட ஒரு சொல்லாக இல்லாதிருக்கக் கூடும்.

நாம் செவியுற்றும் அறிந்தும் வைத்திருப் பது, உலகின் பல்வேறு நாடுகள் அன்று தொடக்கம் பின்பற்றிய பல்வேறு பொரு ளாதார முறைகள் பற்றி ஆகும். அவற்றுள் ஒருசில பொருளாதார முறைகள் தோல்வி யடைந்த காரணத்தால் பயன்பாட்டிலிருந்து நீங்கியவை ஆகும்.

நாம் தேரவாத வர்த்தக பொருளாதார முறையின் கீழ் பல்வேறு துறைகளை மேம் படுத்தி வருமானம் ஈட்டுகிறோம். அவை தொடர்பான தகவல்களை நாம் இங்கு குறிப்பிடுகின்றோம்.

வரலாற்றில் இலங்கையின் இராசரட்டை இராசதானி காலத்தில் இந்த நாட்டில் தேரவாத சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார முறைமை ஒன்று காணப்பட்டது.

அப்பொருளாதார முறைமையின் கீழ் நாம் சீனா முதற்கொண்டு பாரசீக நாடுகளு டன் வர்த்தக கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டோம். இந்து சமுத்திரத்தின் பொருளாதார கேந்திரநிலையமாக பெயர் பெற்று விளங்கினோம். சமுத்திரப் பட்டுப் பாதையின் கேந்திர நிலையமாக பிரசித்தி பெற்று விளங்கினோம்.

விசேடமாக ஒட்டுமொத்த கீழைத்தே யத்துக்கும் தானியம் விநியோகிக்கும் பொறிமுறை, வசதிகள் மற்றும் ஆற்றல் எம்மிடம் காணப்பட்டது. அதன் காரண மாக இலங்கை கீழைத்தேயத்தின் தானியக் களஞ்சியமென பிரசித்தி பெற்று விளங்கி யது.

13ஆம் நூற்றாண்டின் போதும் இராச ரட்டை இராசதானி வீழ்ந்த போது தற்போ தைய தாய்லாந்தின் அயோத்தியா இராசா தானி அந்த வர்த்தக கேந்திர நிலையத்தின் ஆதிக்கத்தை தனதாக்கிக் கொண்டது. இந்த இரண்டு இராசதானிகளும் 18 நூற்றாண்டுக ளாக பிராந்தியத்தின் சந்தையில் ஆதிக்கம் செலுத்தியது.

அண்மைய வரலாற்றில் மீண்டும் இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகியன பொருளாதார ரீதியான பலத்தை உருவாக்கு வதற்கு பாடுபட்டன.

1980 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் நவீன தாய்லாந்து ஏற்றுமதி மற்றும் சுற்று லாக் கைத்தொழிலை அடிப்படையாகக் கொண்ட சந்தைப் பொருளாதாரத்தை நோக்கி பரிமாற்ற மடைந்தது. இலங்கை உள்நாட்டு உற்பத்திக்கு மாத்திரம் மட்டுப்ப டுத்தப்பட்டு இறக்குமதியினை மாற்றீடாக கொண்டு விளங்கியது.

கடந்த ஆண்டுகளாக எமது பொருளா தார கொள்கைகளுக்கு முக்கிய அடித்தள மாக உள்நாட்டு உற்பத்தி காணப்படுகிறது. அன்றாட தேவைப்பாடுகளை நிறைவுசெய் வதற்கு உள்நாட்டு உற்பத்திகள் பற்றாக் குறையாக உள்ள காரணத்தால் பற்றாக்கு றையானவற்றை இறக்குமதி செய்து வரவு செலவு இடைவெளியானதுஉள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்களின் மூலம் ஈடு செய்யப்படுகிறது.

புத்தபெருமான்சாமஞ்ஞபல சூத்திரத்தில் சுட்டிக்காட்டியதன் பிரகாரம் நுகர்வுக்காக அன்றி முதலீட்டுக்காகவே கடன் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். நாம் அப்பொ ருளாதார சிந்தனையைப் புறக்கணித்தோம். சுமார் 2022 ஆம் ஆண்டளவில் சுமார் 84 பில்லியன் பெருமளவு தொகை அமெரிக்க டொலர் கடன் நம்மீது சுமத்தப்பட்டிருந் தது. அதில் பெருமளவு தொகையை நுகர் வுக்காகவே நாம் பெற்றோம். இதன் காரண மாக நாம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் உலகத்தார் முன்னிலையில் இழிநிலைக்குத் தள்ளப்பட்டோம்.நாடு முற்றுமுழுதாக வீழ்ச்சியடைந்தது.

2022 ஆம் ஆண்டில் பொருளாதாரம் பாரதூரமாக சுருங்கும் நிலைக்கு உள்ளாக் கப்பட்டது. மொத்த தேசிய உற்பத்தி வீழ்ச் சியடைந்தது. பொருளாதாரத்தின் வெளி நாட்டுத் துறையும் வீழ்ச்சியடைந்தது.இதன் காரணமாக ரூபாவின் பெறுமதி மதிப்பிழந் தது. 2019 ஆம் ஆண்டு 183.61 ரூபாவாக காணப்பட்ட அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமதி 2022 ஆம் ஆண்டு 363.11 ரூபாவாக மாற்றமடைந்தது. 2019 ஆம் ஆண்டு 3.53 வீதமாக காணப்பட்ட பணவீக் கம் 2022 ஆம் ஆண்டு 70 வீதமாக உயர்வ டைந்தது.

நாடு வளர்ச்சியடையும் வேகம் குறைவ டைந்த போது நாடு சரிவடையும் வேகம் அதிகரித்தது. வாழ்க்கைச் செலவு மற்றும் வாழ்க்கைச் சுமையைக் குறைக்க வேண் டுமாயின் நாம் செய்ய வேண்டியது நாடு வீழ்ச்சியடையும் வேகத்துக்கு வேகத்தடை போட்டு நாடு வளர்ச்சியடையும் வேகத்தை அதிகரித்தல் ஆகும்.

நாம் ஆரம்பித்து விட்டோம்:

மீளவும் மீண்டெழும் கடினமான முயற் சியை ஆரம்பித்து, நாம் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை ஆரம் பித்தோம்.அப்போது நாடு மிகவும் பலவீ னமான நிலையில் காணப்பட்டது. பேச் சுவார்த்தைகளை நடாத்தும் போது எமது பலவீனமான நிலைமை எமக்கு பாரியபிர திகூலமாக அமைந்தது. அனைத்து கஷ்டங் களையும் பொறுத்துக் கொண்டு நாட்டை மீண்டும் வழமைநிலைக்கு கொண்டு வரு வதற்கு நாம் பாடுபட்டோம். மீண்டும் ஒருமுறை மக்கள் வரிசைகளில் கஷ்டப் படும் ஒரு யுகம் உருவாகாமல் இருப்பது எமது எதிர்பார்ப்பாக காணப்பட்டது.

அந்த நோக்கத்தின் அடிப்படையில் நாம் பின்பற்றிய தேரவாத சந்தைப் பொருளா தார வழிமுறை வெற்றியளித்துள்ளது என் பதனை இன்று முழு உலகமும் ஏற்றுக் கொண்டுள்ளது.

முடியாது, முடியாது எனச் சொல்வதற்கு முடியாது! – இயலும்! நான் அதைச் செய்தேன்!

நாம் வாழ்க்கைச்சுமையை எளிதாக்கு வது பொருளாதாரத்தை வலுப்படுத்தும் வேலைத்திட்டங்கள் மூலமே. அவ்வா றின்றி பிரசித்தி பெறுவதை எதிர்பார்த்து வெளிநாட்டுக் கடன் பெற்று உங்களுக்கு நிவாரணம் வழங்குவதன் மூலமாக அல்ல. அவ்வாறான நிவாரணங்கள் தற்காலிகமா னதே.

எமது வேலைத்திட்டம் காரணமாக 2022 இல் 70 வீதமாக இருந்த பணவிக்கம் 2024 ஜூலை மாதம் 2.81வீதம் வரை வீழ்ச்சிய டைந்தது. நானூறு ரூபாவை அடைவதற்கு நெருங்கியிருந்த அமெரிக்க டொலரின் பெறுமதி 300 ரூபாவை விட குறைந்த மட் டத்துக்கு தற்போது வந்தள்ளது. 2022 ஆம் ஆண்டு 92 ஒக்டேன் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 470 ரூபாவாகும். தற்போது அதன் விலை 344 ரூபாவாகும். அன்று ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 460 ரூபாவாகும். இன்று அதன் விலை 317 ரூபா வாகும். மின் கட்டணங்கள் குறைந்து செல் கிறது. நீர் கட்டணங்களும் வீழ்ச்சிடைந்து செல்கிறது.

11ஆம் பக்கம் பார்க்க...

'ரணிலுடன் இலங்கைக்கு வெற்றிகரமான 05 வருடங்கள்'

தேர்தல் விஞ்ஞாபனம் வெளியீடு

இதே பாதையில் முன்னோக்கி செல்வதன் மூலமே மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்படுவதைத் தடுக்க முடியும்

10ஆம் பக்கத் தொடர்

இதன் காரணமாக வாழ்க்கைச் செலவு நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. எமது நாடு மீண்டும் வழமை நிலைக்கு வந்துள்ளது.

பொருளாதாரம் வலுவடைந்து செல்லச் செல்ல உங்களது வாழ்க்கைச் செலவை மேலும் எளிதாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இன்னும் குறுகிய காலத்தில் அத்தியவசிய நுகர்வுப் பொருட்கள் தொடர்பில் சலுகை வழங்குவதற்கும் எம்மால் முடியும்.

வரிச்சுமைக்கு நிவாரணம்:

2015 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த அரசநிதி மறுசீரமைப்புக்கள் 2019 ஆம் ஆண்டு அப்போதைய அரசினால் இடைநிறுத்தப்பட்டன. நினைத்த விதத்தில் வரிகள் விலக்கப்பட்டன. அரச வருமானம் உலகின் ஆகக் குறைந்த மட்டத்துக்கு வீழ்ச்சியடைந்தது.எமது நாடு பொருளாதார தீக்குள் விழுவதற்கு அதுவும் ஒரு பிரதான காரணமாக அமைந்தது.

இத்தீயிலிருந்து நாட்டையும் நாட்டு மக்களையும் காப்பாற்றுவதற்காகவே நாம் சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாட்டுக்கு வந்தோம். 16 தடவைகள் அவர்களது இணக்கப்பாட்டை மீறிய வங்குரோத்து நிலையை அடைந்த ஒரு நாடு என்ற ரீதியிலேயே நாம் இம்முறை அவர்களிடம் சென்றோம். அந்த நேரத்தில் பேரம் பேசும் அதிகாரமோ பலமோ எம்மிடம் காணப்படவில்லை. நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும் என்பதால் அவர்கள் விதிக்கின்ற அரச வருமானம் தொடர்பான நிபந்தனைகளுக்கு இணங்குவதற்கு நேரிட்டது.

அதன் காரணமாகத் தான் வரி விதிக்க நேர்ந்தது. அது நாம் விரும்பி மேற்கொண்ட ஒரு விடயம் அல்ல. ஆயினும் அச்சந்தர்ப்பத்தில் வேறு மாற்றுவழிகள் காணப்படவில்லை. இந்த வரி காரணமாக விசேடமாக வைத்தியர்கள், பொறியியலாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர் போன்ற தொழில்சார் நிபுணத்துவம் கொண்ட நபர்கள் அதிகம் பாதிக்கப்பட்டனர்.

ஆனாலும் எமது பொருளாதாரத்தை ஒழுக்க ரீதியில் வழிநடாத்தி பலமான நிலைமைக்கு கொண்டு வருவதற்கு எம்மால் தற்போது முடிந்துள்ள காரணத்தால் வரி நிபந்தனைகள் தொடர்பில் மீண்டும் கருத்திற் கொள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாட்டை நாம் பெற்றுக் கொண்டோம்.

அதன் பிரகாரம் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் வரி நிலைகளுக்கு இடையிலான இடைவெளியை விரிவாக்குவதற்கும் வரி வீதங்களை திருத்துவதற்கும் யோசனைகள் முன்வைக்கப்பட்டன.

இது தொடர்பான இறுதித் தீர்மானத்தை எம்மால் துரிதமாக எடுக்க கூடியதாயிருக்கும்.

இதற்கு மேலதிகமாக தொழில்சார் நிபுணத்துவம் கொண்ட நபர்களுக்கு வரி விடுதலை சேவை ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்துவதற்கும் நாம் நடவடிக்கை எடுப்போம்.

அதேபோல் இடைக்கால வரிகள் காரணமாக பலர் கஷ்டங்களுக்கு ஆளாகியுள்ள காரணத்தால் நாம் படிப்படியாக இடைக்கால வரிகளை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வோம்.

எதிர்வரும் இரண்டு ஆண்டுகளுக்குள் இப்பணிகளைப் பூர்த்தி செய்து வரி செலுத்தும் மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் நாம் ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பாடுகளின் பிரகாரம் எதிர்வரும் ஆண்டு முதல் எமது வரி வருமானத்தை மொத்த தேசிய உற்பத்தியின் 14 வீதம் வரை அதிகரித்தல் வேண்டும். வரி வலையமைப்பை விரிவாக்குவதன் மூலம் மற்றும் வருமானச் சேகரிப்பை மிகவும் செயற்திறனாக்குவதன் மூலம்நாம் வரி வருமானத்தை அதிகரிப்போம்.

பொருளாதாரத்துக்கு வலு சேர்ப்பதற்காக பங்காற்றும் தொழில் முயற்சியாளர்கள் வரிச்சுமை காரணமாக தேவையற்ற நெருக்குதலுக்கு ஆளாகியுள்ளனர். எமது பொருளாதாரம் மிகவும் வலுவடையும் போது அவர்களின் வரிச்சுமையை எளிதாக்குவதற்குரிய பின்னணி ஏற்படும். அவர்களுக்கு சலுகை வழங்கும் செயன்முறையை நாம் 2025 இல் ஆரம்பிப்போம்.

தாய்லாந்து மற்றும் வியட்நாமை நோக்கு–வோம்

ஒரு மஹாயான பௌத்த நாடாக உள்ள வியட்நாம் இங்கு எமக்கு சிறந்ததொரு உதாரணம் ஆகும்.1990 ஆம் ஆண்டளவில் எமது பொருளாதாரக் கொள்கையைத் தான் வியட்நாமும் பின்பற்றியது. ஆயினும் 1995 ஆம் ஆண்டு வியட்நாம் தாய்லாந்து முறையை முன்மாதிரியாகஎடுத்துக் கொண்டது. அதன் பிரதிபலனை தற்போது காணக்கூடியதாக உள்ளது.

தாய்லாந்து மற்றும் வியட்நாம் தொங்குபாலப் பயணத்தை வெற்றியடையச் செய்து கொண்டது.

எமது பயணத்தை வெற்றியடையச் செய்ய நாம் ஆரம்பித்துள்ளோம். பின்வரும் இலக்குகளைப் பூர்த்தி செய்தால் மாத்திரமே எமது அப்பயணம் வெற்றியடையும்.

குறிகாட்டி தற்போதைய நிலைமை இலக்கு காலச் சட்டகம்

ஆரம்ப வரவு செலவு மிகை மொ.தே.உ 0.6% (2023) மொ.தே.உ 2.3% 2025 2032

அரச கடன் மொ.தே.உ 111% (2023) மொ.தே.உ 95% 2032

மொத்த நிதித் தேவைப்பாடு மொ.தே.உ 27.8% (2023) மொ.தே.உ 13% 2027 – 2032 சுமார்

வெளிநாட்டுக் கடன் சேவை மொ.தே.உ 9.2% (2022) மொ.தே.உ 4.5% 2027 – 2032 வருடாந்த எல்லை

மொத்த அந்நிய செலாவணி ஒதுக்கு 5.6 பி.அ.டொ (2024 ஜூலை) 15.1 பி.அ.டொ 2028

பணவீக்கம் 2.4% (2024 ஜூலை) 5% தொடர்ச்சியாக திறைசேரி பிணைமுறி மொ.தே.உ 7% (2023) மொ.தே.உ 7.5% இலும் குறைவு தொடர்ச்சியாக...

அதே போல் இனிமேல்

- அரச கொடுப்பனவுகளின் நிலுவைத் தொகைகளை மூன்று மாதங்களுக்கு மேல் நிறுத்தி வைப்பதற்கு அனுமதி இல்லை.
- வரவு செலவுப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக மத்திய வங்கி மூலம் நாணயத்தாள்கள் அச்சிடுவது முழுமையாக தடை செய்யப்படும்.
- மின்சாரம் மற்றும் எரிபொருள் விலைகள் அதற்காக செலவழிக்கப் படும் தொகையினை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படல் வேண்டும். மின்சார சபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டமடையுமாயின் உடனடியாக மற்றும் நேரடியாக திறைசேரி மூலம் அதற்காக நிதி வழங்கப்படல் வேண்டும்.
- சமூக பாதுகாப்புக்காக செலவு செய்யப் படும் தொகையை குறித்த அளவினை விடக் குறைத்தல் கூடாது.

இந்த இலக்குகள் மற்றும் வரையறைகள் நிலையானது ஆகும். அவை பற்றி மீண்டும் கலந்துரையாடுவதற்கு அல்லது மாற்றுவதற்கு இயலாது.

மேற்குறிப்பிடப்பட்ட இலக்குகள் மற்றும் வரையறைகளுக்கு உட்பட்டே எமது உத்தியோகபூர்வ கடன் கொடுநர்கள் மற்றும் சீனா நிவாரணங்களை எமக்கு வழங்கியது.

அந்த இலக்குகள் மற்றும் வரையறைகளைப் பூர்த்திசெய்ய இயலாது போனால் எமக்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவி மட்டுமின்றி கடன்சலுகைகள் அனைத்தும் இல்லாது போகும். அவ்வாறு இடம்பெறுமாயின் எமக்கு தொங்குபாலத்தில் இருந்து மீண்டும் பள்ளத்தில் வீழ்வதற்கு நேரிடும்.

தேர்தல் காலங்களில் பெரும்பாலான அரசியல் கட்சிகள் இந்த உண்மையை மறைத்து பல்வேறு தேர்தல் வாக்குறுதிகளை உங்களுக்கு வழங்குவார்கள். ஆனாலும் அவை நடைமுறை சாத்தியம் அற்றவை. அவை தங்க முட்டையிடும் கோழியின் வயிற்றை கிழித்த கதை போலத் தான். இதனால் தான் அந்த எந்தெவோரு கட்சிக்கு அல்லது அபேட்சகருக்கு சர்வதேச நாணய நிதியத்துடன் பகிரங்க கலந்துரையாடலுக்கு வர முடியவில்லை.

சுகபோகம் நிறைந்த ஒரு நாட்டை நோக்கி:

எமது திட்டம் ஏற்றுமதியை மையமாகக் கொண்ட உற்பத்தி மற்றும் சேவையை மையப்படுத்திய பொருளாதாரத்தை வலுப்படுத்துவது ஆகும்.

பொருளாதாரத்தைப் பலப்படுத்தாது போனால், நாட்டின் வேறு எந்தவொரு துறையையும் மேம்படுத்த முடியாது. பட்டினியால் வாடும் ஒரு நாட்டுக்கு ஆன்மீக விருத்தியை அடைந்து கொள்வதற்கான எந்தவொரு வாய்ப்பும் இல்லை. பட்டினியால் வாடும் நபர் ஒருவருக்கு போதனைகள் மூலம் எந்தவொரு பயனும் கிடைக்காதென புத்த பெருமான் சுட்டிக் காட்டியுள்ளார்.

இத்திட்டத்தினூடாக முன்னோக்கிச் செல்லாவிடின் இன்னும் சில ஆண்டுகளில் நாம் பாரியதொரு பொருளாதார நெருக்கடிக்கு மீண்டும் ஆளாவோம். இதே பாதையில் முன்னோக்கிச் செல்வதன் மூலம் மாத்திரம் தான் அதனைத் தடுப்பதற்கு முடியும்.

சதாவும் உலகத்திடம் கடன் பெற எம்மால் முடியாது. கடன் பொருளாதாரம் ஒன்றின் மூலம் நாட்டை உயர்வான இடத்துக்கு கொண்டு செல்ல முடியாது. இப் பயணம் முன்னோக்கி நகருமாயின் நாம் 2048 இல் கடனற்ற, அபிவிருத்தியடைந்த ஒரு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

வறுமையற்ற ஒரு சந்ததியினர்:

கொவிட்19 தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக எமது நாட்டு மக்களில் 25% சதவீதத்தினர் பல்வேறு வறுமை நிலைக்கு ஆளாகியுள்ளனர். வசதிவாய்ப்புக்கள் இல்லை. சரிவர கல்வியை பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் இல்லை. சுத்தமான நீர் இல்லை. மின்சாரம் இல்லை. தொழில்கள் இல்லை. வீடுகள் சொத்துக்கள் இல்லை. திருமணம் முடித்து குடும்பம் மற்றும் பிள்ளைகளைக் கட்டிக்காப்பதற்கு வாய்ப்புக்கள் இல்லை.

நாம் இந்த நிலைமையை மாற்றுவதற்கு முன்னுரிமை வழங்குவோம். எதிர்வரும் 05 ஆண்டு காலத்துக்குள் இவ்வாறான துன்பங்கள் மூலம் கஷ்டப்படும் ஏழ்மை நிலையில் உள்ள மக்களை 10 வீதம் வரை குறைப்பதற்கு நாம் செயற்படுவோம். அதற்கான அடித்தளத்தை வழங்கி சமூகப் பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கையை நாம் தயாரித்துள்ளோம்.

வறுமை நிலையிலிருந்து மக்களைக் காப்பாற்றும் வேலைத் திட்டத்தை மிகவும் முறைசார்ந்த ரீதியில் முன்னோக்கிக் கொண்டு செல்வோம். அதற்காக 'அஸ் வெசும'மற்றும் சமுர்த்தி வேலைத்திட்டம் ஆகியன ஒன்றிணைக்கப்படும்.

கடும் வறுமை நிலை மற்றும் சமூக ரீதியில் துன்பப்படும் பல சமூகக் குழுக்கள் இனம் காணப்பட்டள்ளன. பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் நிரந்தர பங்குதாரர்களாக இந்த வறுமையான குடும்பங்கள் ஈடுபடுத்தப்படும். பிரதேச உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் அரச பணிகளில் ஊழியர்களை ஈடுபடுத்தும் போது இவ்வாறான சமூகக் குழுக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அதன் மூலம் அவர்களின் பொருளாதாரத்தை வலுவடையச்செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும். அவ்வாறான சமூகக் குழுக்களுள்ள பிரதேசங்களை அடையாளம் கண்டு வறுமையை ஒழிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பொருந்தும் வகையில் அப்பிரதேசங்கள் மீது விசேட கவனம் செலுத்தப்படும்.

அழகான 2048 இற்கு:

நாம் உருவாக்கும் தேரவாத வர்த்தக பொருளாதாரத்தின் மூலம் நாட்டின் அனைத்து மக்களுக்கும் போதுமான அளவு வாழ்க்கைத் தரத்தை உறுதிசெய்வோம். இப் பயணப்பாதையினூடாக உயர்வான போட்டித்தன்மை, ஏற்றுமதியைமையமாகக் கொண்ட டிஜிட்டல் பசுமைப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்கு முடியும் என்பதுடன் 2048 இல் எமது அனைத்து பொருளாதார இலக்குகளையும் அடைந்துகொள்ள முடியும். இந்த அபிவிருத்தியடைந்த யுகத்தை நோக்கிப் பயணிப்பதற்குத் தேவையான பரிமாற்றத்துக்கு அடிப்படையாக அமையும் பிரதான சட்டங்களை நாம் தற்போது அங்கீகரித்து நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

மத்திய வங்கி சட்டம், அரச நிதி முகாமைத்துவ சட்டம், அரச கடன் முகாமைத்துவ சட்டம் மற்றும் பொருளாதார பரிமாற்ற சட்டம் அவற்றுள் முக்கியமானவை ஆகும்.

இதன் மூலம்

I புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்படுவதுடன் அதன் மூலம் தொழிற் சந்தை விரிவுபடுத்தப்படும். வருமானம் உழைக்கும் புதிய சந்தர்ப்பங்கள் உருவாக்கம் பெறும்.

II. வருமான உழைப்பு உயர்வடையும்.

பொருளாதாரத்தின் கூடுதலான சுமையினை தனியார் துறை மீது சுமத்துவதன் மூலமாகவே உலகின் பல நாடுகள் வளர்ச்சியடைந்துள்ளன. நாம் உருவாக்கும் தேரவாத சந்தைப் பொருளாதாரத்தை அதனை விடவும் பரந்தளவில் தாபிப்பதற்கு நாம் திட்டமிடுவோம்.

கடன் பொருளாதாரம் ஒன்றின் மூலம் நாட்டை உயர்வான இடத்துக்கு கொண்டு செல்ல முடியாது

பலம் பொருந்திய தனியார் துறையுடன் தோளோடு தோல் நின்று போட்டியிட முடியுமான இரண்டாம்ச துறைகள் எமது பொருளாதாரத்துடன் ஒன்று சேர்க்கப்படும்.

I அரச துறை

ஒட்டுமொத்த பொருளாதார முறைமையினையும் முழுமையாக ஒழுங்குபடுத்தும் அதிகாரம் அரசுக்கு உரியதாகும். அரசுக்குச் சொந்தமான வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் தொழில்முயற்சிகள் மூலம் இந்த நிதி ரீதியான வழிநடாத்தல் போட்டித் தன்மையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

II. மக்கள் துறை

மக்கள் துறை எனும் புதிய எண்ணக்கருவுக்காக அரசியலமைப்பின் 27(2)(ஊ) ஆம் உறுப்புரை அடிப்படையாகக் கொள்ளப்படும்.

"உற்பத்தியின், விநியோகத்தரின் மற்றும் பரிமாற்றம் செய்யும் மார்க்கங்கள் அரச, அரச நிறுவனங்கள் அல்லது வரப்பிரசாதம் கிடைக்கப்பெற்ற ஒரு சிலரின் கையில் அல்லது குவிக்கப்படாது மற்றும் மையப்படுத்தப்படாது இலங்கையின் அனைத்து மக்கள் மத்தியில் விரிந்து செல்லும் ஒரு தார்மீக சமூக முறையைத் தாபித்தல்"

மக்கள் துறை பொருளாதாரத்தின் பலம் மிக்க ஒரு பங்கை வகிப்பதற்காக நாம்

- அனைத்து பிரஜைகளுக்கும் காணி அல்லது வீடு ஒன்றின் உரிமையை வழங்குவதற்குரிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவோம்.
- தேசிய சொத்து (National Wealth Fund) வளத்தைத் தாபிப்போம்.
- கூட்டுறவுத் தொழில்முயற்சியை பூரண மறுசீரமைப்புக்கு உட்படுத்துவோம்.

சொத்துக்களின் உரிமை

பிரசைகளுக்கு உரிமையை வழங்கும் வேலைத்திட்டத்தை முறைமைப்படுத்தல் மற்றும் துரிதப்படுத்துவதற்காக புறம்பான அதிகார சபை ஒன்று உருவாக்கப்படும். இதனூடாக 'உருமய' நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் 02 மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு காணி உரித்துக்களை வழங்குதல் மற்றும் கொழும்பு நகரத்தின் அரசாங்கத்துக்குச் சொந்தமான குறைந்த வருமானம் பெறும் நபர்களின் வீட்டு உரிமையை அவ்வீட்டின் உரிமையாளர்களிடமே ஒப்படைத்தலை 04 ஆண்டுகளுக்குள் பூர்த்தி செய்வோம்.

மத்திய தர வகுப்பினருக்கு வீடு கட்டுவதற்காக சலுகைக் கடன் வழங்கப்படும். வருமானம் குறைந்தவர்களுக்கு தொடர்மாடி வீடுகளை உரித்தாக்குவதற்கான வசதிகள் வழங்கப்படும்.

பெருந்தோட்டதொழிலாளர்களுக்காக புதிய கிராமங்கள் உருவாக்கப்படுவதுடன் லயன் விடுகளில் குடியிருக்கும் நபர்களுக்கு காணி ஒன்றுக்கான உரித்து வழங்கப்படும்.

எதிர்வரும் இரண்டு ஆண்டுகளில் உள் நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டின் கீழ் பல புதிய வீட்டுத்திட்ட முன்மொழிவுகள் அரச துறையின் தலையீட்டுடன் நிர்மாணிக்கப்படுவதுடன் நாட்டின் அனைத்து நகரங்களும் உள்ளடங்கும் வகையில் பல மாடிகளைக் கொண்ட வீடுகளை நிர்மாணிப்பதற்காக உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு முதலீட்டாளர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள்.

இதன் காரணமாக தற்போது வீழ்ச்சியடைந்துள்ள நிர்மாணத்துப்புக் கைத்தொழிலை சுமார் இரண்டு வருட காலத்திற்குள் மீண்டும் பலப்படுத்துவதற்கு வழி பிறக்கும்.

நிதி உரிமை:

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சபை அங்கத்தவர்களுக்கு தற்போதுள்ளதை விடவும் பலமான தொழிற்சங்க பிரதிநிதித்துவம் வழங்கப்படும். வர்த்தக சம்மேளனத்தின் பிரதிநிதிகளும் அதில் இணைக்கப்படுவர். அதன் மூலம் மிகவும் சிறந்த நிதி நிர்வாகம் உறுதி செய்யப்படும்.

தற்போது அரச தேவைகளுக்காகவே இந்த நிதியம் ஈடுபடுத்தப்படுகிறது. அரசுக்கு நிதிப் பற்றாக்குறை ஏற்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் திறைசேரி பிணை முறிகளுக்காக இந்த நிதியம் பெற்றுக் கொள்ளப்படுகிறது. நாம் அந்த நிலைமையை மாற்றியமைப்போம். பொருளாதாரம் பலமடையும் போது, அரச பணிகளுக்காக இந்த நிதியம் பயன்படுத்தப்படுவது ஆகக் குறைந்த மட்டத்துக்கு கொண்டுவரப்படும்.

அதன் மூலம் இந்த நித்தியத்தை கூடுதலான வருமானம் பெற முடியுமான உள் நாட்டு மற்றும் வெளிநாட்டு பாதுகாப்பான நிதி நிறுவனங்களில் முதலீடு செய்வதற்கு வாய்ப்பு வழங்கப்படும். 2030 ஆம் ஆண்டளவில் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகியன எமது நாட்டின் மிகப்பெரிய முதலீட்டு நிதியமாக மாற்றமடையும். இதன் மூலம் நிதியத்தின் அங்கத்தவர்களுக்கு கூடுதலான பிரதிபலன்களை அடைந்துகொள்ள சந்தர்ப்பம் கிடைக்கும்.

தேசிய சொத்து வளம் ((National Wealth Fund)

வரவு செலவு மிகை மற்றும் அரச நிறுவனங்களின் இலாபங்களை ஒன்று சேர்த்து தேசிய சொத்து வளம் தாபிக்கப்படும். உள் நாட்டு மற்றும் சர்வதேச பங்குச் சந்தைகளில் இந்த நிதி முதலீடு செய்யப்படும்.

கூட்டுறவு

சர்வதேச தரங்களின் பிரகாரம் மற்றும் போட்டித் தன்மை வாய்ந்த சவால்களுக்கு முகம்கொடுக்க கூடியவாறு கூட்டுறவுத் தொழில்முயற்சி முழுமையான மறுசீரமைப்புக்கு உட்படுத்தப்படும். கூட்டுறவு முகாமைத்துவத்துக்கு அரசியல் மற்றும் அரச தலையீடுகள் மேற்கொள்ள முடியாத வாறு புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும். ஸ்கண்டினேவிய நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படும் கூட்டுறவு மாதிரியை ஒத்த புதிய கூட்டுறவு சட்டவிதிக் கோவை ஒன்றை அங்கீகரித்து கூட்டுறவு தொழில்முயற்சி தற்போதைய போட்டித் தன்மைக்கு முகம் கொடுக்க முடியுமான பலமான நிலைக்கு தரமுயர்த்தப்படும்.

மிகுதி எதிர்வரும் திங்கட்கிழமை வெளியாகும்



புலமைக் கதிர்

தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
உதவி அதிபர், கொ/ புனித அன்னம்மாள் மகளிர் மகாவித்தியாலயம், கொழும்பு 13

புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

I. பந்தியின் உதவியுடன் கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

வெள்ளை முயல் ஒன்று துள்ளித் துள்ளி வந்தது. அது குமாரின் வீட்டுத் தோட்டத்துக்கு சென்றது. அங்கே பச்சைக் கம்பளம் விரித்தது போல் பலவகை கீரைகளும் காய்கறி செடிகளும் செழித்து வளர்ந்திருந்தன. முயலுக்கு கீரை உண்ண அலாதியான விருப்பம். நறுக் நறுக் என்று கீரைகளை கடித்துத் தின்றது. இந்தச் சத்தம் கேட்ட குமாரின் வீட்டு நாய் தோட்டப் பக்கம் வந்தது. முயலைக் கண்டு உறுமியது. முயல் நாயைக் கண்டதும் தப்பினேன், பிழைத்தேன் என ஓட்டம் பிடித்தது.

01. முயல் எங்கே கீரைகளை கடித்துத் தின்றது? .....

02. பந்தியில் உள்ள இணைமொழியை எழுதுக? .....

03. அலாதியான விருப்பம் என்பதன் கருத்து யாது? .....

04. பந்தியில் உள்ள உவமைத் தொடர் எது? .....

05. பந்தியில் உள்ள அடுக்குமொழிச் சொல் எது? .....

06. தன்மை, ஒருமை, இறந்தகால வினைச்சொல்லை எழுதுக. .....

07. பின்வரும் ஒருமை வாக்கியங்களைப் பன்மை வாக்கியங்களாக எழுதுக.

i. குருவி தானியங்களைக் கொத்தித் தின்றது - .....

ii. நான் கல்விச் சுற்றுலா சென்றேன் - .....

08. பின்வரும் சுருக்கக் குறியீடுகளின் விரிவை எழுதுக.

i. கூ. மொ. வி. நி - .....

ii. இ. பு. தி - .....

iii. க. பொ. த - .....

09. பின்வரும் பிராணிகளின் தொனிகளை எழுதுக.

i. தேனீ - ..... ii. பல்லி - .....

10. சரியான சொல் வடிவத்தின் கீழ் கோடிடுக.

i. பதட்ரம், பதற்றம், பதட்றம், பதட்டம்

ii. செய்நன்றி, செய்னன்றி, செய்ந்நன்றி, செய்நன்ரி

11. பொருத்தமான முடிக்கும் சொல்லின் கீழ் கோடிடுக.

i. நான் ஒவ்வொரு பழமாக (சுவைத்தோம் / சுவைத்தேன்)

ii. கிளி பழங்களையும் தானியங்களையும் விரும்பி (உண்ணும் / உண்ணுகின்றன)

12. பின்வரும் வாக்கியத்தில் அடையாளம் இட்ட சொல்லின் பொருளைத் தெரிந்து கோட்டில் எழுதுக.

i. "நாம் இனிமேல் இவ்வாறான தவறுகளைச் செய்ய மாட்டோம்" என சத்தியனும், ஆதவனும் ஆசிரியரிடம் **வினயமாகக்** கேட்டனர். .....
(செருக்காக / உறுதியாக / பணிவாக)

ii. தன்னிடம் **அடைக்கலம்** தேடிவந்து மடியில் விழுந்த புறாவை மன்னன் காப்பாற்றினான். ..... (விடுதலை / பாதுகாப்பு / உணவு)

II.

13. பின்வரும் வாக்கியங்களில் உள்ள அடைமொழிச் சொல்லை இனங்கண்டு எழுதுக.

i. அவன் சுவையான பழத்தை உண்டான் - .....

ii. காற்று வீசியதால் பெரிய மரம் கீழே விழுந்தது - .....

14. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் எழுதுக.

i. 'விலங்குகள்' உயர்திணை பன்மைப் பெயர்ச் சொல்லாகும். ( )

ii. 'பாடகன்' உயர்திணை ஒருமை பெயர்ச் சொல்லாகும். ( )

15. பின்வரும் வாக்கியங்களிலுள்ள ஆண்பாற் சொற்களை பெண்பாற் சொற்களாகவும், பெண்பாற் சொற்களை ஆண்பாற் சொற்களாகவும் மாற்றி எழுதுங்கள்.

i. எனது பாட்டி மிகவும் நல்லவள் - .....

ii. அவன் பாடம் படித்தான். - .....

16. கீறிட்ட இடம் நிரப்புங்கள்.

i. குயில் கூவும் என்பது போல மயில் - .....

ii. ..... நாற்று எனின் பனையின் இளையது வடலி

iii. வாழையின் இளையது குட்டி போல தென்னையின் இளையது - .....

iv. ..... கர்ச்சிக்கும் என்பது போல யானை பிளிறும்

v. பசு – பசுக்கள் என்பது போல குழு - .....

17. பின்வரும் தனிவாக்கியங்களை தொடர் வாக்கியமாக மாற்றி எழுதுக.
குயில்கள் இனிமையாகக் கூவின.
மயில்கள் அழகாக ஆடின.

.....

18. பின்வரும் ஆங்கிலப் பதங்களின் கருத்தை தமிழில் தருக.

i. Touch Screen - ..... ii. e- mail - .....

19. தரப்பட்டுள்ள தமிழ்ச் சொற்களின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.

i. நட்சத்திரங்கள் - ..... ii. வீதி - .....

20. பின்வரும் தழிழ்ச் சொற்களின் கருத்தை சிங்களத்தில் கூறப்படும் விதத்தில் எழுதுக.

i. பதின்மூன்று - ..... ii. எனது - .....

பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.

iii. මට ආප්ප ඔන - .....

III.


21. ஒரு கடையில் சமையலுக்கு 18kg அரிசி தேவை. தற்போது கடையில் 10kg 350g அரிசி உள்ளது மேலும் எவ்வளவு அரிசி தேவை?

.....

22. கடிகாரம் காட்டும் நேரத்தை எழுதுக.



.....

23.  இவ்வுருவில் வரக்கூடிய இரண்டு சமச்சீர் அச்சுக்களையும் வரைக.

24. கீழே உள்ள உரோமன் இலக்கங்களை இறங்கு வரிசையில் எழுதுக.

IX, XV, XI, XIII, VIII - .....

25. விமலும், கமலும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கையினை பின்வருமாறு அட்டவணைப்படுத்தி வரைபாக்கினார்கள்


வருடம்	2008	2009	2010	2011	2012
சித்தியடைந்த மாணவர் எண்ணிக்கை	10	15	.....	25	30

i. 2010 ஆம் ஆண்டு சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கையினை வரைபை அடிப்படையாகக் கொண்டு இடைவெளியை நிரப்புக.

ii. 2012 ஆம் ஆண்டு சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கையினை அட்டவணையின் துணையுடன் வரைபில் காட்டுக.

iii. 2008 தொடக்கம் 2012 வரை சித்தியடைந்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.....



26. 3kg சீனியை வாங்கிய நாதன் 500 ரூபாய் நாணயத்தாள் ஒன்றை கொடுத்த போது மீதியாக 230 ரூபாய் கிடைத்தது எனின் 500g சீனியின் விலை யாது?

.....


27.

245		228
	194	
444		260

கூட்டுக்குள் தரப்பட்டுள்ள எண்களுள் 6 இனால் மீதியின்றி வகுபடக்கூடிய எண்கள் எவை?

.....

28. கீழே தரப்பட்டுள்ள வடிவங்களைப் பயன்படுத்தி ஆக்கத்தக்க திண்மங்கள் இரண்டும் எவை?



.....

.....

29. மூன்று தோடம்பழங்கள் வாங்குவதற்குச் செலவாகும் பணம் ரூ. 100.00 எனின் 15 தோடம்பழங்கள் வாங்குவதற்குத் தேவையான பணம் எவ்வளவு?

.....

IV. சரியான விடையின் கீழ் கோடிடுக.

30. தியானப் பயிற்சியின் 5ஆம் படிமுறையாக அமைவது
i. மனதைத் தளர்த்துதல் ii. மனவுறுதி iii. உடலைத் தளர்த்துதல்

31. நீரில் வாழும் மிகப்பெரிய முலையூட்டி எது?
i. சுறா ii. திருக்கை iii. நீலத் திமிங்கிலம்


32. இருட்டான இடங்களில் நடமாடும் பூச்சி எது?
i. கரப்பான் ii. ஈசல் iii. வண்ணத்துப்பூச்சி

33. வெப்ப காலங்களில் நீர் நிலைகளில் படுத்திருக்கும் பிராணி எது?
i. எருமை ii. ஒட்டகம் iii. குதிரை

34. பின்வருவனவற்றுள் நுளம்புகளால் பரப்பப்படும் நோய்கள் மட்டும் கொண்ட விடை எது?
i. பிளேக், கொலரா, மலேரியா ii. டெங்கு, யானைக்கால், மலேரியா
iii. மாலைக்கண், என்புருக்கி, டெங்கு

35. தாவர வித்துக்களைத் தூர இடங்களுக்கு எடுத்துச் சென்று வித்துப் பரம்பலுக்கு உதவும் பிராணி எது?
i. கொக்கு ii. வெளவால் iii. காகம்

36. விற்றமின் A குறைபாட்டினால் ஏற்படும் நோய் எது?
i. என்புருக்கி ii. கண்டமாலை iii. மாலைக்கண்

37.  அருகில் உள்ள படத்தின் மூலம் காட்டப்படும் தாவர வகை என்ன?
i. நன்னாரி ii. வல்லாரை
iii. ஆகாயத் தாமரை

38. தண்டினை நட்டு தாவரங்களைப் பெற்றுக் கொள்ளும் ஒரு தாவர வகை எது?
i. பயற்றை ii. வற்றாளை iii. பீர்க்கு

39. அசுத்தமான நீரினை பருகுவதால் ஏற்படும் நோய் அல்லாதது பின்வருவனவற்றுள் எது?
i. கொலரா ii. டெங்கு iii. செங்கண்மாரி

40. புத்தகம், துணி ஆகியவற்றுக்கு தீங்கு ஏற்படுத்தக் கூடிய சிறிய பிராணி எது?
i. கரப்பான் ii. எலி iii. இராமபாணம்

41. இலங்கையில் கோள் மண்டலம் அமைந்துள்ள இடம் எது?
i. அம்பாந்தோட்டை ii. கண்டி iii. கொழும்பு

42. தனது உடலை அடிக்கடி சுத்தம் செய்து கொள்ளும் விலங்கு எது?
i. நாய் ii. ஆடு iii. பூனை

43. நீர் வாழ் தாவரத்தின் மலர் அல்லாதது எது?
i. மருது ii. ஐதரில்லா iii. தாமரை

(13ஆம் பக்கம் பார்க்க)

(12 ஆம் பக்கத் தொடர்)

புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

44. உடல் சக்தி குறைவாக வீணாகும் விளையாட்டுக்களில் ஒன்று எது?
i. கிரிக்கட் ii. கெரம் iii. வீதி விளையாட்டு

45. அருகில் உள்ள நிழற்படம் எப்பறவையினைக் குறிக்கின்றது?

i. வானம்பாடி ii. நீர்க்காகம் iii. மீன்கொத்தி

46. மஞ்சள் பின்புலத்தைக் கொண்ட இந்த குறியீடு எதனைக் குறிக்கின்றது என்பதை பின்வருவனவற்றில் இருந்து தெரிவு செய்க.

i. முன்னால் வீதி வேலைகள் ii. வீதி வேலைகள்
iii. முன்னால் மண் அகழ்தல்

47. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புனித நகர் எது?
i. அனுராதபுரம் ii. சிகிரியா iii. நுவரெலியா

48. தாவரங்களின் பிரதானமாகப் பின்வரும் எந்தப் பகுதியில் நீர் அகத்துறிஞ்சப்படும்?
i. பூ ii. இலை iii. வேர்

49. உலர்த்துவதாலும் தேனில் இட்டு வைப்பதாலும் நீண்ட காலம் வைத்திருக்கக் கூடிய உணவுப் பொருள் எது?
i. எலுமிச்சம் பழம் ii. இறைச்சி iii. மீன்

50. இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது அதிவேக வீதி யாது?
i. தெற்கு அதிவேக வீதி ii. கட்டுநாயக்க அதிவேக வீதி
iii. கொழும்பு கண்டி அதிவேக வீதி

51. வேலையை இலகுவாக்கும் பொறியையும் அப்பொறியுடன் தொடர்புபட்ட தொழிற்பாட்டை சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.
i. கப்பி – தள்ளுதல் ii. கைவண்டி – தள்ளுதல்
iii. பாக்குவெட்டி - இழுத்தல்

52. படத்தில் காட்டப்பட்டுள்ள குறியீட்டினால் உணர்த்தப்படும் கருத்து யாது?


i. மீள் சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய பிளாஸ்டிக்
ii. மீள் சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய அலுமினியம்
iii. மீள் சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய பொருள்

53. இலங்கையின் நாணயத் தாளில் கையொப்பமிடும் இருவர் யார்?
i. நிதி அமைச்சரும், இலங்கை மத்திய வங்கி ஆளுநரும்
ii. இலங்கை மத்திய வங்கி ஆளுநரும், திறைசேரி செயலாளரும்
iii. பிரதம மந்திரியும், நிதி அமைச்சரும்

54. இலங்கை அரச இலச்சினையில் சூரியனையும், சந்திரனையும் அடையாளப்படுத்துவது
i. சௌபாக்கியத்தை ஆகும் ii. நிலைத்திருத்தலை ஆகும்
iii. தன்னிறைவை ஆகும்.

55. கூடு அமைக்கத் தெரியாத பிராணிகள் எவை?
i. கறையான், குயில் ii. குயில், பாம்பு iii. பாம்பு, கறையான்

56. எமக்குத் தகவல்களை நேரடியாக வழங்கத்தக்க ஓர் உபகரணம் எது?
i. பத்திரிகை ii. அறிவித்தல் iii. வானொலி

57. இலங்கைக்கு முதன் முறையாக ஒலிம்பிக் பதக்கம் ஒன்றை பெற்றுக் கொடுத்தவர் யார்?
i. டங்கன் வைட் ii. சுசந்திகா ஜெயசிங்க iii. தீபிகா சண்முகம்

58. வயல் நிலத்தின் பயன்படாத ஓர் உபகரணம்
i. நுகத்தடி ii. வேலைக்காரன் கம்பு iii. கரப்பு

59. 
இவ் உபகரணத்தின் பிரதான தொழில் யாது?
i. இரும்பு ஆணி அறைவதற்கு
ii. கம்பி வெட்டுவதற்கு
iii. தகட்டை துளைப்பதற்கு

60. தரப்பட்ட படத்தை பார்த்து நிகழ்கால வாக்கியங்கள் மூன்று எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்கு குறையாமல் இருக்க வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக அமைந்திருத்தல் வேண்டும்)

.....

.....

கடந்த வார (23.08.2024) வினாத்தாள் I இற்கான விடைகள்

01. 3	11. 3	21. 2	31. 1
02. 1	12. 1	22. 2	32. 2
03. 2	13. 3	23. 3	33. 2
04. 1	14. 1	24. 3	34. 1
05. 3	15. 2	25. 2	35. 1
06. 3	16. 2	26. 3	36. 2
07. 2	17. 2	27. 2	37. 1
08. 3	18. 2	28. 3	38. 3
09. 3	19. 2	29. 3	39. 3
10. 2	20. 3	30. 3	40. 1

நான்கு உணவகங்களுக்கு சீல்; 54 பேர் மீது வழக்கு தாக்கல்

(மட்டக்களப்பு குறூப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்)

மட்டக்களப்பு, காத்தான்குடி பிரதேசத்தில் 4 உணவகங்களுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதுடன், 54 பேர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

காத்தான்குடியில் அமைந்துள்ள ஹோட்டல்கள், உணவகங்கள், சிற்றுண்டிச்சாலைகளில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் திடீர் சோதனை நடத்தினர்.

இதன்போது மனித பாவனைக்கு உதவாத, பழுதடைந்த, காலாவதியான உணவுகளை விற்பனை செய்தமை மற்றும் பிளாஸ்டிக் பாத்திரங்களில் உணவுகளை கையாண்டமை தொடர்பாகவே மேற்படி 4 உணவகங்களுக்கும் சீல் வைக்கப்பட்டுள்ளதுடன், 9 பேர் மீது வழக்கு தாக்கலும் செய்யப்பட்டுள்ளது.



இதேவேளை மருத்துவச் சான்றிதழின்றி உணவகங்கள், சிற்றுண்டிச்சாலைகளில் பணிபுரிந்த 45 பேர் கண்டுபிடிக்கப்பட்டு இவர்கள் மீதும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

சுமார் 6 மணித்தியாலங்களாக இடம்பெற்ற இச்சோதனையின் போது மனித பாவனைக்கு உதவாத பழுதடைந்த, காலாவதியான பெருமளவான உணவுகள் மீட்கப்பட்டதாகவும், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மேலும் கூறினர்.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ்.முரளீஸ்வரனின் பணிப்புரைக்கமைய காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி யூ.எல்.நசீர்தீனின் வழிகாட்டலின் கீழ் காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளை சேர்ந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் 5 பிரிவுகளாக பிரிந்து இச்சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

டெங்கு அபாயம்; அனைவரையும் அவதானமாக இருக்க வலியுறுத்து

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)



அம்பாறையின் கரையோர பிரதேசங்களில் டெங்குநோய் பரவும் அபாயம் காணப்படுவதால் பொதுமக்களை மிகவும் அவதானத்துடன் நடந்துகொள்ளுமாறு, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் சகீலா இஸ்ஸதீன் கேட்டுக்கொண்டார்.

சாய்ந்தமருது, கல்முனை, மருதமுனை, பாண்டிருப்பு, சம்மாந்துறை, காரைதீவு, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, திருக்கோவில், பொத்துவில், இறக்காமம் பிரதேசங்களில் அதிகளவில் நுளம்பு பெருக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், இதனைக் கட்டுப்படுத்த பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார்.

தற்போது அம்பாறையின் பல பகுதிகளிலும் அவ்வப்போது மழை மற்றும் கடும் வெய்யிலான காலநிலை காணப்படுவதால் டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு சாதகமான சூழல் தோற்றுவிக்கப்படக்கூடும்.

ஆகையால் தமது வீடு மற்றும் சுற்றுப்புறச்சூழல், நீர் தேங்கும் இடங்கள் மற்றும் பொருட்கள், வெற்றுக் காணிகள் உள்ளிட்ட வற்றை துப்புரவாக வைத்திருக்குமாறும் பொதுமக்களுக்கு அவர் தெரிவித்துள்ளார். இந்நிலையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் பொதுமக்களிடம் அவர் கேட்டுக்கொண்டார்.

அம்பாறையில் 108 தேர்தல் வன்முறை சம்பவங்கள் பதிவு

மாவட்ட அரசாங்க அதிபர்

(ஒலுவில் விசேட நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் தேர்தல் வன்முறை சம்பவம் தொடர்பாக இது வரையில் 108 சிறு, சிறு சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக, அம்மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம தெரிவித்தார்.

அம்பாறை, சம்மாந்துறை, கல்முனை, பொத்துவில் தேர்தல் தொகுதிகளிலேயே இந்த வன்முறை சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் அரசியல் கட்சிகளினது சிறு குழுக்களுக்கிடையே வேட்பாளர்களின் புகைப்படம் தாங்கிய சுவரொட்டிகள் ஒட்டுவதில் ஏற்பட்ட சம்பவங்களே தேர்தல் வன்முறை சம்பவங்களாக பதிவாகியுள்ளதாகவும், அவர் தெரிவித்தார். அம்பாறை மாவட்ட செயலகத்தில் தேர்தல் முறைப்பாட்டு பிரிவு இயங்கி வருவதுடன், ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களிலும் தேர்தல் முறைப்பாட்டு பிரிவு ஆரம்பிக்கப்பட்டு 24 மணிநேரமும் இயங்கி வருகின்றன. 24 மணிநேரமும் செயற்படும் வகையில் முக்கிய நிலையங்களில் பொலிஸாரும் முப்படையினரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார். இந்த தேர்தலை சுமுகமாக நடத்தி முடிப்பதற்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை தபால் மூல வாக்களிப்புக்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தி அடைந்துள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

மாணவரின் கற்றலுக்காக கணினிகள் அன்பளிப்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)



சாய்ந்தமருது எம்.எஸ்.காரியப்பர் வித்தியாலய மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்காக கல்முனை Shinning Stars அமைப்பால் 2 கணினிகள் அன்பளிப்பாக கடந்த திங்கட்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

மேற்படி வித்தியாலய அதிபர் எம்.எஸ்.எம்.ஆரிப் தலைமையில் இதற்கான நிகழ்வில் Shinning Stars அமைப்பின் சார்பாக ஸ்தாபக தலைவி பஸீரா றியாஸ் மற்றும் அதன் உறுப்பினர்களான றிஸ்னா சுபைர், பெரோஷா காரியப்பர் ஆகியோர் கணினிகளை வழங்கி வைத்தனர்.

இவ்வித்தியாலயத்தில் ICT பாடத்தை கற்கும் தரம் 1 தொடக்கம் தரம் 9 வரையான மாணவர்கள் கணினி ஆய்வுகூடம், கணினி அறை, கணினி வசதியின்றி காணப்பட்டனர். இது தொடர்பாக இந்த அமைப்பினரிடம் பாடசாலை சமூகத்தினர் விடுத்த வேண்டுகோளுக்கமைய இந்த உதவி வழங்கப்பட்டது.

இந்த உதவியை நல்கிய கல்முனை Shinning Stars அமைப்பினருக்கு சாய்ந்தமருது எம்.எஸ்.காரியப்பர் வித்தியாலய சமூகத்தினர் நன்றி தெரிவித்துள்ளனர்.

ஆசிரியர்களுக்கு விசேட விழிப்புணர்வு செயலமர்வு



(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

பட்டிருப்பு வலய கல்விப் பணிமனைக்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 3 இல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு விசேட வழிகாட்டல் விழிப்புணர்வு செயலமர்வு அவ்வலய கல்விப் பணிமனையின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடத்தப்பட்டது.

பட்டிருப்பு வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரனின் வழிகாட்டலின் கீழ் முறைசாரா கல்விப் பிரிவு இணைப்பாளர் றீற்டா கலைச்செல்வனின் ஒழுங்கமைப்பில் இந்த செயலமர்வு நடத்தப்பட்டது.

இதில் வளவாளர்களாக குழந்தை நல வைத்திய ஆலோசகரும் மருத்துவருமான ஏ.சீ.லக்ஷாந், ஆரம்பக் கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் எஸ்.சத்திதாஸ், வழிகாட்டல் ஆலோசனை ஆசிரிய ஆலோசகர் பா.துஸ்யந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது ஆரம்பக் கல்வி மாணவர்களின் வளர்ச்சி சிக்கல், அது கற்றல் மற்றும் கற்பித்தலில் ஏற்படுத்தும் தாக்கம், கற்றல் இடர்பாடுடைய, மெல்ல கற்கும் மாணவர்களை அடையாளம் காணல், அம்மாணவர்களுக்கு பரிகார கற்பித்தல், வகுப்பறை முகாமைத்துவம், கற்றல் மற்றும் கற்பித்தல் நுட்பம், தொழில்நுட்பம் ஆகியவை தொடர்பாக ஆசிரியர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டன.

கந்தளாயில் நூறு வருடகால இத்தி மரம் வேரோடு சரிந்தது

(கிண்ணியா மத்திய நிருபர்)



கந்தளாய் பொலிஸ் நிலைய வளாகத்துக்குள் காணப்பட்ட நூறு வருட காலம் கொண்ட பழமை வாய்ந்த இத்தி மரம் நேற்று வியாழக்கிழமை வேரோடு சரிந்து விழுந்துள்ளது. இம்மரமானது இன்னுமொரு கருங்காலி மரத்தின் மீது விழுந்து பலத்த சேதத்தை ஏற்படுத்தியுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர். இதனால் முச்சக்கரவண்டி ஒன்று முழுமையாக சேதமடைந்துள்ளதுடன், இரண்டு பொலிஸ் ஜீப் வண்டிகளும் சேதமடைந்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

தலைவர் அஷ்ரஃப் அவர்களும் செயலாளர் பாரூக் அவர்களும்



இது இளந்தலைமுறையினருக்கும் அரசியல் களத்திலுள்ளவர்களுக்கும் ஓர் அற்புதமான செய்தி. இதுதான் உண்மையில் சிறந்த அரசியலோடு ஒன்றிணைந்துள்ள நல்ல பண்புகளின் விலாசம். அரசியல் அதிகாரமிக்கவர்கள் தன் தனிப்பட்ட வாழ்க்கைப் பண்புகளில் நல்லவர்களாக வெளிப்படுவது இலகுவான விடயமல்ல. ஆனால் இவ்விரு விடயங்களிலும் அஷ்ரஃப் மிகவும் கவனம் செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுவரையில் கேட்காத புதிய செய்திகளை பாரூக் வாயிலாக அறிந்து கொள்ளக் கூடிய நல்ல பண்புகளை நாம் அறிந்து கொண்டிருக்கின்றோம். அஷ்ரஃப் அரசியலில் தன்னை ஆளுமைமிக்கவராகக் காட்டி நிலை நிறுத்திக் கொண்டதைப் போல தன்னுடைய குணாம்சங்களிலும் உரிய இடத்தை அவர் பெற்று எழுந்து உயர்ந்து நிற்கிறார். அஷ்ரஃபுடைய வாழ்க்கைப் புத்தகத்தை மறுபிரதி செய்து பாரூக்கும் தன்னுடைய தாய்க்கு தங்கக் காப்புகளை வாங்கி தன் கைகளால் போட்டு அஷ்ரஃப் அவர்கள் அளித்த வாக்குறுதியை நம்பிக்கையுடன் நிறைவேற்ற முடியும் என்பதை ஒரு ஆரோக்கியமான செயற்பாடாக வெளிக்காட்டும் பண்புகளும் ஒரு அரசியல்வாதியிடத்தில் எவ்வாறு நன்றியுணர்வுகள் இருத்தல் வேண்டும் என்பதனை அடையாளப்படுத்தும் பாத்திரமாக தவிசாளர் எச். எம். பாரூக் விளங்குகின்றார். அவர் தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.

அரசியல்வாதிகள் வெறுமனே மக்கள் சேவைகளை செய்து விட்டுச் சென்றாலும் தாபகத் தலைவர் எம். எச். எம். அஷ்ரஃப் நல்ல உயர் பண்புகளையும் விதைத்து விட்டுச் சென்றுள்ளார் என்பதை உங்களுடைய செய்திகள் ஊடாக அறிந்து கொள்ள முடிகின்றது. அது தொடர்பான விளக்கங்களைத் தர முடியுமா?

ஒரு நாள் அஷ்ரஃப் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கல்முனையைச் சேர்ந்த கட்சித் தொண்டர் ஒருவரான சீனி முஹமட் அவர்கள் மஹியங்கனையில் நகைக் கடை ஒன்று திறக்கின்றார். நான் வந்து கொண்டு இருக்கிறேன் அங்கு போவதற்கு தயாராக இருங்கள் என்றார். அந்த நபர் எனக்கும் தொலைபேசி அழைப்பு விடுத்திருந்தார். ரவூப் ஹக்கீமுக்கும் அழைப்பு விடுத்திருந்தார். அவர் நேர காலத்துடன் சென்று விட்டார். அப்பொழுது அஷ்ரஃப் இரவு 7.00 மணிக்கு என்னுடன் கதைத்தவர் ஒரு 9.00 மணி அளவில் வந்து விட்டார். அப்பொழுது அவரிடம் மிக அழகான பி. எம். டப்ளியூ கார் இருந்தது. நான் பின்னால் ஏறினேன். அவருக்கு பழைய சினிமா பாடல் மீது அதிக விருப்பம். கொஞ்சம் நேரம் என்னுடன் கதைப்பார். பழைய பாடலைப் போடச் சொல்வார். இப்படியாக அவருடன் மஹியங்கனை சென்றோம். கடைக்குச் சென்று விட்டு அப்பொழுது மஹியங்கனையில் உள்ள வாடி வீட்டில் தங்குவதற்காகச் சென்ற சமயம் அங்கு ரவூப் ஹக்கீம் ஓர் அறையில் உறங்கிக் கொண்டிருந்தார். அவரைத் தட்டியெழுப்பி அங்கு இருந்த மறு கட்டிலில் படுக்கும்படி கூறிவிட்டுச் சென்றவர். காலையில் எழுந்து வந்து ஆற்றுக்கு குளிக்கப் போறேன். வாருங்கள் என்றார். அவ்வாறு குளித்துக் கொண்டு இருவரும் கதைக்கும் போது என்னிடம் அவர் 'நீங்கள் எந்தளவுக்கு உங்கள் உம்மாவிடம் இரக்கம்' என்று கேட்டார்.

நான் என்றால் உம்மாவுடன் மிக இரக்கம். சுடு தண்ணீர் வைத்துக் குளிப்பாட்டுவேன். தலைமுடியினை துடைப்பேன். வீட்டைக் கழுவுவேன். உம்மாவின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வதற்காக அவர் எவையெல்லாம் விரும்புவாரோ அவை எல்லாம் செய்வேன் என்றார்.

அப்பொழுது 'நீங்கள் என்ன செய்வீர்கள் பாரூக்' என்றார். நான் இவை எல்லாம் செய்வது இல்லை. எனக்கு தங்கைமார்கள் இருக்கிறார்கள். அப்போது ஒன்று செய்ய வேண்டும் என்றார். உங்கள் உம்மாவுக்கு என்ன விருப்பமோ அதை வாங்கிக் கொண்டு ஊருக்குப் போங்கள். உம்மாவை வரச் சொல்லி அவரை கதிரையில் அமரச் செய்யுங்கள் என்றார். இடையில் அவர் உங்கள் உம்மாவுக்கு எது விருப்பம் என்றார். அதற்கு நான் என் உம்மாவுக்கு தங்கக் காப்புகள்தான் விருப்பம் என்றேன். அதற்கு அவர் வாங்கிக் கொண்டு சென்று உங்கள் கையால் போட்டு விட்டு அவர் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றார். அதே போன்று கண்டி திரும்பியதுடன் ஒரு நகைக் கடையில் பெரிய காப்பு இரண்டு வாங்கிக் கொண்டு கல்ஹின்னைக் கொண்டு போய் கொடுத்து விட்டு உம்மாவுடைய ஆசீர்வாதத்தைப் பெற்று வந்தேன். அந்த ஆசீர்வாதத்தின் வளர்ச்சிதான் நான் கூட இந்த நிலைக்கு வரக் காரணம். அஷ்ரஃப் அவர்கள் அவர் தாயின் மீது எந்தளவுக்கு பற்றுறுதி வைத்திருக்கிறார் என்ற ஓர் உயர்ந்த நல்ல பண்பைக் கண்டு கொள்ளக் கூடியதாக இருந்தது.

வருங்கால இளம் தலைமுறையினர்கள் தாய் தந்தையர்களின் ஆசீர்வாதத்தை முதலில் பெற வேண்டும். அதன் மூலம்தான் வாழ்க்கையில் முன்னேறலாம். அந்த ஆசீர்வாதம் இல்லாமல் வாழ்க்கையில் முன்னேற முடியாது. பல சவால்களை எதிர்நோக்க வேண்டி வரும்.



நான் கண்டி மாவட்டத்தில் கல்ஹின்னையில்தான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முதலாவது அங்குரார்ப்பணக் கூட்டம் இடம் பெற்றது. அது எங்களது வீட்டின் மாடியில் தான் நடைபெற்றது. அவரிடத்தில் மற்று மொரு நல்ல பண்பு என்னவென்றால் அவர் நேரடியாக சமையறைக்குச் செல்வார். யார் விருந்துகள் அளிப்பாரோ அவர்களுக்கு நன்றி சொல்வதில் ஒரு முன்னணிமிக்க மனிதராகத் திகழ்ந்தார். அவற்றை எல்லா அரசியல்வாதிகளிடத்திலும் நாம் காண முடியாது. அரசியல்வாதிகளுக்காக பெரும் செலவுகள் செய்து பலர் விருந்துகள் வைப்பார்கள். ஆனால் அவர்கள் போய்வாரேன் என்று மட்டும் சொல்லிவிட்டுச் செல்லும் அரசியல் வாதிகள்தான் அதிகம் உள்ளார்கள்.

அரசியல் பயணங்களில் வாழ்க்கை முறைகளுக்கான நல்ல பண்புகளும், வழிகாட்டலும் உண்மையில் ஆழமாக ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன. பிரபல்யமாகப் பேசப்படுபவர்களிடத்தில் நல்ல வாழ்க்கைத் தத்துவங்களும் நியாயத் தன்மையும் நீதியும் அமைந்திருத்தல் வேண்டும். அரசியலில் அதிகம் செல்வாக்கைப் பெற்ற அஷ்ரஃப் அவர்கள் அரசியலில் செயற் திறன்மிக்கவராக இருந்து கொண்டு ஒரு நிலையான வழிகாட்டலையும் இளம் தலைமுறையினர்களுக்கான பகிர்தலையும் செய்து கொண்டிருந்தார் என்று கூறலாம்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஆரம்பக் கூட்டம் காத்தான்குடியில் 1981 இல் இடம்பெற்றதற்குப் பிறகு இரண்டாவது கூட்டம் கொழும்பில் இடம்பெற்றது. அக் கூட்டத்தில் நான் கலந்து கொண்டேன். நான் அப்பொழுது சட்டக் கல்லூரியில் கற்றுக் கொண்டிருந்தேன்.

அஷ்ரஃப் தமிழ் தீவிர வாதிகளின் அச்சுறுத்தல் காரணமாக கல்முனை நகரில் இருந்த மிக அழகிய வீட்டைக் காலி பண்ணி விட்டு கொழும்பு வந்திருந்தார். அவர் கொழும்பு வந்து சட்டத் துறைப் பணிகளை மேற் கொண்டிருந்தார். இத்தருணத்தில் சென்று சட்டப் பயிற்சிகளைப் பெற்ற நான், அஷ்ரஃபுடைய தனிப்பட்ட வாழ்க்கை பற்றியும் அதிகம் தெரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

அவரது பொதுவாழ்க்கையின் அம்சங்களை மறக்கவோ மறைக்கவோ முடியாதுள்ளது. அவர் தலைவர் என்ற அதிகாரத்தைக் கொண்டிருந்தாலும் எந்தச் சந்தர்ப்பத்தில் கூடதாழ்மையான எண்ணப்பாங்குடன் நல்ல நல்ல குணாம்சங்களை அவர் அவ்வப்போது வெளிப்படுத்துவார். இவை பற்றி நிறையப் பேசலாம்.

உங்களோடு இணைந்து பங்காற்றிய கட்சியின் முன்னாள் அரசியல் முக்கிய பிரமுகர்கள் பற்றி சுருக்கமாக கூறுவீர்களா?

நான் முதலில் முன்னாள் உதவித் தவிசாளர்தான் அதாவுல்லாஹ் அவர்கள் பற்றி கூறுவதாயின் அவர் மிக நெருங்கிய நண்பர். கல்ஹின்னையில் எனக்கு பாராட்டு விழா ஏற்பாடு செய்திருந்தார்கள். அவர் எல்லா வேலை வெட்டிகளையும் விட்டுப் போட்டு கல்ஹின்னைக்கு வந்தார். எனது தனிப் பட்ட பண்புகளைப் பற்றி மிக அழகாகப் பேசி மக்கள் மனதில் இடம் பிடித்தார்.

அவருடைய அரசியல் சிந்தனை வித்தியாசமானது. கூட்டங்களில் அஷ்ரஃப் அவர்களுக்கும் அவருக்கும் கருத்து முரண்பாடுகள் வரும். அவ்வாறு கருத்து முரண்பாடுகள் வந்த போதிலும் அவருடைய விடயத்தில் மிகவும் உறுதியாகத் தான் இருப்பார். அவரும் இயன்றளவு தனது நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவதற்காகப் பேசுவார். ஆனாலும் தலைவர் எதைக் கூறுகின்றாரோ அதைச் சரி என்று கேட்டுக் கொண்டு இருப்பார். இப்பொழுதும் அந்த தனித்துவ நிலைப்பாட்டைத் தான் நான் அவரிடம் காணுகின்றேன். அவர் தனிக் கட்சி உருவாக்கி இயங்கிக் கொண்டு பல சாதனைகளைச் செய்து கொண்டு வந்துள்ளார். அவருடைய மாவட்டத்தில் தம் சமூகத்திற்குத் தேவையான நிறைய வேலைகள் செய்து கொண்டு வருகிறார். எப்பொழுது நான் கிழக்கு மாகாணம் சென்றாலும் என்னை வரவேற்று சிறப்பான சாப்பாடுகளைப் போடுவார். அவர் வீட்டுக்கு வெளியே கடற்கரை வெளியில் உட்கார்ந்து கதைப்போம். அவருடைய விசேடமான சாப்பாடு கொக்கு, காடை போன்ற பல பறவைகளை அறுத்து பொறியல் செய்து சாப்பாடு தருவார்.

அவரிடம் நான் கண்ட. பெரிய பண்பு என்னவென்றால் அவர் திறந்த மனம் கொண்டவர். தனது கருத்தை அதை அடைவதற்காக வெளிப்படுத்திக் கொண்டு இருப்பார். அதற்காக மற்றவர்களுடன் கோபித்துக் கொள்ளுகின்ற பண்பும் இல்லை. அவர் மற்றைவர்களையும் அரவணைத்துச் செல்லும் பண்பையும் அவரிடம் கண்டு கொள்ளலாம். தற்போதுள்ள கட்சியின் தலைமைத்துவம் அரவணைக்காமையினால் அவர் பிரிந்து செல்ல நேரிட்டது. இதில் முக்கிய விடயம் என்னவென்றால் அஷ்ரப் அவர்களுக்குப் பிறகு கிழக்கு மாகாண அபிவிருத்தியைத் தருமாறு தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தார். அதனை தற்போதைய தலைமைத்துவம் வழங்காமையினால் கட்சியை விட்டுப் பிரிந்து வெளியே சென்று இன்னுமொரு தனியான கட்சியை ஆரம்பித்தார்.

அதில் வளர்ந்து அமைச்சராக இருந்து இன்றும் அரசியல் பணி புரிந்து வருகின்றார்.

கவிஞர் வேதாந்தி சேகு இஸ்ஸதீன். ஒரு தத்துவார்த்த தலைவர். சிந்தனைவாதி. நீண்ட தூரப் பார்வையாளர். ஆரம்ப காலத்தில் கட்சிக்காக அவர் அதிகம் உழைத்தார். கட்சி தாபகர்களில் அவரும் ஒருவர். நான் கண்டியில் அமைப்பாளராக இருந்த காலத்தில் அவர் கட்சியின் தவிசாளர். என்னுடன் மடவளை, கல்ஹின்னை போன்ற ஊர்களுக்கு தேர்தல் பிரசாரத்திற்காக வந்திருக்கிறார்.

கட்சியின் முதல் தவிசாளர் சேகு இஸ்ஸதீன் . இரண்டாவது குருநாகல் ரஸூல் இருந்தார். மூன்றாவதாக நான். அவர் கட்சிக்காக பெரும் தொண்டாற்றிய மனிதன், அஷ்ரஃப் அவர்கள் பக்கபலமாக இருந்து கட்சியினுடைய வளர்ச்சிக்காக பல பிரசாரப் பணிகளைச் செய்தார். மாகாண சபைத் தேர்தலில் நான் போட்டியிட வேண்டும் என்று அஷ்ரஃப் அவர்களுடன் வந்து ஆர்வத்தை தூண்டியவர். அதில் மருதூர்க் கனியும் இருந்தார்.

அஷ்ரஃப் அவர்களுக்குப் பிறகு முஸ்லிம்கள் பற்றிப் பேசுவதற்கு ஒழுங்கான தலைமைத்துவம் இல்லை. உரத்துப் பேசுவதற்கு யாரும் இல்லை. இது இல்லாமை குறித்து நான் கவலைப்படுகின்றேன்.

ஹிஸ்புல்லாஹ்வின் ஆரம்ப கால அரசியல் வரலாறு பற்றிக் கூறுவதாயின் அவரிடம் தைரியமும் துணிச்சலுமிக்கவர், அவர் எல்லா அரசியல் நடவடிக்கைகளிலும் மிகுந்த உற்சாகத்தோடு பங்குபற்றுவார். அஷ்ரஃப் மற்றும் எங்கள் எல்லோருடைய மனதிலும் வாழ்ந்தவர்.

எனக்கு கென்யா நாட்டுக்கு தூதுவர் கிடைத்த சந்தர்ப்பத்தில் அதற்குப் போவதா? இல்லையா? என்ற மனோ நிலையில் இருந்தேன். கென்யா நாடு மிகவும் பின்தங்கிய நாடு என்ற அடிப்படையில் நான் யோசித்துக் கொண்டிருந்தேன். ஹிஸ்புல்லாஹ் அவர் மனைவி, பிள்ளைகள் எல்லோரையும் அழைத்துக் கொண்டு எனது அருப் பொல வீட்டுக்கு வந்தார். அப்பொழுது நான் வீட்டில் இருக்கவில்லை. அவர் அப்பொழுது தொலைபேசியில் தொடர்பு கொண்டு கென்யா நாட்டுக்கு நான் போய் இருக்கிறேன். அது ஒரு நல்ல நாடு. நீங்கள் அந்த நியமனத்தைப் பெற்றுக் கொண்டு செல்லுங்கள். அது உங்கள் வாழ்கையில் வெளிச்சமாக இருக்கும் என்று நம்பிக்கையை ஊட்டினார்.

அதன் பிறகு எனக்குத் தரக் கூடிய மரியாதையைத் தருவார். என்னைக் கண்டவுடன் எல்லா வேலைகளையும் விட்டுப் போட்டு ஓடி வருவார். இப்போது கூட அப்படித்தான். அவர் ஒரு செயற் திறன்மிக்கவர் என்பதை முழு நாடும் நன்கு அறியும். அரசியலில் நெருங்கிய உறவினர்களும் இல்லை. பகைவர்களும் இல்லை. அரசியலின் முழுமையான நோக்கமே அதிகாரம்தான். அவர்களுடைய கொள்கை திட்டங்களை தியாகம் செய்து அரசியல் செய்வதைத்தான் நான் இப்போது காண்கின்றேன்.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைமையகமான தாருஸ்ஸலாத்தின் சிறப்பு பற்றிக் கூறுவீர்களா?

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமையகமான தாருஸ்ஸலாம் கட்டிட நிர்மாணப் பணியை தற்போதுள்ள வடமேல் மாகாண ஆளுநர் ஹாபிஸ் நஸீர் எடுத்தார். இதற்காக கண்டியில் மஹாவெலி ரிச் ஹோட்டலில் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்து அதற்கான நிதியை சேகரித்துக் கொடுத்தோம். இவைபோல் நாடளாவிய ரீதியிலும் அதற்கான உதவிகள் கிடைக்கப் பெற்றன. லிபியா நாட்டினுடைய பங்களிப்பு அதிகம் எனலாம். அது எப்படியோ கட்டி முடிந்து விட்டது. அப்பொழுதுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர் பீட உறுப்பினர்கள் நல்ல மனதோடு அடிக்கல் நாட்டியதால் அக்கட்டடம் மிகவும் வெகு விரைவாகக் கட்டப்பட்டு மிக அழகான முறையில் கம்பீரமாக காட்சியளிக்கும் வகையில் திறந்து வைக்கப்பட்டது.

அந்த இடம் முஸ்லிம்களின் தலைமையகமாக இருக்க வேண்டும் என்று அஷ்ரஃப் கனவு கண்டார். அந்த இடத்தில் முஸ்லிம்களுடைய ஆவணக் காப்பகம் ஒன்று இடம் பெற வேண்டும் என்பதற்காக அஷ்ரஃப் கண்டியில் ஆசிரியர் ஆலோசகராக் கடமையாற்றிய முஸாதிக் என்பவரை நியமித்து அதற்கான பணிகளையும் மேற்கொண்டார். இந்தக் கட்டிடத்திலே எவ்வளவோ கூட்டங்கள் நடத்தியுள்ளோம். இதில் குறிப்பாகச் சொல்லப் போனால் வெளிநாட்டுத் தூதுவர்களாக சென்றவர்களுடைய பாராட்டு விழாக்கள், நூல் வெளியீட்டு விழாக்கள், சமூகம் சார்ந்த பல்வேறு அரசியல் கருத்தரங்குகள் போன்ற பல்வேறு நிகழ்வுகளும் இடம் பெற்றன. இந்த மண்டபம் திறந்து ஒரு பத்து நாளைக்குள் இக் கட்டுரையாசிரியர் இக்பால் அலி எழுதிய 'இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் கலாநிதி கே. எம். எச். காலிதீன்' என்னும் நூல் வெளியீட்டு விழா இடம்பெற்றது. பேராதனை பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானத்துறை பேராசிரியர் அம்பலவாணர் சிவராசா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக முஸ்லிம் காங்கிரஸின் தாபகத் தலைவர் எம். எச். எம். அஷ்ரஃப் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக கல்விச் சேவை ஆணைக்குழுவின் ஆணையாளர் பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக கலந்து கொண்டார்.

யாரெல்லாம் எம். எச். எம். அஷ்ரஃப் அவர்களுடன் கைகோர்த்து கட்சியை கட்டியெழுப்பினார்களோ அவர்கள் படிப்படியாக கட்சியில் இருந்து வெளியேறியமை மனம் வருந்தக் கூடியவையாகும். எவ்வாறாயினும் நான் ஆசிரியராக நியமனம் பெற்றபோது எனது முதல் சம்பளம் 138 ரூபாவாகும்.

ஆண்டவன் படிப்படியாக உயர்த்தி என்னை இந்த நிலைமைக்கு ஆளாகினான். நான் நேர்மையாக வாழ்ந்ததற்கான ஒரு பரிசுதான் நான் வாழும் இல்லம். சல்மானும் அவருடைய உண்மையான நடத்தையின் காரணமாக அஷ்ரஃப் மனத்தில் இடம் பிடித்திருந்தார்.... இன்னும் தொடரும்.

நேர்காணல் இக்பால் அலி



நாட்டின் கரையோர பிரதேசத்தைச் சுற்றி நடந்து சாதனைபுரிந்த பேருவளை சஹ்மி சஹீதை, சமூக சேவையாளர் பாஸி சுபைர் கடந்த (26) வாந்துவை காலி வீதியினூடாக வருகை தந்தபோது வாழ்த்து தெரிவித்து எடுத்த படம்.

மூவின மக்களும் சந்தோஷமாக வாழ அரசியல் தலைவர்கள் செயல்பட வேண்டும்

நிந்தவூர் முன்னாள் உதவி தவிசாளர்



நாட்டின் அரசியல் ஒருபுறம் இருந்தாலும் மூவின மக்களும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும். தமிழ், முஸ்லிம், சிங்களவர்களாகிய அனைத்து மக்களும் நிம்மதியுடன் சந்தோஷமாக வாழ அரசியல் தலைவர்கள் செயல்பட வேண்டுமென, நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் உதவி தவிசாளரும் அகில இலங்கை சமாதான நீதவானுமான சுலைமா லெப்பை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ள போது,

"என்னை பொறுத்த வரையில் நிந்தவூரில் வாழும் மக்கள் நிம்மதியாக வாழ எனது பங்களிப்பு கடந்த காலத்தில் இருந்தமை போன்று எதிர்காலத்திலும் அம்மக்கள் நிம்மதியாக வாழ என்னால் முடியுமானவரை கல்வி, சுகாதாரம், மின்சாரம், விவசாயம் போன்ற துறைகளில் அன்றாடம் தேவையான உதவிகளை பெற்றுக்கொடுக்க மாகாண சபையாக இருந்தாலும் மத்திய அரசாங்கமாக இருந்தாலும் அயராது பாடுபடுவேன்.

எமது பிரதேசத்தில் கல்வி போன்ற துறைகளில் முடியுமானவரை கூடிய கவனமெடுத்து பற்றாக்குறையாக இருக்கும் கட்டட வசதிகளை பெற்றுக் கொடுக்க வேண்டும். இன்று எமது சமுதாயத்தின் தேவைகளை இனங்கண்டு அரசியல் பாதையில் கால் எடுத்து வைக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.



மமா/கடு/ கலகெதர, ஜப்பார் மத்திய கல்லூரி தேசிய பாடசாலை மாணவ, மாணவிகள் கல்விச்சுற்றுலா மேற்கொண்டு நேற்று கொழும்பு வந்தனர். இவர்கள் பாடசாலை அதிபர் பஸால் மொஹமட் தலைமையில் லேக்ஹவுஸ் நிறுவனத்தை பார்வையிட வருகை தந்தபோது எடுத்த படம். **(படம்: சிந்தக குமாரசிங்க)**

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் மகோற்சவம்

காரைதீவு குறூப் நிருபர்

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோயிலின் வருடாந்த மகோற்சவ திருவிழா எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 4ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. இந்நிலையில் தேர் திருவிழா செப்டெம்பர் மாதம் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

போதைப்பொருள் பாவனையிலிருந்து பாதுகாத்தல்; பயிற்சி செயலமர்வு

பாலமுனை விசேட நிருபர்

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களை அதிலிருந்து பாதுகாத்து வழிநடத்துவதற்கான பயிற்சி செயலமர்வு நேற்று முன்தினம் புதன்கிழமை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்றது.சுகாதார அமைச்சினுடைய உளநல பணியகத்தின் பணிப்புரைக்கமைய கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய உளநல பிரிவு இச்செயலமர்வை ஒழுங்கு செய்தது.

கல்முனை பிராந்திய வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வைத்தியர்கள் உள்ளிட்ட 40 பேர் செயலமர்வில் கலந்துகொண்டனர். இவர்களுக்கு வழிகாட்டுதல் மற்றும் சிகிச்சை அளித்தல் தொடர்பாக பயிற்சி செயலமர்வு நடத்தப்பட்டது.

பெறுகை அறிவித்தலின் திருத்தம்

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு
நீர்ப்பாசன அமைச்சு
நீர்ப்பாசனத் திணைக்களம்

தந்திரிமலை - கீழ் மல்வத்துஓயா பல்துறை அபிவிருத்தித் திட்டத்திற்கு கழுவிய/ஆற்று மணலை வழங்குவதற்கான பெறுகை

2024 ஆகஸ்ட் 12ஆம் திகதிய ''தினகரன்'' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பெறுகை அறிவித்தலில் பின்வரும் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

விலைக்கோரல் இல.	வழங்கல் விபரங்கள்	அளவு (கியூப்)	விலைக் கோரல் செல்லுபடியாக வேண்டிய காலம்	விலைக் கோரல் பிணை முறித் தொகை (ரூபா)	பிணை முறி செல்லுபடிக் காலம்
IFB/ID/GOSL/NCB/2024/016	தந்திரிமலை - கீழ் மல்வத்துஓயா பல்துறை அபிவிருத்தித் திட்டத்திற்கு கழுவிய / ஆற்று மணலை வழங்குவதற்கான பெறுகை	6000	2024 டிசம்பர் 09ஆம் திகதி வரை	3,000,000.00	2025 ஜனவரி 06ஆம் திகதி வரை

விலைமனுக்கள் 2024 செப்டெம்பர் 09ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை வழங்கப்படும் என்பதுடன் 2024 செப்டெம்பர் 10ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும் என்பதை தயவு செய்து கவனத்திற் கொள்ளவும்.

2024 ஆகஸ்ட் 12ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் உள்ள மேற்கூறியவைகள் தவிர்ந்த ஏனைய விபரங்கள் எவ்வித மாற்றமுமின்றி அவ்வாறேயிருக்கும்.

பொறி. அஜித் குணசேக்கர,
நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்,
நீர்ப்பாசனத் திணைக்களம்,
இல. 230, பௌத்தாலோக்க மாவத்தை,
கொழும்பு -07.

2024-08-30ஆம் திகதி.

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்

விஞ்ஞானம் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம் (STHRDP)

செயற்றிட்ட அமுல்நடத்தல் பணிமனை
தொழில்நுட்பவியல் பீடம்
இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், மிஹிந்தலை

தொலைபேசி: அலுவலகம்: +94252266228 செயற்றிட்ட பிரதி பணிப்பாளர்: +94252266380

கடனிலக்கம் மற்றும் தலைப்பு	3698/3699-SRI : விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்
ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு	MOE/STHRD/RJ/E64: மிஹிந்தலை, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக, தொழில்நுட்பவியல் பீட, தகவல் மற்றும் தொடர்பாடல் திணைக்களத்திற்கு மேசைக் கணனிகளை வழங்கல், ஒப்படைத்தல் மற்றும் நிறுவுவதற்கான பெறுகை.
	MOE/STHRD/RJ/E93: மிஹிந்தலை, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக, தொழில்நுட்பவியல் பீட, தகவல் மற்றும் தொடர்பாடல் திணைக்களத்திற்கு மடிக் கணனிகளை வழங்கல், ஒப்படைத்தல் மற்றும் நிறுவுவதற்கான பெறுகை.
விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி	2024.09.27 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு (உள்ளூர் நேரம்)

1. இலங்கை சோஷலிச குடியரசானது ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து நிதியிடலை கல்வி, அமைச்சின் கீழ் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட (STHRD செயற்றிட்டம்) அமுல்நடாத்தலின் ஆகுசெலவினத்திற்காக பெற்றுக் கொண்டுள்ளதுடன் இந்த நிதியின் பெறுகைகளின் பகுதியொன்றை மேலே பெயரிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவழிப்பதற்கு உத்தேசித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் வள நாடுகளின் தகுதியுள்ள விலைமனுதாரர்களும் இவ்விலைமனுவில் பங்கேற்றலாம்.
2. இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக (''கொள்வனவுக்காரர்'') விஞ்ஞானம், மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட, செயற்றிட்ட பிரதி பணிப்பாளரின் சார்பாக பல்கலைக்கழக பெறுகைக் குழுத் தலைவர், தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை மேலே குறிப்பிட்டவாறு 'இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் பீட, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் திணைக்களத்திற்கு கணனிகளின் வழங்கல், ஒப்படைத்தல் மற்றும் நிறுவுதலை கோருகின்றார். (''பண்டங்கள் '')
3. ஆஅவ இன் பண்டங்களின் பெறுகையான தனி-கட்ட-ஒரு-உறை நடைமுறையான பண்டங்களின் பெறுகைக்கு அமைவாக பகிரங்க போட்டிரீதியிலான கேள்விக்கோரல் நடத்தப்படும்.
4. கேள்விக்கோரல் ஆவணத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறான பின்வரும் முக்கிய தகைமைகளையுடைய தகுதியுள்ள கேள்விதாரர்கள் மாத்திரமே இந்த கேள்விக்கோரலில் பங்குபற்றலாம்.

கேள்விக்கோரலின் விபரம்	கடந்த மூன்று வருடங்களில் பிரதான வழங்குநராக ஒவ்வொன்றின் பெறுமதி பின்வருமாறு குறிப்பிட்டுள்ள ஆகக் குறைந்தது இரு ஒப்பந்தங்கள் 6 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறு நிகரான தன்மை மற்றும் சிக்கல்தன்மை கொண்டுள்ளவற்றை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல். (2019.01.01 இலிருந்து)	கடந்த மூன்று வருடங்களில் (2022/2023, 2021/2022, 2020/2021) பின்வருவனவற்றின் பூர்த்தி செய்யப்பட்ட அல்லது முடிவுறாத ஒப்பந்தங்களுக்காக விலைமனுதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த பணக் கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிதிப்புரள்வு. (இ. ரூபாவில்)
MOE/STHRD/RJ/E64: மிஹிந்தலை, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக, தொழில்நுட்பவியல் பீட, தகவல் மற்றும் தொடர்பாடல் திணைக்களத்திற்கு மேசைக் கணனிகளை வழங்கல், ஒப்படைத்தல் மற்றும் நிறுவுவதற்கான பெறுகை	இனம் I, மேசைக்கணினி 1 ஆம் அம்சம் 85.0 மில். இனம் II மேசைக்கணினி 2 ஆம் அம்சம் 35.0 இனம் III 3 ஆம் அம்சம் 4.0 மில். இ.ரூபாவிற்கு குறையாதது மற்றும் 2.0 மில் 4 ஆம் அம்சம் வேலை நிலைய மேசைகணினி	இனம் ஐஇ மேசைக்கணினி 1 ஆம் அம்சம் 250.0 மில். இனம் II மேசைக்கணினி 2 ஆம் அம்சம் 95.0, இனம் III 3 ஆம் அம்சம்10.0 மற்றும் 4.0 மில். இ.ரூபாவிற்கு குறையாதது மற்றும் 5.0 மில் 4 ஆம் அம்சம் மற்றும் 2.0 மில். 4 ஆம் அம்சம் வேலைநிலைய மேசைகணினி
MOE/STHRD/RJ/E93: மிஹிந்தலை, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக, தொழில்நுட்பவியல் பீட, தகவல் மற்றும் தொடர்பாடல் திணைக்களத்திற்கு மடிக் கணனிகளை வழங்கல், ஒப்படைத்தல் மற்றும் நிறுவுவதற்கான பெறுகை.	1 ஆம் அம்ச மடிக்கணனி இனம் I , 17.50 மில்லியனுக்கு குறையாத 2 ஆம் அம்சமடிக்கணனி இனம் II இலங்கை ரூபாவில் 7.50 மில்லியனுக்கு குறையாத 3 ஆம் அம்ச மடிக்கணனி இனம் III 11.0 மில்லியனுக்கு குறையாதது.	1 ஆம் அம்ச மடிக்கணனி இனம் I , 50.0 மில்லியனுக்கு குறையாத 2 ஆம் அம்ச மடிக்கணனி இனம் II இலங்கை ரூபாவில் 25.0 மில்லியனுக்கு குறையாத 3 ஆம் அம்ச மடிக்கணனி இனம் III 35.0 மில்லியனுக்கு குறையாத மடிக்கணனி.

குறிப்பு: ஆகக்குறைந்தளவில் மொத்த ஆதனங்கள் மற்றும் மொத்த கடப்பாடுகளுக்கிடையிலான வித்தியாசமாக கணிக்கப்பட்ட கடந்த வருடத்திற்கான கேள்விதாரரின் தேறிய புரள்வானது சாதகமாகவிருத்தல் வேண்டும்.

5. மேலதிக தகவலைப் பெறுவதற்காகவும் கேள்விக்கோரல் ஆவணங்களை பரீட்சிப்பதற்குமாக கேள்விதாரர் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

   சிரேஷ்ட பெறுகை அலுவலர், செயற்றிட்ட அமுலாக்கல் பணிமனை, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம், தொழில்நுட்பவியல் பீடம், இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், மிஹிந்தலை. ZIP code: 50300, Sri Lanka.

   Telephone: 0714477898. Fax: 025 2266380. Mail: sporj-sthrd@mohe.gov.lk

   2024.09.06 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறுவதுடன் ஆர்வமுள்ள கேள்விதாரர் இக்கூட்டத்தில் பங்குபற்றுமாறு அழைக்கப்படுகின்றனர்.

6. ஆங்கில மொழியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்வதற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்கள் மேலேயுள்ள முகவரிக்கு விலைமனுக்கோரல் ஆவணங்களுக்காக MOE/STHRD/RJ-E64 என்ற IFB இலக்கத்திற்காக மீளளிக்கப்படாத கட்டணமாக 25,000 இ.ரூபாவையும் (இருபத்தைந்தாயிரம் ரூபா மாத்திரம்) மற்றும் இலங்கை ரூபா 10,000 I (பத்தாயிரம் ரூபா மாத்திரம்) MOE/STHRD/RJ-E93 என்ற IFB இற்காக ரொக்கப்பணத்தில் அல்லது 83804379 என்ற மிஹிந்தலை இலங்கை வங்கியின் கணக்கிற்கு செயற்றிட்ட பிரதி பணிப்பாளர், STHRD செயற்றிட்டம், இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், மிஹிந்தலை என்ற பெயரில் வழங்கப்பட்ட வங்கி வரைவுடன் விண்ணப்பித்தல் வேண்டும். 2024.09.26 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் வார நாட்களில் ஆவணம்/ஆவணங்கள் வழங்கப்படும். எவ்வித இழப்பிற்கும் அல்லது தாமத ஒப்படைத்தலுக்கும் பொறுப்பு ஏற்கப்படமாட்டாது.
7. 2024.09.06 திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரிக்கு கேள்விக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறான கேள்விப்பிணையுடன் உங்கள் விலைமனுக்களை ஒப்படைக்கவும்.

   பிரதி செயற்றிட்ட பணிப்பாளர்,
   செயற்றிட்ட அமுல்நடாத்தல் பணிமனை,
   STHRD செயற்றிட்டம், தரை மாடி,
   தொழில்நுட்பவியல் பீடம்,
   இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்,
   மிஹிந்தலை, இலங்கை.

   கேள்விக்கோரல்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி நேரத்தின் பின்னர் கேள்விக் கோரல்கள் முறையாக சமுகமளித்திருக்கும் கேள்விதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படுவதுடன் எவ்வித இழப்பிற்கும் அல்லது தாமத ஒப்படைத்தலுக்கும் பொறுப்பு ஏற்கப்பட மாட்டாது.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்,
மிஹிந்தலை.
திகதி: 30.08.2024

பெறுகை அறிவித்தல்

இரத்தினபுரி பிரதேச சபை - சபரகமுவ மாகாணம்

01. கீழ்க்காணும் வேலை விடயங்களுக்காக இரத்தினபுரி பிரதேச சபையின் பெறுகைக் குழுவின் தலைவரால் 2024.09.18 மு.ப. 11.00 வரை கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்கப்படும்.

தொடர் இல.	வேலை விடயம்	பொதுவான மதிப்பீட்டு வேலைப் பெறுமதி (ரூ.மி.)	மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (ரூ.)	மீளளிக்கப்படும் கேள்விப் பிணை (ரூ.)	ஒப்பந்த பதிவுப் பெறுமதி
01	சுற்றுலாத்துறை மனங்கவர் இடமாக கஜமன் அம்பலத்தை மறுசீரமைப்புச் செய்தல்	8.8	5,000.00	88,000.00	C6/C7

02. இக்கேள்வி கோரல் திறந்த போட்டி பெறுகை செயற்பாட்டின் கீழ் இடம்பெறுவதுடன் இக் கைத்தொழில்களுக்கு ரூ.மி. 50 இற்கு குறைவான படியால் அரச நிதி சுற்றுநிருப இல. 2016/04(II) மற்றும் 2016(04(II) இன் பிரகாரம் பிரதேச முன்னுரிமை மற்றும் குறித்த ஊஜனுயு தர முன்னுரிமையை அடிப்படையாகக் கொண்டு கட்டிட நிர்மாணத்திற்கான கேள்விதாரர் தேர்ந்தெடுக்கப்படுவர் அச்சுற்று நிருபத்துடன் சம்பந்தப்பட்ட பின்னர் வழங்கப்பட்ட அரச நிதி சுற்று நிருபம் 2020/03, 2020/03(I) மற்றும் 04/2016(IV) ஆகிய சுற்று நிருபங்களும் பெறுகை விடயத்துடன் பொருந்தும்

03. 2024.08.30 முதல் 2024.09.13 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை மேற் கண்டவாறு கட்டணங்களைச் செலுத்தி இரத்தினபுரி பிரதேச சபை அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

04. சகல கேள்விதாரர்களும் இக் கைத்தொழிலிற்காக மேற்படி கேள்விப் பிணை முறி பெறுமதியுடன் சம்பந்தப்பட்ட கேள்வி பிணைமுறியாக அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட கேள்விப் பிணை முறியொன்றை 2024.09.18 முதல் 2025.01.15 வரை செல்லுபடியாகுமாறு 'செயலாளர், பிரதேச சபை, இரத்தினபுரி' சலுகை பெறுபவராக பெயர் குறிப்பிட்டு பெற்றுக் கொண்ட கேள்விப் பிணை முறியின் மூலம் அல்லது குறித்த கைத்தொழிலின் பெயரில் கேள்விப் பிணைத் தொகையாக பிரதேச சபையில் குறித்த தொகையை வைப்புச் செய்து பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை கேள்வி ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. இவ் வேலை பற்றிய விபரங்களை இரத்தினபுரி பிரதேச சபைக்கு வருகைதந்து அல்லது தொ.பே. இல. 045-2228038 இடம் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். தேவைப்படுவோருக்கு வாரத்தின் வேலை நாட்களில் இலவசமாக கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

06. பொறியிடப்பட்ட கேள்விகள் 2024.09.18 மு.ப. 11.00 இற்கு அல்லது அதற்கு முன்பு இரத்தினபுரி பிரதேச சபை அலுவலகத்தில் பொறியிடப்பட்ட பெட்டியில் கொண்டுவந்து உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன் விலைமனுக்கள் உள்ளிடும் உறையின் இடது மேல் மூலையில் கைத்தொழிலின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். மேலும் கைத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட நகல் பிரதியை வேறு உறையில் இட்டு உறையின் இடது மேல் மூலையில் வேலையின் பெயர் மற்றும் நகல் பிரதியென குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

07. 2024.09.18 மு.ப. 10.00 இற்கு இரத்தினபுரி பிரதேச சபை அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும். கேள்வி திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

08. கேள்விப் பத்திரத்தை முழுமையாக அல்லது அரைவாசியை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை இரத்தினபுரி பிரதேச சபையின் பெறுகைக் குழுவிற்கு உரியது.

09. சகல கேள்விகளும் 2024.12.18 வரை செல்லுபடியாதல் வேண்டும்.

2024.08.30ம் திகதி

தலைவர்,
பெறுகைக்குழு,
இரத்தினபுரி பிரதேச சபை.
இரத்தினபுரி.

LANKACOAL COMPANY(PVT)LTD

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு
இலங்கை நிலக்கரி கம்பெனி (பிரைவேட் லிமிடட்)

2025 முதல் 2027 வரை இலங்கை புத்தளம் லக்விஜய மின் உற்பத்தி ஆலைக்கான நிலக்கரியினை படகு மூலம் நகர்த்தும் சேவை
விலைமனு இலக்கம் - LCC/24/LT/1

இலங்கை நிலக்கரி கம்பெனி (பிரைவேட்) லிமிடெட் (LCC) சார்பாக மின்வலு அமைச்சின் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட விசேட கொள்முதல் குழுத் (SSCAPC) தலைவரினால் 2025-2027 வரை புத்தளம் லக்விஜய மின்வலு ஆலைக்கு நிலக்கரியை படகு மூலம் நகர்த்தும் சேவைக்காக தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

நாட்டிலுள்ள நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்களுக்கான நிலக்கரியைக் கொள்வனவு செய்வதற்காக 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கை நிலக்கரி கம்பெனி (பிரைவேட்) லிமிடெட் (LCC) நிறுவப்பட்டது. வரையறுக்கப்பட்ட நிலக்கரி கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்மின் பங்குகள் திறைச்சேரி, இலங்கை மின்சாரசபை, இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் இலங்கை வரையறுக்கப்பட்ட கப்பல் கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் காணப்படுகின்றது.

1. ஒப்பந்த காலம் 2025 ஜனவுரி முதல் 2027 மே மாதம் வரை
2. இலங்கை மின்சார சபையின் விருப்பத்தின்பேரில் 5,625,000±10% MT நிலக்கரி வழங்கப்பட உள்ளது.
3. ஒரு மெட்ரிக் டொன்னுக்கான விலை அமெரிக்க டொலர் அடிப்படையில் குறிப்பிடப்படும்.
4. மனுப் பாதுகாப்புத் தொகை USD 100,000 (USD நூறாயிரம் மட்டும்) மற்றும் டெண்டர் முடிந்த மூன்று மாதங்கள் வரை செல்லுபடியாகும்.
5. விலைமனுக்களை சமர்ப்பிக்க வேண்டிய காலம் **2024.10.10 ஆம் திகதி மு.ப.10.00 மணிவரை** (இலங்கை நேரப்படி) ஆகும்.
6. மனு ஆவணத்தின் முழுமையான தொகுப்பை **ரூ100.000.00** (LKR. ஒரு இலட்சம் ரூபாய்) மீள்ளளிக்கப்படதா கட்டணம் செலுத்திய **வைப்பு செய்யப்பட்ட ரசீது** அல்லது **டெலிகிரா/பிக் டிரான்ஸ்.ப்ர் (TT) ரசீதுடன்** எழுத்துப்பூர்வ கோரிக்கையை சமர்ப்பிப்பதன் மூலம் **2024.09.02 ஆம் திகதி முதல் 2024.10.09** ஆம் திகதி வரை வேலை நாட்களில் **மு.ப.09.00 முதல் பி.ப.4.00** வரை (இலங்கை நேரப்படி) **இலங்கை நிலக்கரி கம்பெனி (பிரைவேட்) லிமிடெட், இல-51/3, சுரநிமல பிதேசம், துட்டுகெமுனு வீதி (முன்னால்), கொஹுவல, தெஹிவல, இலங்கை 10350. எனும் முகவரியில்** பெற்றுக்கொள்ளலாம்.

வங்கி கணக்கு விபரங்கள்,

நிறுவனத்தின் பெயர்	:	**இலங்கை நிலக்கரி கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்,**
கணக்கு இலக்கம்	:	**004100130000745**
வங்கி	:	**இலங்கை வங்கி - கூட்டுறவு கிளை பிரிவு இல-35, விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.**
SWIFT குறியீடு	:	**PSBKLKLX**

7. விபரங்கள் அடங்கிய மனு ஆவணத்தின் நகலை லங்கா நிலக்கரி நிறுவனத்தின் இணைய தளத்தில் இருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இணைப்பு **https:// lankacoal.lk /docs/ LCC-24-L%20T-1%20Information%20copy%20of%20the%20Bidding%20Document%20for%20Coal%20Lighteri ng%20Service%20for%20Lakvijaya%20Power%20Plant%20%20(1).pdf**
8. முத்திரையிடப்பட்ட மனு ஆவணங்களை **2024.10.10** ஆம் திகதி **மு.ப.10.00** மணி வரை (இலங்கை நேரப் படி) மேலே உள்ள முகவரியில் (6 ஆம் இலக்கத்தில்) கொடுக்கப்பட்ட முகவரிக்கு வழங்கப்படும் மற்றும் ஏலங்களை சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு முடிந்தவுடன் உடனடியாக திறக்கப்படும்.
9. மனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் (இரண்டு நபர்கள் மட்டுமே) மனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் பங்கேற்க அனுமதிக்கப்படுவர்.
10. 1987 இலக்கம் 03 ஒப்பந்த சட்டத்தின் கீழ் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் உள்ள ஏற்பாடுகள் இந்தக் கொள்வனவுக்குப் பொருந்தும்.
11. மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக தயவு செய்து தொலைபேசி இலக்கம் : **011 2 824 681/ 2** அல்லது **077 7 875 219** தொலைநகல் : **011 2 824 689**, மின்னஞ்சல் முகவரி : **sujantha.pm@lankacoal.lk.** யின் ஊடாக முகாமையாளர் - (கொள்முதல்) இலங்கை நிலக்கரி கம்பெனி (பிரைவேட்) தொடர்பு கொள்ளவும்.

தலைவர் - LCC
C/O தலைவர் (SSCAPC)
(SSCAPC) குழு

இலங்கை நிலக்கரி கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்
51 / 3, சுரநிமல பிதேசம், துட்டுகெமுனு வீதி,
கொஹுவல - தெஹிவல, இலங்கை 10350.

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்

சுகாதார அமைச்சு

கேள்விக்கோரல்களுக்கான அழைத்தல்

திகதி:	2024.08.30
கடன்/ மானிய இல. மற்றும் தலைப்பு	ஆஅவ கடன் இல.: 4121 :சுகாதார முறைமை வலுவூட்டல் செயற்றிட்டம் - மேலதிக நிதியிடல்
ஒப்பந்த இல. தலைப்பு	HSEP(AF)/PIU(CP)/PRO/W-2/2024/01 சுகாதார முறை விரிவுபடுத்தல் செயற்றிட்டம் - மேலதிக நிதியிடல் - இன் கீழ் மாத்தளை மாவட்டத்தில் 2 எண்ணிக்கையுடைய PMCU/DH ஆகியவற்றின் நிர்மாணம்/ புதுப்பித்தல்
தொகுதிகள்	LOT A. Dullewa PMCU , LOT B. Aluthwewa PMCU
கேள்விக்கோரல்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதி	2024.10.01

1. சுகாதார முறைமை வலுவூட்டல் செயற்றிட்ட ஆகுசெலவிற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ஆஅவ) (ADB) நிதியுதவியை இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது பெற்றுள்ளது. இந்த நிதியிடலின் பகுதியொன்று மேலே பெயர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தத்தின் கீழான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிடப்படும். ஆஅவ இன் தகுதியுள்ள வள நாடுகளின் விலைமனுதாரர்கள் இதில் பங்கு பற்றலாம்.
2. கீழே விபரிக்கப்பட்டவாறு ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையங்களின் வசதிகளின் மேம்படுத்தல் அடங்கலான நிர்மாணம் மற்றும் பூர்த்தியாக்கல் வேலைக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து சுகாதார அமைச்சின் (''தொழில் வழங்குநர்'' என அழைக்கப்படுபவர்) செயலாளரின் அலுவலகத்தின் கீழ் கொழும்பு-08, கின்ஸி வீதி, **3/19,** ஆம் இலக்கத்திலுள்ள சுகாதார முறைமை விரிவுபடுத்தல் செயற்றிட்ட, செயற்றிட்ட பணிப்பாளர் முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விக்கோரல்களை அழைக்கின்றார்.

LOT	புதுப்பித்தல் வேலையின் பெயர்
LOT A	Dullewa PMCU
LOT B	Aluthwewa PMCU

3. விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு ஆஅவ இன் தனிக்கட்ட, ஒரு-உறை நடைமுறைக்கமைவாக பகிரங்க போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடாத்தப்படுவதுடன் தகுதியுள்ள நாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் பங்கு பற்றலாம்.
4. இந்த விலைமனுக்கோரலில் பின்வரும் பிரதான தகைமைகளையுடைய தகுதியுள்ள கேள்விதாரர்கள் மாத்திரமே பங்கு பற்றலாம்.

அ. நிதியிடல்:

(i) வரலாறுரீதியிலான நிதியிடல் செயற்பாடு: விலைமனுதாரரின் நிதியிடல் நிலைமையின் தற்போதுள்ள உறுதிப்பாட்டை காட்சிப்படுத்துவதற்காக கடந்த மூன்று (3) வருடங்களின் நிதியிடல் கூற்றுக்களை சமர்ப்பித்தல்.

- வரையறுக்கப்பட்ட பொறுப்புள்ள கம்பனிகள்: கணக்காய்வு செய்யப்பட்ட நிதியிடல் கூற்றுக்கள்.
- கூட்டுப்பங்குடைமைகள் மற்றும் ஏககூட்டாண்மைகள்: அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர்/ பட்டயம் பெற்ற கணக்காளரினால் சான்றழிக்கப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட நிதியிடல் கூற்றுக்கள் அத்துடன் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வருமான வரி திரட்டுக் கடிதமும்.

(ii) வருடாந்த நிர்மாண சராசரி நிதிப்புரள்வு: செயற்பாட்டிலுள்ள அல்லது பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றழிக்கப்பட்ட மொத்த கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிர்மாண நிதிப்புரள்வை (கீழேயுள்ள அட்டவணையை பார்வையிடவும்) விலைமனுதாரர் (கூட்டுமுயற்சி மற்றும் பங்குடமை) கொண்டிருத்தல் வேண்டும். (கீழேயுள்ள அட்டவணையில் கூறப்பட்டுள்ள தேவைப்படுத்தல்கள் ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனியாக பிரயோகப்படுத்தப்படும்)

LOT	புதுப்பித்தல் வேலையின் பெயர்	இலங்கை ரூபாவில் (மில்லியன்)
LOT A	Dullewa PMCU	75.70
LOT B	Aluthwewa PMCU	90.23

(iii) நிதியிடல் மூலவளங்கள்: விலைமனுதாரர் (தேவைப்படுமிடத்து கூட்டுமுயற்சி மற்றும் பங்குடமை) அதனது நிதியிடல் மூலவளங்கள், அதனது தற்போதுள்ள ஒப்பந்த கடப்பாடுகளுக்கான அதனது நிதியிடல் பொறுப்புக்கள் நீங்கலாக ஒப்பந்தங்களுக்கான மொத்த தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்தல் அல்லது விஞ்சுகின்றன என்பதை காட்சிப்படுத்தல் வேண்டும் (தொகுதிகள்) (கீழேயுள்ள அட்டவணையில் கூறப்பட்டுள்ள தேவைப்படுத்தல்கள் ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனியாக பிரயோகப்படுத்தப்படக்கூடியவை)

LOT	புதுப்பித்தல் வேலையின் பெயர்	இலங்கை ரூபாவில் (மில்லியன்)
LOT A	Dullewa PMCU	16.75
LOT B	Aluthwewa PMCU	19.96

ஆ. அனுபவம்:

(i) நிகரான அளவு மற்றும் தன்மை: விலைமனுதாரர் (கூட்டுமுயற்சி மற்றும் பங்குடமை, தேவைப்படின்) கடந்த ஐந்து (5) வருடங்களில் வெற்றிகரமாக அல்லது கணிசமானளவு பூர்த்தி செய்யப்பட்ட ஆகக் குறைந்தது உத்தேசிக்கப்பட்ட வேலைகளின் நிகரான ஒரு ஒப்பந்தத்தின் ஒப்பந்தக்காரராக, கூட்டுமுயற்சி பங்காளராக அல்லது உப ஒப்பந்தக்காரராக செயற்பட்டிருப்பதுடன் ஒவ்வொரு ஒப்பந்தத்தின் கீழுள்ள விலைமனுதாரரின் பங்குபெறுதலின் பெறுமதியானது ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனியாக கீழேயுள்ள அட்டவணையில் கூறப்பட்டுள்ளவாறு தேவைப்படுத்தல்களை விஞ்சியிருத்தல் பொருத்தமாகும்.

LOT	புதுப்பித்தல் வேலையின் பெயர்	இலங்கை ரூபாவில் (மில்லியன்)
LOT A	Dullewa PMCU	30.28
LOT B	Aluthwewa PMCU	36.09

(ii) கேள்விதாரரொருவர் பல எண்ணிக்கையான (குறைந்த மதிப்பீடு கணிசமானளவு பதிலிறுக்கக்கூடியது) கேள்விக்கோரல்களுக்கு சமர்ப்பித்தால், கேள்விக்கோரலில் முன்வைத்தவாறு பின்வரும் விரிவான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக கேள்விதாரரின் ஆற்றலின் மதிப்பீடொன்றை கேள்விக்கோரல் மதிப்பீடானது உள்வாங்கப்பட்டிருக்கும்.

வருடாந்த நிர்மாண நிதிப்புரள்வின் சராசரி.
நிதியிடல் மூலவளங்கள்.
ஒதுக்கப்படவுள்ள உபகரணங்கள் மற்றும்
களமிறங்கப்படவுள்ள ஆளணியினர்
தகைமைத் தகவுத்திறனானது விலைமனுக்கோரல் ஆவணத்தில் இன்னும் அதிகமாக விபரிக்கப்பட்டுள்ளது.

5. மேலதிக தகவலைப் பெறுவதற்காகவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிப்பதற்குமாக விலைமனுதாரர் பின்வருபவரை வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

செயற்றிட்ட பெறுகை அலுவலர்,
செயற்றிட்ட அமுல்நடத்தல் பணிமனை,
சுகாதார முறை விரிவாக்கல் செயற்றிட்டம்,
இல.: 106, பள்ளேகம வீதி, அம்பிட்டிய,
கண்டி, இலங்கை.
மின்னஞ்சல்: popiucp@gmail.com
தொலைபேசி: 081-2121712

6. கேள்விக்கோரல் ஆவணங்களை ஆங்கிலத்தில் கொள்வனவு செய்வதற்காக, தகுதியுள்ள கேள்விதாரர் பின்வருவனவற்றை செயற்படுத்தல் வேண்டும்.
   - ஆரம்ப சுகாதார பராமரிப்பு பணிமனையின் புதுப்பித்தலுக்காக கேள்விக்கோரல் ஆவணங்களைக் கோரி மேலேயுள்ள முகவரிக்கு விண்ணப்பமொன்றை சமர்ப்பித்தல்
   - கீழேயுள்ள அட்டவணையில் கூறப்பட்டவாறான (8 ஆம் பந்தியில்) மீளளிக்கப்படாத கட்டணத்தை இலங்கை ரூபாவில் 2024.09.30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக பி.ப. 3 மணி வரையும் செலுத்துதல்.
   - பணக்கொடுப்பனவு முறைமையானது வங்கி வரைவொன்றின் செயற்பாணியில் 0084189233 என்ற கணக்கிலக்கத்திற்கு சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்ட, செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளரின் பெயரில் வழங்கப்பட்டிருத்தல் அல்லது வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் ரொக்கப் பணத்தில் அல்லது இலங்கை வங்கியின் கண்டி, மேற்தரக்கிளை 0084189233 என்ற கணக்கிலக்கத்திற்கு நேரடி வைப்பினூடாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.
7. 2024.09.10 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு பின்வரும் முகவரியில் விலைமனு முன்னோடிக் கூட்டமானது தொழில் வழங்குநரினால் நடாத்தப்படும். இந்த விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு அனைத்து விலைமனுதாரர்களும் சமுகமளிக்குமாறு கண்டிப்பாக அறிவுரை வழங்கப்படுகின்றனர்.

செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள் திணைக்களம் - மத்திய மாகாணம்,
இல. 163, சங்கராஜ மாவத்தை,
கண்டி.

8. உங்கள் விலைமனுவை பின்வரும் முகவரியில் இறுதித் திகதியான 2024.10.01 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக விலைமனுக்கோரல் ஆவணத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு கேள்விப் பிணையொன்றுடன் ஒப்படைக்கவும். கேள்விப் பிணையானது வங்கி உத்தரவாத செயற்பாணியொன்றின் மூலமாக சமர்ப்பிக்கப்படுவதாயின், கேள்விக்கோரல் படிவங்களில் வழங்கப்பட்டவாறான உருமாதிரியை பாவித்து இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் **"The Project Director – Health System Enhancement Project"** என்ற பெயரில் வழங்கப்பட்டதுமானதாகவுமிருத்தல் வேண்டும்.
9.

LOT	புதுப்பித்தல் வேலையின் பெயர்	கேள்விப்பிணைத் தொகை (இ.ரூபாவில்)	மீளளிக்கப்படாத கட்டணம (இ.ரூபாவில்)
LOT A	Dullewa PMCU	560,000.00	8,000.00
LOT B	Aluthwewa PMCU	675,000.00	9,000.00

தாமதமான கேள்விக்கோரல்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலின் இறுதி நேரத்தின் பின்னர் உடனடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

10. விலைமனுக்கள் அவைகளை திறக்கும் திகதியிலிருந்து 120 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும் கேள்விப்பிணையானது கேள்விகளை திறக்கும் திகதியிலிருந்து 148 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்
11. சுகாதார அமைச்சின் சுகாதார முறைமை விரிவாக்கல் செயற்றிட்டம் விலைமனுக்களை தயாரித்தல் அல்லது ஒப்படைத்தலுக்கான எந்தவொரு ஆகுசெலவு அல்லது செலவினங்களுக்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளமாட்டாது.
12. உள்ளூர் விலைமனுதாரர் ஒப்பந்தத்தை பெற்றுக் கொள்ள முன்னர், நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.

செயற்றிட்ட பிரதி பணிப்பாளர்,
சுகாதார முறை விரிவாக்கல் செயற்றிட்டம்,
செயற்றிட்ட அமுல்நடத்தல் பணிமனை,
இல.: 106, பல்லேகம வீதி, அம்பிட்டிய,
கண்டி, இலங்கை.

திகதி: 30.08.2024

கேள்விக்கான அழைப்பு

இலங்கை தேசிய வைத்தியசாலை - கொழும்பு - 10
(சுகாதார அமைச்சு)

மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்தல்

01. 2024.10.02ம் திகதி மு.ப. 10.00 வரை இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் கீழே காணப்படும் மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்காக பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்கப்படும்.

உருப்படி இலக்கம்	உருப்படி	உருப்படி அளவு	தொடர் இல.	மீளளிக்கப்படாத கட்டணம் (ரூ)
01	**Physiotherapy Equipment's**		SG-11/2024/03-ENT	3,000.00
	i. Electrotherapy machine	01		
	ii. Infra- Red Lamp	01		
	iii. Ultrasound Therapy Machine	01		
02	**Surgical Equipment's**		SG-11/2024/09/OPD-T	3,000.00
	i. Multi Monitors	02		
	ii. Defibrillators	01		
	i. Suction Machine Double Jar	01		
	ii. Autoclave Machine	01		
03	**Dose Calibration Machine**	01	SG-11/2024/09-DC	2,000.00
04	**Fluorescence Imaging Device**	02	SG-11/2024/04-FID	2,000.00

02. இலங்கைச் சந்தைக்கு உபகரணங்களை உற்பத்தி செய்து வழங்கும் உற்பத்தியாளர்களால் பெயர் குறிப்பிடப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் மாத்திரம் இக்கேள்வி அழைப்பிற்கு சமுகமளிப்பதற்கு தகைமை பெறுவர்.
03. கேள்வி ஆவணங்களை வாரத்தின் வேலை நாட்களில் 2024.08.30 முதல் 2024.10.01 வரை மு.ப. 9.30 முதல் பி.ப. 3.00 வரை இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு மேலே தரப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி பற்றுச் சீட்டுடன் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.
(தொ.பே.இல : 011 - 2691111 நீடிப்பு - 2314)
04. பொறியிடப்பட்ட கேள்விகள் 2024.10.02 மு.ப. 10.00 இற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டு வந்து ஒப்படைப்பதாயின், இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதம கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் அவை திறக்கப்படும்.
05. மேலதிக தகவல்கள் தேவைப்படின் இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதம கணக்காளரிடம் விசாரித்துப் பெற்றுக் கொள்ளலாம்.
(தொ.பே.இலக்கம் : 011 - 2694595)

தலைவர்,
பிரதேச பெறுகைக் குழு,
இலங்கை தேசிய வைத்தியசாலை,
கொழும்பு - 10

இலங்கை துறைமுக அதிகார சபை

விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

கேள்வி இல.	கேள்வியின் பெயர்	கேள்விப் பிணைத் தொகை (ரூபா)	ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது)	முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம்
CES/FP/04/PT/6611(MAR)	Spares for Yanmar 6HAL - 2 – HTN Two Main Generator Engines of MT Suranimala	35,000.00	1,000.00	10-10-2024 மு.ப. 10.00 மணி
CES/FP/05/PT/6612(MP)	08 Nos. Main Hoist Wire Rope of 30.00MM X 732 M	320,000.00	3,500.00	10-10-2024 மு.ப. 10.00 மணி
CES/FP/06/PT/6613(MP)	Spares for the Terberg Yard Tractors	45,000.00	1,000.00	10-10-2024 மு.ப. 10.00 மணி
CMS/LP/24/PT/05/012	01 No. Air Compressor (1000L/ 12 Bars)	30,000.00	1,000.00	23-09-2024 பி.ப. 1.30 மணி
CMS/LP/24/PT/19/006	62 Nos. Split Type Air Conditioners	200,000.00	3,500.00	23-09-2024 பி.ப. 1.30 மணி
CMS/LP/24/PT/04/060	1440000 – Nos – Food Grade PE Coated Paper Lunch Box	215,000.00	3,500.00	23-09-2024 பி.ப. 1.30 மணி
CMS/LP/24/PT/14/059	01 No. Flexible Coupling Set for Wartsila 4L 20 Main Generator Engines of Dredger Hansakawa	45,000.00	1,000.00	24-09-2024 பி.ப. 1.30 மணி
CMS/LP/24/PT/08/062	Rear Hubs for Terberg Terminal Tractors	48,000.00	1,000.00	24-09-2024 பி.ப. 1.30 மணி
CMS/LP/24/PT/18/052	Spare Parts for Air Conditioning System for Pilot 17	50,000.00	1,000.00	24-09-2024 பி.ப. 1.30 மணி
CMS/LP/24/PT/03/060	24 Nos. of Air Filters for CAT C32 Engines of Launches : Pilot 16,17 and 18	50,000.00	1,000.00	25-09-2024 பி.ப. 1.30 மணி
CMS/LP/24/PT/19/055	22 Nos. Spares for Konecranes TFC 45 HC Reach Stackers	45,000.00	1,000.00	25-09-2024 பி.ப. 1.30 மணி

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை (PCA 03 படிவம்) கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை பிரதான முகாமையாளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2024 ஆகஸ்ட் 30ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள்வள முகாமைத்துவம்),
வழங்கல்கள் பிரிவு,
இலங்கை துறைமுக அதிகார சபை,
இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.

தொலைபேசி எண்கள் : 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638
தொலைநகல் எண் : 2381652, 2470443

தென் மாகாண சபை

2025ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

2025ஆம் வருடத்தில் தென் மாகாண சபையின் அனைத்து அமைச்சுக்கள்/ திணைக்களங்கள்/ நிறுவனங்களுக்குத் தேவையான, பொருட்கள், உபகரணங்கள் மற்றும் சேவைகளை வழங்கல் மற்றும் நிர்மாணத்துறைக்காகப் பதிவு செய்வதற்கு ஆர்வமுள்ள அரச கூட்டுத்தாபனங்கள்/ அரசினால் சுவீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனங்கள்/ தனியார் நிறுவனங்கள்/ வழங்குநர்கள்/ உற்பத்தியாளர்கள்/ விநியோகஸ்தர்கள் மற்றும் நிர்மாண வேலைகளுக்காக ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

01) ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்:

தகைமைகள்:

I) தென் மாகாணத்தில் நிரந்தரப் பதிவுடைய ஒப்பந்தக்காரர்கள் மற்றும் மாகாணத்தில் சொந்த வியாபாரங்கள் அல்லது கிளை நிறுவனங்களை நடாத்திச் செல்லும் ஒப்பந்தக்காரர்கள் இவ்வொப்பந்தங்களின் பொருட்டு பதிவு செய்து கொள்ளலாமென்பதுடன் ''நிர்மாணங்களுக்காக அனைத்து ஒப்பந்தக்காரர்களும், நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை'' (**CIDA**) நிறுவனத்தில் பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும். (விண்ணப்பப் படிவத்துடன் வியாபார பெயர்ப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்)

02) வழங்குநர்களைப் பதிவு செய்தல்

தகைமைகள்:

I) 2024ஆம் வருடத்தில் தென் மாகாண சபை அரச நிறுவனங்களின் பொருட்டு பொருட்கள், உபகரணங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கான வியாபாரங்களை நடாத்திச் செல்லும் வழங்குநர்கள் அதற்காகப் பதிவு செய்து கொள்ளலாமென்பதுடன் அந்த வியாபாரம் பதிவு செய்யப்பட்டதாகவிருத்தல் வேண்டும். (விண்ணப்பப் படிவத்துடன் வியாபாரப் பெயர்ப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்)

II) உங்கள் நிறுவனத்தை நடாத்திச் செல்வதற்கான விஷேட அதிகாரப்பத்திரமொன்று அல்லது அனுமதிப்பத்திரமொன்று இருப்பின், அவ்வதிகாரப் பத்திரம், அனுமதிப்பத்திரம் அல்லது பதிவுச் சான்றிதழை விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

III) மாநகர சபை அதிகார எல்லைக்குள் சிற்றுண்டிச்சாலைகளை நடாத்திக் கொண்டு செல்வதாகவிருந்தால், உணவு கட்டளைச் சட்டத்திற்கமைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக, பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் சான்றிதழும், பிரதேச சபை அதிகார எல்லையினுள் எனின், சுகாதார வைத்திய அதிகாரியின் சான்றிதழும் இருத்தல் வேண்டும். (விண்ணப்பப்படிவத்துடன் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.)

IV) வழங்கல் மற்றும் சேவைக் கட்டளைகளை வழங்குவதற்குத் தேவையான நிதி மற்றும் ஏனைய இயலுமைகள் இருப்பதாக ஆவணச் சாட்சிகளை வழங்குதல் வேண்டும்.

V) வெட் வரி செலுத்துவதற்காகப் பதிவு செய்யப் பெற்றிருப்பின், அது தொடர்பான ஆவணங்களின் பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

VI) தென் மாகாண சபைக்குரித்தான சகல நிறுவனங்களும் இந்த வழங்குநர்களின் பதிவேட்டைப் பயன்படுத்தி பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதால், விண்ணப்பப் படிவத்தை முறையாகப் பூர்த்தி செய்து அனுப்புதல் வேண்டும்.

VII) ஏற்கனவே பதிவு செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மேற்படி சான்றிதழ்களின் பிரதிகளைச் சமர்ப்பிக்கத் தேவையில்லை என்பதுடன், தற்போது வழங்குநர்களாகப் பதிவு செய்துகொள்வதற்கான விண்ணப்பப் படிவம் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை மட்டும் சமர்ப்பித்தால் போதுமானதாகும்.

03) விண்ணப்பித்தல் மற்றும் பதிவு செய்தல்

I) முறையாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2024.08.30ஆம் திகதி முதல் 2024.11.15ஆம் திகதி வரை தென் மாகாணப் பிரதான செயலாளரின் அலுவலகத்திற்கு ஒப்படைத்தல் வேண்டும். ஒரு வியாபாரம்/ஒரு நிறுவனம் ஒரு விண்ணப்பப் படிவத்தை மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், ஒரு விண்ணப்பப் படிவத்தின் மூலம் பல உருப்படிகளுக்காக விண்ணப்பங்களை முன்வைக்கலாம். ஒரு உருப்படிக்கான பதிவுக் கட்டணமாக 300.00 ரூபா வீதம் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அதை "பிரதான செயலாளர், தென் மாகாணம்" என்ற பெயரில் செயலாளரின் அலுவலகத்தின் சிறாப்பருக்கு அல்லது தென் மாகாணத்திலுள்ள ஏதேனும் பிரதேச செயலகத்திற்கு அல்லது தென் மாகாண சபைக்குரித்தான அமைச்சு அல்லது திணைக்களமொன்றிற்குச் செலுத்தி, (தென் மாகாண சபையின் பெயரில் பற்றுச்சீட்டொன்றை வழங்கக்கூடிய அரச மாகாண சபை நிறுவனமொன்றிற்கு) பற்றுச்சீட்டொன்றைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். குறித்த பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். அல்லாவிடில் பதிவுக் கட்டணத்தை பிரதான செயலாளரின் பெயரில் இலங்கை வங்கி, காலி கிளையின் 1587305 எனும் கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்யப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் அனுப்புதல் வேண்டும்.

II) ஒப்பந்தக்காரர்களின் பொருட்டான பதிவுக் கட்டணம் பின்வருமாறு செலுத்தப்படல் வேண்டும்.

அ) ஒப்பந்தம் மற்றும் நிர்மாண வேலைகளுக்குத் தேவையான CIDA பதிவு மற்றும் பதிவுக் கட்டண அளவு:
1. ரூபா 02 மில்லியனுக்குக் குறைந்த ஒப்பந்தங்களுக்காக (C-9 மற்றும் C-8) - ரூபா 1,000.00
2. ரூபா 02 மில்லியனிலிருந்து ரூபா 05 மில்லியன் வரை (C-8 மற்றும் C-7) - ரூபா 1,000.00
3. ரூபா 05 மில்லியனிலிருந்து ரூபா 10 மில்லியன் வரை (C-7 மற்றும் C-6) - ரூபா 2,000.00
4. ரூபா 10 மில்லியனிலிருந்து ரூபா 20 மில்லியன் வரை (C-6 மற்றும் C-5) - ரூபா 2,000.00

ஆ) இதற்குப் புறம்பாக நிர்மாணம் மற்றும் ஒப்பந்த சேவை உருப்படியொன்றின் பொட்டு 300.00 ரூபா வீதம் செலுத்துதல் வேண்டும்.

III) sr.sys.lk எனும் இணைய தளத்திற்குள் பிரவேசித்து 2025ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களின் பதிவு தொடர்பான தகவல்கள் மற்றும் விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம். அல்லது online முறையில் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

IV) விண்ணப்பப் படிவம் மற்றும் கொடுப்பனவு தொடர்பான விபரங்களை (வங்கி வரவுத்துண்டு அல்லது பற்றுச்சீட்டு) 2024.11.15ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் "கணக்காளர் (வழங்கல்) பிரதான செயலாளர் அலுவலகம் எஸ்.எச். தஹநாயக்க மாவத்தை - காலி" என்ற முகவரிக்கு அனுப்பலாம் அல்லது நேரடியாக கணக்காளர், (வழங்கல்) அவர்களிடம் ஒப்படைக்கலாம் அல்லது procurementplan1@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

V) விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் "2025ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

ஏனைய நிபந்தனைகள்

01. பதிவு செய்துள்ள வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்தே விலைக்கோரல்கள் மேற்கொள்ளப்படும் என்பதுடன், தென் மாகாண சபையின் தேவைப்பாடுகளுக்கேற்ப பதிவு செய்யப்படாத வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைகளைக் கோரும் உரிமையை தென் மாகாண பிரதான செயலாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.
02. பதிவுக்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்களைக் கவனத்திற்கொண்டு, வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடம் காணப்படும் இயலுமை மற்றும் தகைமைகளின் அடிப்படையில் மாத்திரம், குறித்த விண்ணப்பதாரரைப் பதிவு செய்யும் உரிமை மற்றும் காரணங்களைத் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமையை தென் மாகாண பிரதான செயலாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.
03. ஏதேனும் வழங்குநர்களின்/ ஒப்பந்தக்காரர்களின் சேவை வழங்கல் திருப்தியற்ற வகையில் பலவீனமாக இருந்தால் அல்லது வழங்கல்/ ஒப்பந்த நடவடிக்கைகளை மேற்கொள்கையில் ஏதேனும் மோசடிகள் அல்லது முறைக்கேடுகள் உறுதிப்படுத்தப்பட்டால் அந்நிறுவனம் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்பட்டு இதன் பின்னர் வழங்குநர்/ ஒப்பந்தக்காரர்களாக ஏற்றுக்கொள்ளப்படாமலிருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம். அதற்கான முழு உரிமையையும் தென் மாகாண பிரதான செயலாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.
04. போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து பொருட்கள் வழங்குதல் அல்லது சேவைகளுக்காக பதிவுகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள் அல்லது நபர்கள் தொடர்பில் கடுமையான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
05. அனைத்து விண்ணப்பதாரர்களினதும் தகைமை, இயலுமை, மற்றும் தகுதிகள் தொடர்பாக பரிசீலனை மேற்கொண்டதன் பின்னர் பதிவுகள் மேற்கொள்ளப்படும் என்பதுடன் ஒவ்வொரு பெறுகை செயற்பாடுகளின் போதும் தகைமைகளைப் பூர்த்தி செய்திராத வழங்குநர்கள் / ஒப்பந்தக்காரர்கள் நிராகரிக்கப்படுவர்.
06. தென் மாகாண சபை நிறுவனத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளும் பெறுகைகளை இலத்திரனியல் பெறுகை முறையின் (E-GP பிரகாரம் செயற்படுவதற்கு எதிர்பார்க்கப்படுவதால் சகல வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களும் 08/2019ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அரச இலத்திரனியல் பெறுகை முறைமையில் (promise.lk) பதிவுசெய்து கொள்ளல் அவசியமாகும். www.promise.lk எனும் இணையதளத்திற்குப் பிரவேசித்து இந்த முறைமைக்காக பதிவு செய்துகொள்ளலாம்.
07. பதிவு செய்யும் நடவடிக்கை தொடர்பாக ஏதேனும் விளக்கம் தேவையெனின் 091-4946368/ 091-4944016 எனும் தொ.பே. இலக்கங்களை தொடர்பு கொண்டு மற்றும் procurementplan1@gmail.com என்ற மின்னஞ்சல் மூலம் விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

சுமித் அலககோன்,
பிரதான செயலாளர்,
பிரதான செயலகம்,
எஸ்.எச். தஹநாயக்க மாவத்தை, காலி.

திகதி: 2024-08-30.

தென் மாகாண சபை

2025ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

